# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 209 ஆனி 09ஆம் நாள் சனிக்கிழமை 23 ஜூன் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## வனஜீவராசிகள் திணைக்களத்திடம் 21,000 ஏக்கர்

*நந்திக்கடலுடன், நாயாறு நீரேரியும் பறிபோகிறது*
*9 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறி*

யாழ்ப்பாணம், ஜூன் 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் நன்னீர் மீன்பிடிக்குரிய நந்திக்கடல் மற்றும் நாயாறு நீரேரிகள் என்பன முழுமையாக வனஜீவராசிகள் திணைக்களத்துக்குச் சொந்தமாக்கப்பட்டுள்ளன. சுமார் 21 ஆயிரத்து 265 ஏக்கர் நிலப் பரப்பு வன ஜீவராசிகள் திணைக்களத்தால் இயற்கை ஒதுக்கிடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இயற்கை ஒதுக்கிடமாக அறிவிக்கப்பட்ட பிரதேசத்தினுள் மனிதர்கள் பிரவேசிப்பது குற்றமாகும்.
இரண்டு நீரேரிகளிலும் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சுமார் 9 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் » 25



## தபால் வழங்கலுக்கு பொலிஸாரின் உதவியை பெறுவதற்கு முடிவு

கொழும்பு, ஜூன் 23
கடிதங்களை வழங்கும் நடவடிக்கைக்குத் தேவையேற்படும் பட்சத்தில் பொலிஸாரின் உதவியைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு தெரிவித் » 06

## நான் இலக்கில்லை சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 23
ஒட்டுசுட்டானில் கிளைமோர் மீட்கப்பட்ட நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனே தாக்குதலாளிகளின் இலக்கு என்று வெளியான தகவல்களை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மறுத்தார்.
அவ்வாறு எனக்கு எந்த அறிவித்தலும் தெரிவிக்கப்படவில்லை. அந்தச் சம்பவத்தின் இலக்கு நான் இல்லை என்று » 06

## கொல்லப்பட்ட சிறுத்தைக்காக கொதித்து எழுகின்றது தெற்கு!

*தர்மம் நிலைகொண்ட நாட்டில் இது வெட்கக்கேடானதாம்*

கொழும்பு, ஜூன் 23
கிளிநொச்சியில் சிறுத்தையைக் கொடூரமாக அடித்துக்கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புபட்ட அனைவரையும் » 06

## சிறுத்தையைக் கொன்றோரை கைது செய்ய மன்று உத்தரவு



கிளிநொச்சி, ஜூன் 23
கிளிநொச்சி, அம்பாள்புரத்தில் நுழைந்த சிறுத்தையை அடித்துக் கொன்று அந்தக் காட்சிகளை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியவர்க » 06

## ஒட்டுசுட்டானில் ஓட்டோவில் 20 கிலோ கிளைமோர் மீட்பு!

- புலிக் கொடி, சீருடையும் மீட்பு
- பொலிஸ் ரோந்தில் சிக்கியதாம்
- சந்தேகநபர்கள் 3 பேர் கைது



முல்லைத்தீவு, ஜூன் 23
விடுதலைப் புலிகள் அமைப்பால் தயாரிக்கப்பட்ட 20 கிலோ எடையுடைய கிளைமோர், அதை இயக்கும் ரிமோட் கருவிகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் வரிச் சீருடை, புலிக்கொடி என்பன ஒட்டுசுட்டானில் மீட்கப்பட்டுள்ளன. அவற்றை முச்சக்கரவண்டியில் கொண்டு சென் » 06

## வானூர்தித் தளத்துக்குத் தேவையான நிலத்தின் அளவறிந்து புதிய அரசிதழ்

*முதலமைச்சர் தலைமையிலான நேற்றைய கூட்டத்தில் முடிவு* » 06

see more news in
newuthayan.com

## கோத்தா வருவாரானால் நாட்டை கடவுள்தான் காப்பற்ற வேண்டும்

*அமைச்சர் நவீன் கவலை*

கொழும்பு, ஜூன் 23
கோத்தபாய ராஜபக்ச அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டால் இலங்கையை கடவுள் தான் காப்பாற்றவேண்டும் என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திசநாயக்க தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச போட்டியிட முடியாது. அவர் அமெரிக்க குடிமகன் என்பதால், அதை அவர் கைவிட்டால் மாத்திரமே தேர்தலில் போட்டியிடமுடியும். » 06

## வீட்டுக்குள் புகுந்த கும்பல் தாக்குதல் நடத்தி மிரட்டல்

*நாயன்மார்கட்டில் சம்பவம்* » 23

## கொழும்பைச் சாடும் விக்கி அவ்வாறே நடப்பது சரியா?

*வலி.வடக்கு தவிசாளர் கேள்வி*

யாழ்ப்பாணம், ஜூன் 23
கொழும்பு அரசு உங்களுடன் ஆலோசிக்காமல் செயற்படுவதை மாபெரும் தவறு என்று சுட்டிக்காட்டும் நீங்கள், உள்ளூராட்சி மன்றத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பறிக்கும் வகையி » 23

## ஞானசார தேரருக்குப் பிணை வெளிநாடுகள் செல்லத் தடை

கொழும்பு, ஜூன் 23
கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொடவை, ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் வைத்து அச்சுறுத்தியமை தொடர்பில் ஓராண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அதனை 6 மாதத் » 06

## நிபந்தனைகள் மீறப்பட்டால் அனுமதிப் பத்திரங்கள் ரத்து

*கூட்டமைப்புடனான சந்திப்பில் மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 23
கடலட்டை பிடிப்பதற்கு அனுமதி பெற்றுள்ள நிறுவனங்கள், விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டால், அவற்றின் அனுமதி உடனடியாக இல்லாமல் செய்யப்படும் என்று மீன்பிடி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.
கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடா » 06

## ராணுவத்துடன் நிகழ்வில் பங்கேற்றதால் சலசலப்பு

*சபையின் தீர்மானத்தை மீறிவிட்டனர் எனத் தர்க்கம்*

யாழ்ப்பாணம், ஜூன் 23
வடக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பண்ணையில் நடந்த மர நடுகை விழாவில் மாநகர முதல்வர் உட்படச் சிலர் கலந்து கொண்டமை சபையின் தீர்மானத்தை மீறும் செயல் என்று யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வி.மணிவண்ணன் » 24

## அரசமைப்பு உருவாக்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் நோர்வே

கொழும்பு, ஜூன் 23
புதிய அரசமைப்பு உருவாக்க விடயம் உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமை தொடர்பில் அரசுக்கு அழுத்தம் கொடுப்போம் என்று நோர்வேயின் அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோலிச் ஹொல்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உறுதியளித்துள் » 06

## யாழ்.நகரப் பகுதிகளில் இரவுவேளை பெண்கள்

*யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வில் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ்ப்பாணம், மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இரவு வேளைகளில் பெண்கள் வாகனங்களில் மாறி மாறி அழைத்துச் செல்லப்படுகின்றனர். அதைப் பொலிஸாரும் கண்டும் காணாதது போன்று உள்ளனர் என்று மாநகர சபையின் பெண் உறுப் » 06

## அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களை இடிப்போம்

*ஆர்னோல்ட் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தைச் சுற்றி அனுமதி பெறாமல் சட்ட விரோதமான முறையில் நீண்டகாலமாக உள்ள கடைகள் எதிர்வரும் 14 நாள்களில் உடைத்து அகற்றப்படும் என்று மாநகர முதல்வர் இ. ஆர்னோல்ட் தெரிவித்தார்.
சபையின் அமர்வு முதல்வர் தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
சபையின் எந்தவித அனுமதியும் இல்லாமல் பல கடைகள் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தைச் சுற்றி உள்ளன. அதன் வருமா » 23



# தபால் பணியாளர்கள் நேற்று உணவு ஒறுப்பு

## தீர்வுவரும்வரைபோராட்டம் தொடரும்என அறிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 23**

**நாடளாவிய ரீதியில் தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுவரும் தபால் பணியாளர்களுக்கு ஆதரவாக நேற்று வடக்கு மாகாண ஒன்றிணைந்த தொழிற்சங்க முன்னணியால் ஒருநாள் அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. யாழ்ப்பாணம் தலைமை தபாலகம் முன்பாகப் போராட்டம் நடத்தப்பட்டது.**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 23 தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடுசெய்திருந்தன.

பெரும்நெருக்கடிகளுக்குமுகம் கொடுத்து, நெருக்கடிகளில் இருந்து மீண்டு வினைத் திறனாகமக்களுக்குசேவைவழங்கும் நிறுவனமாகச் செயற்படுவதற்கு திணைக்களத்தின் முகாமைத்துவத்துடன் இணைந்து செயற்படத்திட்டமிட்டிருந்தோம். அதற்கானவாய்ப்புக்கள்கிடைக்கவில்லை.

ஒருசிலசந்தர்ப்பங்களில்தீர்வாலோசனைகள் முன்வைக்கப்பட்டபோதிலும் ஏதோவொரு வகையில் காரணங்கள் முன்வைக்கப்பட்டு அந்த ஆலோசனைகளை நிறைவேற்று வதற்கான வாய்ப்புக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இந்தநெருக்கடிகள்மூலம்ஊழியர் தொழில் நிரந்தர நியமனம் மற்றும்பதவிஉயர்வுவழங்கல் போன்றவற்றின் மூலம் ஒட்டு மொத்தஊழியர்நிர்வாகம்குழப்பத்துக்கு மேல் குழப்பத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்தச் செயற்பாட்டு முறைமை மூலம் ஊழியர்களின் உரிமைகள் முழுமையாகவும், பகுதியாகவும்சுரண்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

அத்தோடு காணப்படும் ஆள் சேர்ப்பு முறைமை மூலம் திணைக்களத்தில் இதுவரை காணப்படும் பலவித செயற்பாட்டு நடவடிக்கை மூலம் பெரும் நெருக்கடியான சூழ்நிலைகள் தோன்றியுள்ளன.

ஊழியர்களின் உரிமைகளை உரித்தாக்கிகொள்வதற்கும்நிறுவனத்தை பாதுகாப்பதற்கும் தொடர் வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதற்கு எமது முன்னணிக்குரிய தொழிற்சங்கம் ஏகமனதாகத்தீர்மானித்துள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, தபால்ஊழியர்களின் போராட்டத்தால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

மாதாந்த உதவிப் பணம், நோய்க் கொடுப்பனவு, முதியோர் மாற்றுத் திறனாளிகளுக்கான கொடுப்பனவு என்பன தபால்நிலையங்கள் ஊடாகவே வழங்கப்பட்டு வந்தன. மாத நடுப்பகுதியில் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. தற்போது பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்படுவதால் அவர்கள் தமது உதவிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியாது சிரமங்களைஎதிர்கொண்டுவருகின்றனர். (ற-17,113,135,110)

## குழந்தை மீது தாக்குதல் 3 சந்தேகநபர்கள் கைது

நுவரெலியா,ஜீன்.23

பொகவந்தலாவ கொட்டியாகலைக்கு அருகாமையில் ஒன்றரைமாதக் குழந்தை ஒன்று தாக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. இதுதொடர்பில்மூன்றுசந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் மோதலாக மாறியுள்ளது.

இதில் குழந்தையின் தாயாருக்கு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தவறுதலாக குழந்தை மீது மேற்கொள்ளப்பட்டதுஎனக்கூறப்பட்டது.கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற,ரி4)

## குளிக்கச் சென்ற சிறுவன் மாயம்

கொழும்பு,ஜீன்.23

அம்பலந்தொட ரிதியகம வளவை ஆற்றில் குளிக்கச் சென்ற சிறுவன் ஒருவர் காணாமல் போயுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

ரிதியகம, பொலியர்வத்த பகுதியைச் சேர்ந்த 10 வயதுடைய சிறுவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சிறுவனின் பெற்றோர் அம்பலந்தொட பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்துபொலிஸார்மற்றும்பொதுமக்கள் ஒன்றிணைந்துசிறுவனைத்தேடும்பணியில் ஈடுபட்டனர். (ற,ரி4)

## 16 ஆவது ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம்,ஜீன் 23

யாழ்ப்பாணம் சக்தி கலாசார அபிவிருத்தி மன்றத்தின் 16 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "நல்ல பிள்ளைகளை உருவாக்குவோம்"என்ற தொனிப்பொருளிலான நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

சமூகவியல், ஆன்மீக நாட்டம், நேரமுகாமைத்துவம், சுயகற்றல் மூலம் அடைவு மட்டத்தை அடைதல், வீட்டு நிர்வாகச் செயற்பாட்டில் பங்கேற்றல் போன்ற விடயங்கள் உள்வாங்கி நல்லூர் பிரதேசங்களுக்குட்பட்ட 50 பிள்ளைகளைத் தெரிவு செய்து மதிப்பளித்தல், உழைப்பாளரை இழந்த அடைவுமட்டத்தை அடைய வைத்த தாய்மாருக்கு "வெற்றித்திலகம்" விருது வழங்கல், கலைநிகழ்வுகள் (அறநெறிமாணவர்)கலாசார சீருடைகளோடு அரியாலை சரஸ்வதி அம்பாள் ஆலயத்தில்இருந்து நாயன் மார்கட்டு நாயன்மார் குருபூசை மடம் வரை ஊர்வலமாக அழைத்து வருதல் போன்றநிகழ்வுகள்இடம் பெறவுள்ளன.


அத்துடன் பேச்சு, பண்ணிசை, ஓவியம், அறிவுக்களஞ்சியம், அறிவிப்பாளர் போட்டி என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாயன்மார் குருபூசைமடத்தில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## திடீர் என்று பற்றி எரிந்தது ஆலமரம்

திருகோணமலை,ஜீன்.23

திருகோணமலைமுள்ளிப்பொத்தானையில் வீதியோரத்தில்நின்றபழமைவாய்ந்த பெரிய ஆலமரமொன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. இந்தச் சம்வம்நேற்றுஇடம்பெற்றது. இதனால்இந்தப்பகுதியில்பரபரப்புஏற்பட்டது. இந்தத் தீயை தீயணைப்புப் படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் இதனால் எந்தவிதச் சேதங்களும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற,ரி4)



காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றுள்ளது. இதில் பெரியவர்களுடன், சிறுவர்களும்இணைந்துதீயில்இறங்கியது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. (ற.ரி4)

# ஆசியாவின் பிரதான நுழைவாயிலாக புறக்கோட்டை போக்குவரத்து நிலையம்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க

கொழும்பு,ஜீன்23

புறக்கோட்டை பேருந்து போக்குவரத்து மத்திய நிலையத்தை சூழலுக்கு ஏற்றவகையில் கட்டியெழுப்பி ஆசியாவின் பிரதான நுழைவாயிலாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என பாரிய நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

புறக்கோட்டை பல்வகை பேருந்து போக்குவரத்து மத்திய நிலையத்தின் சுழற்சி முறையை மேற்பார்வைசெய்யும் செயற்பாட்டு நிகழ்வு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புறக்கோட்டை பிரதேசத்தில் பிரதான பல்வகை பேருந்து போக்குவரத்து மத்திய நிலையத்தில் சுழற்சி முறையை மேற்பார்வை செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றோம்.

கொட்டாவையில் பல்வகை பேருந்து போக்குவரத்து மத்திய நிலையம் ஒன்றை அமைப்பதுடன் நாட்டின் போக்குவரத்துத் துறைக்கு இணையத்தினூடாகப் பயணங்களை மேற்கொள்ள முடியுமான வசதிகள் உடைய நவீன மத்திய நிலையம் ஒன்று அதனூடாகக் கட்டப்படும். பொதுப் போக்குவரத்தை எதிர் கால உலகுக்கு பொருத்தமான முறையில் உறுதிப்படுத்துவதே எமது நோக்கமாகும். அதற்காக புறக் கோட்டை பல்வகை பேருந்து போக்குவரத்து மத்திய நிலையமே பிரதான போக்குவரத்து மத்திய நிலையமாக இருக்கும்.

அது கொழும்புக்கு, இலங்கைக்கு மாத்திரமல்ல, தெற்காசியாவுக்கு, இந்து சமுத்திரத்துக்கே பிரதான நுழைவாயிலாக மாற்றமடையச்செய்வதே எமது நோக்கமாகும்.

பல்வேறு வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க, பல்வேறு நிறுவனங்களை நடத்தும் அனைவர் தொடர்பிலும் முறையான சமூக நற்புறவுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சூழலுக்கு நட்புறவாக கட்டியெழுப்பவும் நாங்கள் செயற்படுவோம் -என்றார். (ற,ரி2,31)



## அரச தலைவர் தலைமையில் அரச இசை விருதுவிழா

கொழும்பு, ஜூன்23

அரச இசை விருது விழா 2018 அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில்நேற்றுமுன்தினம் கொழும்பு தாமரைத்தடாக கலையரங்கில் இடம்பெற்றது.

அரச தலைவர் ஊடகப் பிரிவுஅனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இசைக் கலைஞர்களின் சேவையைப்பாராட்டிஅரச மட்டத்தில் மதிப்பளிக்கும் வகையில் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இலங்கைகலைப்பேரவையும் இணைந்து வருடாந்தம் ஏற்பாடு செய்துவரும் அரச இசை விருது விழா இம்முறை ஆறாவது தடவையாக இடம்பெற்றுள்ளது.

இசைத்துறைக்குப் பங்களிப்புச்செய்தஇசைக்கலைஞர்களை பாராட்டி அரச தலைவரால், விருதுகள் வழங்கிவைக்கப்பட்டன.

அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, அரச இசை ஆலோசனைச்சபையின்தலைவர் சமந்த ஹேரத் ஆகியோர் உள்ளிட்ட பிரமுகர்களும் கலைஞர்களும் நிகழ்வில் பங்குபற்றினர். (ந.ரி2)

# ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க ஓய்வுபெற்றவர்களுக்கு நியமனம்

### அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன்23

**தமிழ் மொழிமூலமான பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஒய்வுபெற்ற ஆசிரியர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் சபையில் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில்நேற்றுமுன்தினம் வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசான் விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தின் நிவத்திகல கல்வி கோட்டத்தில் தேல தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக் குறைநிலவுகின்றது. அதனைநிவர்த்தி செய்ய நடவடிக்கை உள்ளதா? அத்துடன் பொதுவாக நாடளாவிய ரீதியிலும் தமிழ் மொழிமூலமான பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறை உள்ளதாக ஹேசான் விதானகே கேள்வி எழுப்பினார்.

இதனையடுத்து பதிலளித்த கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம்.

குறித்த பாடசாலையின் ஆசிரியர் பற்றாகுறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இரத்தினபுரி மாவட்டத்தில் மாத்திரமின்றி நாடளாவியரீதியில் தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாகுறை நிலவுகின்றது. பொதுவாக வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்களே அதிகளவில் ஆசிரிய சேவையில் ஈடுப்பட்டுவருகின்றனர்.

ஏனைய பகுதிகளில் பெரும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஒய்வு பெற்றுள்ளஆசிரியர்களைமீண்டும்சேவையில் இணைத்துக் கொள்ள நாம் திட்டமிட்டுள்ளோம். அதனைத்தவிர வேறு வழியில்லை. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தோரையும்நாம்சேவையில் இணைத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். இனிவரும்காலங்களில் இருக்கும் அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். (ந.ரி2,61)

## நிலைமையை விளங்கி பசில் நடக்க வேண்டும்

### டிலான் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை நீக்கிக் கொண்டு பொது எதிரணியுடன் இணைந்து செயற்படுவது சாத்தியமற்ற விடயமாகும். மகிந்த ராஜபக்ச, உள்ளிட்ட பல பொது எதிரணியின் உறுப்பினர்கள் இன்றும் சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களாகவே உள்ளனர். அடிப்படை நிலமையைப்புரிந்துகொண்டு பசில் ராஜபக்ச கருத்துக்களை வெளியிடவேண்டும்.

இவ்வாறு நாடளுமன்ற உறுப்பினர்டிலான்பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திலங்கசுமதிபாலவின்அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர்சந்திப்பின்போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்துக்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தராஜபக்சஅரசதலைவர்வேட்பாளராகப் போட்டியிடமுடியாது. ஆனால்அவரது பரிந்துரையின் பேரில் போட்டியிடுபவர் அமோக வெற்றி பெறுவார்.

பொது எதிரணி என்பது தனிப்பட்ட ஒரு கட்சியல்ல. கூட்டிணைந்த எதிர்க்கட்சியாகவேகாணப்படுகின்றது என்ற விடயத்தை பொது எதிரணியின் உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையைத் துறந்து விட்டுப் பொது எதிரணியினருடன் இணைய வேண்டும்என்றஅவசியம் கிடையாது. முன்னாள்அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட பல உறுப்பினர்கள் இன்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்உறுப்பினர்களாகவேஅங்கம்வகிக்கின்றனர்.

கூட்டரசில் ஐக்கிய தேசிய கட்சியின் முறையற்ற நிர்வாகத்தின்காரணமாகநாட்டில் அனைத்துத் துறைகளும் இன்று பலவீனமடைந்துகாணப்படுகின்றன.

டிசெம்பர் மாதம் மாகாண சபைதேர்தலைநடத்தஉத்தேசித்திருந்தாலும் அரசு அதை ஒரு போதும் நடத்தாது. ஒரு வேளை தேர்தல் இடம் பெற்றால் தேர்தல் பெறுபேறுகள் ஐக்கிய தேசிய கட்சிக்குப் பெரும் பதிலடியாகக் காணப்படும்.

பொது எதிரணியின் பொது வேட்பாளராக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைக் களமிறக்க வேண்டும் என்பது நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாக காணப்படுகின்றது.

இருப்பினும்அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் அதற்குத் தடையாக உள்ளது. ஆனால் மக்களின் ஆதரவுடன் இவர் பிரதமராகமுடியும்.

நாட்டுமக்கள்அனைவரின் வாக்குகளை பெற்று வெற்றி பெறும் நபரையே மகிந்த பரிந்துரை செய்வார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின்கீழ்நாடும், மகிந்தராஜபக்சவின் நிர்வாகத்தின் கீழ் நாடாளுமன்றமும்செயற்படுமாயின்சிறந்த மாறுபட்ட அரசு தோற்றம் பெறும். நடக்கவுள்ள அரச தலைவர் தேர்தலில் பொது எதிரணியின் பொது வேட்பாளர் மகிந்தவின் ஆதரவுடன் வெற்றிபெறுவார். என்றார். (ந-31)

## நாட்டுக்கு குறைந்த விலைப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தடை

கொழும்பு, ஜூன்23

நாட்டிற்கு குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களை நிறுத்துவதற்காக புதிய சட்டம் நடைபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பண்டாரகம மில்லனிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தலைமை அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

இலங்கையின் உற்பத்தித்துறை நவீனமயமாகியுள்ளது. இது 1977 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் சாத்தியப்பட்டுள்ளது.

பலர் திறந்த பொருளாதாரக் கொர்ள்கைக்கு அஞ்சினர்.

எனினும் தற்போது இலங்கையின் உற்பத்திகள் பன்னாட்டு, உற்பத்திகளுடன் போட்டியிடும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் தரம்குறித்த சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் இலங்கைக்கு தரம் அற்ற விலைகுறைந்த பொருள்களை இறக்குமதி செய்வது தடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தொழில்துறையைப் பாதுகாக்கும் நோக்கிலேயே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. என்பதை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும் என்றார். (ந.ரி2)

## ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு.ஜூன்.23

மட்டக்களப்பு கல்லடி பகுதிலுள்ள வாவியில் ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது. 30 வயது மதிக்கத்தக்க இளைஞனே சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மீனவர்களினால் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே சடலம் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

## வரி தொடர்பில் குழப்ப நிலை நிதி அமைச்சுக்கு அறிவுரை

வரி தொடர்பில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமையை தீர்க்க தாம் நிதி அமைச்சுக்கு அறிவுறுத்தி இருப்பதாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

பொரலஸ்கமுவையில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். புதிய வரி அறவீட்டு நடைமுறை தொடர்பில் தற்போதும் பிரச்சினைகள் எழுப்பப்படுகின்றன.

குறைபாடுள்ள விடயங்களை தீர்க்க தாம் நிதி அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இதேவேளை 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் ரூபாகளில் கடன்களைப் பெற்ற இலங்கை அதன் பின்னர் டொலர்களில் கடன்களைப் பெற்றுள்ளது.

டொலர்களின் விலை அதிகரிக்கும்போது. கடன் அளவும் அதிகரிப்பதே தற்போதுள்ள பிரச்சினை என்றும் தலைமை அமைச்சர் கூறியுள்ளார். (ந.ரி2)

விளம்பி வருஷ வீரமாகாளியின் சிறப்பம்சம்




தங்கரதமேறி வீரமாகாளி வருகிறாள்

நமது வீரமாகாளி வாரீர் பாரீர்

அலங்கார ரூபிணியாய் அமர்ந்ததேவி
அம்பலத்து ஆடி மகிழ் அன்புத் தேவி
தலம் காத்து வண்ணைநகர் தங்கு தேவி
தருமத்தின் தாய் தந்தையான தேவி
குலம் கூடி கும்பிட்டு குளிர்த்தியாட்ட
கோணாமல் முகம் காட்டி அருளும் தேவி
நலம் காத்து நாம் வாழ நல்கும் தேவி
நமது வீரமாகாளியம்மா வாரீர் பாரீர்

ஆக்கியோன் கலாபூஷணம் குடாநீரூரான்



[இன்று (23.06.2018) சனிக்கிழமை
வண்ணை வீரமாகாளியம்பாளின் 20 ஆம் திருவிழா]
தங்கரதமேறி வருகிறாள்,அன்னதானம் வழங்கப்படும்.

## வைக்கோலில் பழுத்த மாம்பழங்களுக்கு அதிக கிராக்கி

யாழ்ப்பாணம்,ஜீன் 23
யாழ்ப்பாணத்தில்வைக்கோலில் பழுக்கவைத்தமாம்பழங்களுக்கு அதிககிராக்கி ஏற்பட்டுள்ளன.
கூடுதலாக நுகர்வோர் இயற்கையான வைக்கேரலில் வைத்த மாம்பழங்களைவாங்கிச்செல்வதில் அதிக அக்கறை காட்டியுள்ளனர். இந்த மாம்பழங்கள் கூடுதலாகச் சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் விற்கப்பட்டு வருகின்றன. (17)

## முன்னைய ஆட்சியால் இழந்த வருமானம் தொடர்பில் ஆய்வு

# ஒருமாதத்தில் அறிக்கையிட யாழ். மாநகர சபையில் முடிவு

யாழ்ப்பாணம், ஜீன் 23
யாழ்ப்பாண மாநகர சபையில் முன்னைய நிர்வாகக் காலத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகள் காரணமாகச் சபைக்கு ஏற்பட்ட வருமான இழப்புக்கள் தொடர்பில் ஒரு மாதத்துக்குள் ஆய்வுசெய்து அறிக்கைசமர்ப்பிக்கவேண்டும் மாநகரசபையில்நேற்றுத்தீர்மானிக்கப்பட்டது.
சபையை ஆட்சி செய்த ஓர் கட்சியினர் தமது கட்சி சார் அமைப்புகளுக்கு இரு கட்டடத்தை வழங்கியமை, மாநகர சபையின் தாய் சேய் நிலையக் கட்டடத்தை பொலிஸ் புலனாய்வாளர்களுக்கு இலவசமாக வழங்கிவிட்டு அந்தக்கட்டடத்தில் இயங்கிய ஆரம்பசுகாதார நிலையங்களைசபைநிதியில்வாடகைக்குவீடு எடுத்து இயங்க வைத்தனர் என்பன போன்ற காரணத்தால் சபைக்கு ஏற்பட்டநட்டம்தொடர்பில் விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை கடந்த அமர்வில் தீர்மானமாகச் சமர்ப்பிக்கப்பட்டது.
நேற்றுநடந்தஅமர்வில்அதுதொடர்பாகஉறுப்பினர் லோகதயாளன் கேள்வியெழுப்பினர்.
இந்த விடயம் வழிமொழியப்பட்டபோதும் தீர்மானமாக நிறைவேற்றப்படவில்லை என உறுப்பினர்ரெமிடியஸ் தெரிவித்தார்.
கட்டடத்தில் புலனாய்வாளர்கள் இருக்கவில்லை எனத் தெரிவித்திருந்தமை பொய் யென நிரூபிக்கும் சான்று ஆவணம் உள்ளதால் அவ்வாறு சபைகளின் சொத்துக்கள் தவறாகக் கையாண்டமைக்குக் கண்டிப்பாக விசாரணை இடம்பெறவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. அந்தக் கட்டடத்தில் புலனாய்வாளர்களே தங்கியிருந்தனர் என்பதற்கான ஆதாரமாக யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வழங்கிய கடிதத்தை உறுப்பினர் சபையில் வாசித்தார்.
இந்த விடயம் தொடர்பில் உடனடியாகக் குழு அமைத்து விசாரணை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை எதிர்வரும் ஒரு மாத காலத்தில் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் என்றுமாநகரமுதல்வர்ஆர்னோல்ட்தெரிவித்தார். (ந-21,105)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜீன் 23
யாழ்ப்பாணம் நாவற்குழி மகா வித்தியாலயத்தின்பழையமாணவர்சங்கப்பொதுக்கூட்டம்பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நாளைஞாயிற்றுக்கிழமைகாலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
அனைத்துப்பழைய மாணவர்களையும்கூட்டத்திற்குசமூகமளிக்குமாறு பாடசாலை அதிபர் பவளகுமாரன்தெரிவித்துள்ளார். (133)

◆◆◆◆

யாழ்ப்பாணம்,ஜீன் 23
யாழ்ப்பாணம் வட்டு இந்துக் கல்லூரி சித்தன்கேணி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் கல்லூரியின் வள்ளியம்மை மண்டபத்தில்நாளைஞாயிற்றுக்கிழமைகாலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.
அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது சமூகம் தந்து ஒத்துழைப்பு வழங்குமாறு பாடசாலை அதிபர் எஸ்.தனன்சயன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சாவகச்சேரியில் வீடு புகுந்து

# பெண்களைத்தாக்கி நகைகள்கொள்ளை

சாவகச்சேரி, ஜூன் 23
**நள்ளிரவு வேளையில் வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த சிறுவன் மற்றும் பெண்களைத் தாக்கிவிட்டு அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளை அபகரித்துச் சென்றனர்.**

இந்தச்சம்பவம்சாவகச்சேரி டச் வீதியில்நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றது.
அயலில் உள்ள ஆலய இரவுத் திருவிழாவுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய பின்னர் உறங்கினர். சிறிது நேரத்தில் கதவைக் காலால் உதைந்து உட்புகுந்த திருடர்கள் சிறுவனைக் கொட்டனால் தாக்கியுள்ளனர்.
அதனைத் தடுக்கவந்த இரு பெண்களையும் தாக்கியுள்ளனர்.
பின்னர் அவர்கள் அணிந்திருந்ததங்கநகைகளைஅபகரித்துச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸார்விசாரணை நடத்துகின்றனர்.
நேற்றுமுன்தினம் மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் வீடு புகுந்த கொள்ளையர் நகைகள் உட்பட சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களையும், குறிப்பிட்ட தொகைப்பணத்தையும் கொள்ளையடித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது. (4-9)

## வீடு புகுந்தோரில் ஒருவர் மரத்தில் கட்டிக் கவனிப்பு

தென்மராட்சி, ஜுன் 23
வீடு புகுந்து தாக்கியவர்களை வீட்டிலிருந்தவர்கள் மடக்கிப் பிடித்துமரத்தில்கட்டிவைத்துப் பொலிஸாரிடம்ஒப்படைத்தனர் இந்தச் சம்பவம் கெற்பேலி மேற்கில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.
மது போதையில் வந்த மூவர் வீட்டுக்குள் படுத்திருந்த 21 வயது இளைஞனைத் தாக்கியுள்ளனர். இளைஞனின் அலறல்சத்தம்கேட்டுஎழுந்துவந்த வீட்டிலிருந்தோர் வந்தவர்களைத் தாக்கினர்.
இருவர் தப்பியோடிவிட ஒருவரைப் பிடித்து மரத்தில் கட்டி வைத்துப்பொலிஸார்வந்ததும் கையளித்தனர்.
தாக்குதலின்போது காயமடைந்தவர் அதே இடத்தைச் சேர்ந்தஇளைஞன்என்றுதெரிவிக்கப்பட்டது. அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (4-9)

## பாலர் விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜீன் 23
யாழ்ப்பாணம் உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் விளையாட்டு நிகழ்வு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மைதானத்தில் நாளை ஞாயிற்றுகிழமை மதியம் 1.30 மணிக்கு மன்றத் தலைவர்தி.தியாகச்சந்திரன்தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்தநிகழ்வில்முதன்மைவிருந்தினர்களாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சிறப்பு விரிவுரையாளர்களான இரத்தினம்விஜயகுமாரன், சுனித்தா விஜயகுமாரன் ஆகியோருடன் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயம் ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் பாரதி சிவன்சேய் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## குளிர்த்திப் பொங்கல்

சாவகச்சேரி, ஜீன் 23
யாழ்ப்பாணம்சாவகச்சேரிப்பெரியமாவடி உழுத்தம்புலம் விநாயகர் ஆலய வருடாந்த குளிர்த்திப் பொங்கல் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்கிழமை இரவு இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (9)

## உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை

யாழ்ப்பாணம், ஜீன் 23
யாழ்ப்பாண மாநகரசபைஉறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது என்று சபை முதல்வர் இ.ஆர்னோல்ட்தெரிவித்தார்.
சபையின்அமர்வு முதல்வர் தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த அமர்விலேயே அவர் இவ்வாறுதெரிவித்தார்.
அவர்மேலும்தெரிவித்ததாவது.
சபையின் உறுப்பினர்கள் தம்மை அடையாளப் படுத்தி சமூகத்துடன் இணைந்து வேலை செய்கின்றனர். அவர்கள் பல்வேறு தரப்பினரைச் சந்திக்க வேண்டியுள்ளது. தம்மை அடையாளப் படுத்த வேண்டிய தேவை உள்ளது. ஆகவே அனைத்து உறுப்பினர்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. அத்துடன் சிறப்புக் குழுக்கள் தமது வேலைகளை இலகுவாக மேற்கொள்ளவதற்கு தம்மை அடையாள படுத்துவது அவசியம். ஆகவே சபையில் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு உறுப்பினர்களுக்கு அவர்களின்குழுச் செயற்படும் கால எல்லை குறிப்பிட்ட அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது என்றார். அடையாள அட்டைக்கான ஒளிப்படங்கள் சபை அமர்வில் நேற்றுஎடுக்கப்பட்டன. (21.7)

# முத்திரை வரிப்பணத்தில் அபிவிருத்திப் பணிகள்

## யாழ்ப்பாண மாநகரத்தில் இடம்பெறவுள்ளன

யாழ்ப்பாணம், ஜீன் 23
யாழ்ப்பாண மாநகர சபைக்குக் கிடைத்த முத்திரை வரிப் பணத்தில்27வட்டாரங்களிலும்உள்ள வீதிகள் சீரமைக்கப்பட வுள்ளனஎன்றுமாநகரமுதல்வர் இ.ஆர்னோல்ட் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம்மாநகரசபையின் அமர்வுமுதல்வர் தலைமையில் சபைமண்டபத்தில் நேற்றுநடைபெற்றது. இந்த அமர்விலேயே அவர் இவ்வாறுதெரிவித்தார்.
அவர் மேலும்தெரிவித்ததாவது:
வருடாந்த முத்திரை வரியாக சபைக்கு 65 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது. இதில் 54மில்லியனில் வட்டாரங்களுக்குத் தேவையான பல்வேறு அபிவிருத்திப் பணிகள் நடைபெறவுள்ளன. நூலகம், ஆயுள்வேதமருத்துவனை, சனசமூக நிலையம் போன்றபல்வேறு பொதுமக்கள் பயன்பாட்டு இடங்கள் சீரமைக்கப்படவுள்ளன. இதில் மாநகர சபைக்குட்பட்ட 27 வட்டாரங்களும்தலா ஒருமில்லியன் வீதம் வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன. அத்துடன் தலாஐந்து இலட்சம் ரூபாவில் ஒவ்வொரு வட்டாரத்திலும் தெருமின்விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. ஆகவேவட்டாரஉறுப்பினர்கள் இதற்கான முன்மொழிவுகளை சபையில் சமர்ப்பிக்க முடியும் என்றார். (21,7)

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம்,ஜீன் 23
யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம்விளையாட்டுநிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பாடசாலைமைதானத்தில்நடைபெறவுள்ளது எனப் பாடசாலையின் அதிபர்தெரிவித்துள்ளார்.

# யோகேஸ்வரியால் சபையில் குழப்பம்

யாழ்ப்பாணம்,ஜீன் 23
யாழ்ப்பாண மாநகர சபைக்குக் கிடைத்த முத்திரை வரிப் பணத்தில் 27வட்டாரங்களிலும்உள்ளவீதிகள் சீரமைக்கப்படவுள்ளதாக முதல்வர் இ. ஆர்னோல்ட் தெரிவித்தநிலையில் சபையின் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரியால் குழப்பம் ஏற்பட்டது.
சபையின் 27 வட்டாரங்களும் தலா ஒரு மில்லியன் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டு வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன எனமுதல்வர்தெரிவித்தார். ஆனால் யோகேஸ்வரி அந்த நிதியை வட்டாரங்களுக்கு அன்றி உறுப்பினர்களுக்கு ஒதுக்குமாறு சபையில் குழப்பம்விளைவித்தார்.
எனினும் சபையின் ஏனைய உறுப்பினரின் வாதத்தின்பின்னர் வட்டார ரீதியாக மாத்திரமே அபிவிருத்திக்கு வழங்கப்படும் என்று முதல்வர் தெரிவித்தார். (21.7)

## 20 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர்

யாழ்ப்பாணம்கரவெட்டிசுகாதாரவைத்தியஅதிகாரிப்பிரிவில் இந்த மாதத்தில் பரவலாக 20 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
உடுப்பிட்டி. இமையாணன்பகுதிகளில்டெங்குநோய் இனங்காணப்பட்டு அவர்கள் வதியும் பகுதிகளில் மேலும் டெங்கு நோய்பரவாமல்தடுப்பதற்கானநடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.
தடுப்பு நடவடிக்கைகளில் ஒரு அம்சமாகப் புகையூட்டல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் மக்கள் மத்தியில் டெங்கு நோய்த் தாக்கம்தொடர்பிலானவிழிப்புணர்வும்ஏற்படுத்தப்பட்டுவருகின்றன. (173)

## தென்னாபிரிக்கத்தூதுவர் இன்று யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜீன் 23
தென்னாபிரிக்கா நாட்டின் தூதுவர் இன்று சனிக்கிழமையாழ்ப்பாணம்வருகைதரவுள்ளார்.
இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இடம்பெறும் நிகழ்வில் அவர் தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவின் நினைவுப் பேருரையொன்றை ஆற்றவுள்ளார் என்று மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் தெரிவித்தார். (21,7)

### கிராமிய உட்கட்டமைப்பு

## அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் தெரிவான பிரதேசசெயலகங்கள்

தென்மராட்சி ஜுன் 23
யாழ்ப்பாணமாவட்டகிராம அலுவலர் பிரிவுகளுக்கு கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின்கீழ்கடந்தவருடம்மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களில்வழங்கப்பட்ட நிதியின் மூலம் சிறந்த செயற்றிட்டங்களை உருவாக்கியபிரதேசசெயலகங்களின் விபரம் மாவட்டச் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம்வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டதானிய உணவு உற்பத்திகளிலிருந்து சத்துணவு தயாரித்தல் மற்றும்பனைசார் உற்பத்திப் பொருள்கள் தயாரித்தல்செயல்திட்டத்தில்முதலிடத்தையும், தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் கல்வயல்கிராமத்தில்வழங்கப்பட்ட நிதியில் 15 விவசாயக்கிணறுகள்சீரமைத்தல் செயத்திட்டத்தில் இரண்டாமிடத்தையும், பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விவசாயச் செயற்றிட்டம் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளதெனமாவட்டச்செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.


கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்கும் தலா 5 இலட்சம் ரூபா வழங்கப்பட்டு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன எனவும் பிரதேச செயலகங்களால் முன்னுரிமை அடிப்படையில்முன்வைக்கப்பட்ட செயற்றிட்டங்களைமாவட்டச் செயலர் தலைமையிலான குழுவினர் நேரடியாகப்பார்வையிட்டுமதிப்பிட்டு புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்து பெறுபேற்றினை அறிவித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பெறுபேற்றின் அடிப்படையில்மருதங்கேணிபிரதேச செயலகத்திற்கு 97 புள்ளிகளும், தென்மராட்சிபிரதேச செயலகத்திற்கு 80 புள்ளிகளும்பருத்தித்துறைபிரதேச செயலகத்திற்கு 71 புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

### மத்துகம பிரதேச சபை எல்லைக்குள்

# மாடுகள் வெட்டத் தடை தீர்மானம் நிறைவேற்றம்

### மறவன்புலவு சச்சிதானந்தம் நேரில் சென்று பாராட்டு



கொழும்பு. ஜுன் 23
மத்துகம பிரதேச சபை எல்லைக்குள் எவரும் எந்தக் காரணம் கொண்டும் மாடுகளைக் கொல்லக் கூடாது என்று சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனையடுத்துமறவன்புலவு சச்சிதானந்தம் அங்கு நேரடியாகச் சென்று சபையினரைப் பாராட்டியுள்ளார்.

34 உறுப்பினர் கொண்ட சபையில் ஒருவர் முஸ்லிம் மறவர்கள் அனைவரும் சிங்களவர். தீர்மானத்தை உறுப்பினர் வண. நாரவில் சமதவன்சர் சபையில் முன்மொழிந்தார்.

தீர்மானத்துக்கு 27 உறுப்பினர்கள் ஆதரவு. 3உறுப்பினர்எதிர்ப்பு, மற்றும் 3 உறுப்பினர்கள் சார்பின்றி இருந்து விட்டனர். ஒருவர் சபைக்குச் சென்றிருக்கவில்லை. சபையில்அந்தத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

பிரதேச சபைத் தலைவர் மெரில் முனசிங்கரைப் பாராட்டி பொன்னாடை போர்த்தினேன். பிரதேசசபைச்செயலரைப் பாராட்டினேன். முன்னாள் அமைச்சர்இல்லம்சென்றுஅவரையும் பாராட்டினேன். வண. நாரவில் சமதவன்சரின் பன்சாலைக்குச் சென்று பாராட்டினேன்.

அனைவரையும் வடக்குக்கு வருமாறும் மாட்டுக் கொலைத் தடையை ஊக்குவிக்குமாறும் அழைத்தேன் - என்று மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார். (4)

## அப்பாக்குடித் தங்கம்மாவின் குருபூசை தினம் ஞாயிரன்று

அளவெட்டி, ஜுன் 23
சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின்10 ஆவது ஆண்டு குருபூசை தினம் நாளை ஞாயிற்றுக்கிழமைகாலை9மணிக்கு தெல்லிப்பழையில்உள்ளசிறிதுர்க்காதேவி தேவஸ்தான மண்டபத்தில் தலைவர்செஞ்சொற்செல்வர்கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆலயத்தின் சிறப்புப்பூசைஇடம்பெற்றுதொடர்ந்துவழிபாடுகள், திருமுதுறைகள் வெளியீடு என்பனவும்இடம்பெறவுள்ளதுஎன்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (21,36)

## இலவச கண் பரிசோதனை முகாம்

சாவகச்சேரி ஜுன் 23
சாவகச்சேரி பொலிஸாரும் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும் இணைந்துஇலவசகண்பரிசோதனை முகாமினைமீசாலைகிழக்குமதுவன் சனசமூகநிலையமண்டபத்தில்இன்று காலை 8.00 மணி தொடக்கம் நடத்தவுள்ளனர் என அறிவித்துள்ளனர்.

மீசாலை கிழக்கு சங்கத்தானை கோயிற்குடியிருப்பு போன்ற பிரிவுகளைச் சேர்ந்த மக்களை இந்த கண் பரிசோதனைமுகாமில் கலந்துகொள்ளுமாறுசாவகச்சேரிபொலிஸ்நிலைய தலைமைப்பீட பொறுப்பதிகாரி பி.விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். (9)

## 3 வேலைத்திட்டங்களுக்கு மூலதன நன்கொடை நிதி

யாழ்ப்பாணம், ஜுன் 23
வலி.மேற்கில் 2இலட்சத்து 30ஆயிரம்ரூபாநிதிஒதுக்கீட்டில் மூன்று வேலைத்திட்டங்களுக்கு பிரமாண அடிப்படையிலானமூலதனநன்கொடைநிதியில்வடக்குமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் நிதி ஒதுக்கியுள்ளார். சுழிபுரம் கிழக்கில் சபாநாதன்ஜெயகௌரிஎன்பவருக்குமின்சாரவேலைகளுக்காக 30ஆயிரம் ரூபாவும், மயான கூரை திருத்த வேலைகளுக்கானஅராலிதெற்குகிராமஅபிவிருத்திச்சங்கத்துக்குஒரு இலட்சம் ரூபாவும், வேலி அமைத்தலுக்காக சித்தன்கேணி இளைஞர் முன்னேற்ற கழகத்திற்கு ஒரு இலட்சம் ரூபாவும் ஒதுக்கியுள்ளார்.

இதுதவிர, வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபைக்குட்பட்ட ஜெகநாதன் கேதாரகௌரி என்பவருக்கு 30ஆயிரம் ரூபாவும், சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட கதிர்காமவேலன் சந்திராதேவி என்பவருக்கு 50ஆயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4,50)

## கலைஞர்களுக்கான ஒன்றுகூடல்

அளவெட்டி, ஜுன் 23
தெல்லிப்பழைப்பிரதேசசெயலகத்துக்குட்பட்ட கலைஞர்களை ஒன்றிணைத்து அவர்களின் அனுபவங்களையும்ஆற்றல்களையும்எல்லோருடனும்பகிர்ந்துகொள்ளும்நோக்குடன் இன்று காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழைப் பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் கலைஞர்களுக்கான ஒன்றுகூடல்வைபவம்நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலைஞர்களைக் கலந்துகொண்டுதங்கள்அனுபவங்களையும் ஏனைய கலைஞர்களுடன் பகிர்ந்து மகிழ்ச்சியடைவதுடன் நிகழ்வைச்சிறப்பிக்குமாறுபிரதேசத்துக்குட்பட்ட கலைஞர்கள்அழைக்கப்பட்டுள்ளனர் என்றுவலிவடக்குபிரதேசசெயலாளர் ச.சிவசிறி தெரிவித்துள்ளார். (21,36)

## 2 சபைகளின் சாரதிகளுக்கு பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஜுன் 23
உள்ளூராட்சிச் சபைகளில் வாகனப் பாவனையுடைய உத்தியோகத்தர்களுக்கான வீதி ஒழுங்கு விதிகள், விபத்துக்களை தடுத்தல், வாகனப்பராமரிப்புதொடர்பானபயிற்சி எதிர்வரும்26ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை இரு உள்ளூராட்சிச் சபைகளுக்கு இடம்பெறும். அன்று காலை 8.30மணிக்கு வலி. மேற்குப் பிரதேச சபைக்கும், மதியம் 1.30 மணிக்குவலி.தென்மேற்குப்பிரதேசசபைக்கும் பயிற்சிகள் இடம்பெறும். ஒவ்வொரு சபையிலும்வாகனப்பராமரிப்புடன்தொடர்புள்ள 50 அலுவலர்கள் பங்குபற்றலாம்.

4மணித்தியாலங்கள்கொண்டஇந்தப்பயிற்சிக்கு வளவாளர்களாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின்பொதுமுகாமையாளர்வ.பத்மநாதன், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்கள இயந்திரப் பொறியியலாளர் ம.ரவீந்திரன் குரூஸ் ஆகியோர் கலந்து கொள்வர் என்று வடக்கு மாகாண உள்ளூராட்சிஅமைச்சின்செயலாளர்விஜயலட்சுமி கேதீஸ்வரன்அறிவித்துள்ளார். (4,50)





## முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம் ஜுன் 23
நல்லூர்கோட்டத்திற்குட்பட்ட முன்பள்ளிசிறார்களின் விளையாட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எவ். எக்ஸ். அன்ரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணவலயக்கல்விப்பணிப்பாளர்சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக யாழ். இந்து மகளீர் கல்லூரி அதிபர் விமலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (114)

## வர்த்தகர்களுக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜுன் 22
பாவனையாளர்பாதுகாப்புச்சட்டவிதிமுறைகளைமீறிவர்த்தகநிலையங்களில்பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு சாவகச்சேரிநீதிமன்றில்கடந்தபுதன்கிழமை தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டபாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது திகதி காலாவதியான பொருள்கள்விற்பனைக்குவைத்திருந்தமைமற்றும் நிர்ணய விலையை விட அதிகரித்த விலையில் பொருள்கள் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களுடன் ஆறு வர்த்தகர்களுக்குஎதிராகச்சாவகச்சேரிநீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் நேற்றுமுன்தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதை அடுத்து ஒருவருக்கு 9 ஆயிரம் ரூபாவும், இருவருக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபாவீதமும், மற்றொருவருக்கு 6ஆயிரம் ரூபாவும், மற்றும் இருவருக்குத் தலா ஆயிரத்து 500 ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது. (21,9)



## குட்டியப்புலம் அபிராமி அம்பாளின் தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், ஜுன் 23
யாழ்ப்பாணம் குட்டியப்புலம் அபிராமி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா கடந்த புதன்கிழமை சிறப்பாக இடம் பெற்றது. அபிராமி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்கடந்த 7ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இவ்வாலயத்தின் நித்திய குரு சிவசிறி பேரம்பல நிரூசனக் குருக்கள் வாமதேவ சிவாச்சாரியார் அலங்கார உற்சவக் கிரியைகளைச்சிறப்பாக நடத்தினார்.

## நிபந்தனைகள்...

ளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் மீன்வள அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவுடன் கொழும்பில் நேற்றுச் சந்திப்பு நடத்தினர். இந்தச் சந்திப்பில் வடமராட்சி கிழக்கில் கடலட்டை பிடிப்பில் ஈடுபடும் நிறுவனங்களும் கலந்து கொண்டன.

கடலட்டை பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படும்போது, கடற்கரையிலிருந்து 5 கிலோ மீற்றருக்கு அப்பால் தொழில் செய்தல், பகலில் தொழில் செய்தல் உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்படும். இந்த நிபந்தனைகளை மீறி கடலட்டை பிடிக்கப்படுகின்றது என்றே வடமராட்சி கிழக்கு மீனவர்கள் தெரிவித்து வந்தனர். மீன்பிடி அமைச்சருடனான சந்திப்பில் கடலட்டை பிடிக்கும் நிறுவனங்கள் கருத்துத் தெரிவித்தன.

கடற்கரையிலிருந்து 5 கிலோ மீற்றருக்குள்ளேயே தொழிலில் ஈடுபடுகின்றோம். இரவு வேளைகளில் வெளிச்சத்திலேயே கடலட்டை பிடிக்கின்றோம் என்று ஒப்புக் கொண்டனர்.

அவ்வாறு செய்ய முடியாது என்றும் நிபந்தனைகளை மீறினால் உடனடியாக அனுமதிப் பத்திரம் இல்லாமல் செய்யப்படும் என்று மீன்பிடி அமைச்சர் தெரிவித்தார். வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவுக்கு நேரில் சென்று மீனவர்களுடன் கலந்துரையாடப்படும் என்றும் அறிவித்துள்ளார். (ற-5)

## சிறுத்தையைக்...

ளைக் கைது செய்யுமாறு கிளிநொச்சி நீதிமன்று நேற்று உத்தரவு பிறப்பித்தது.

கிளிநொச்சி, அம்பாள்புரம் கிராமத்துக்குள் நேற்றுமுன்தினம் காலை சிறுத்தை ஒன்று நுழைந்தது. அதன் தாக்குதலில் 11 பேர் காயமடைந்தனர். மதியமளவில் அந்தச் சிறுத்தை அடித்துக் கொல்லப்பட்டது. அதன் உடலையும், அதன் உடலுடனும் ஒளிப்படங்கள் எடுத்து சமூக வலைத் தளங்களில் பதிவேற்றப்பட்டது. அந்தப் படங்கள் வேகமாகப் பரவின. சிறுத்தை அடித்துக் கொல்லப்பட்டமை தொடர்பிலும், அதன்பின்னரான செயற்பாடுகள் தொடர்பில் பலர் அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

சமூக வலைத்தளங்கள் மூலம் பகிரப்பட்ட ஒளிப்படங்களை ஆதாரமாகக் கொண்டு வனஜீவராசிகள் திணைக்களத்தினர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்தனர். அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சிறுத்தை கொல்லப்படுவது தொடர்பான காட்சிகள் ஒளிப்படங்கள், காணொலிக் காட்சிகள் மூலம் காட்சிப்படுத்தப்பட்டது. அவற்றை ஆதாரமாகக் கொண்டு அனைவரையும் கைது செய்யுமாறு நீதிமன்று கிளிநொச்சிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டது. (ற-21,35,6,214)

## நான்...

அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை இலக்கு வைத்து முன்னாள் போராளிகள் சிலர் புலம்பெயர் தமிழர்களால் தயார்ப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், இராணுவப் புலனாய்வுப் பிரிவு இது தொடர்பில் தகவல் வழங்கி 4 நாள்களில் கிளைமோர் குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று இணையத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. (ற-5)

## கொல்லப்பட்ட...

உடனடியாகக் கைது செய்யவேண்டும் என்று புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா நாடாளுமன்றில் வலியுறுத்தினார்.

இதேவேளை, தென்னிலங்கையில் வீராப்பு பேசும் வனஜீவராசிகள் அமைச்சர் சரத் பொன்சேகா தனது அதிகாரத்தைக் கிளிநொச்சி பிரதேசத்தில் சிறுத்தையைக் கொலை செய்தவர்களிடம் காட்டவேண்டும். மனிதாபிமானமற்ற செயற்பாட்டில் ஈடுப்பட்டவர்களை உடனடியாக கைது செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மகிந்த அணியின் உறுப்பினர் ஜயந்த சமரவீர வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, கிளிநொச்சியில் இளைஞர்கள் குழுவொன்றால் சிறுத்தையொன்று கொடூரமாக அடித்து கொலை செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் குறித்து வனஜீவராசிகள் அமைச்சால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கை என்ன என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த புத்தசாசன அமைச்சர், கிளிநொச்சியில் நடைபெற்றது இரக்கமற்ற செயலாகும். வெளிநாடொன்றில் நடைபெற்ற சம்பவம் ஒன்றாக இருக்கும் என்றுதான் ஆரம்பத்தில் நினைத்தேன். ஆனால் இலங்கையில்தான் அந்த கொடூரம் அரங்கேறியுள்ளது என்பது பின்னர் நான் அறிந்துகொண்டேன். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்படவேண்டும். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுக்கப்படவேண்டும். தர்மம் நிலைகொண்டுள்ள நாட்டில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறுவது வெட்கக்கேடாகும் என்று குறிப்பிட்டார். (ற-5,61)

## ஒட்டுசுட்டானில்...

றனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் சம்பவ இடத்திலிருந்து தப்பியோடியிருந்த நிலையில் இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து நடத்திய நீண்ட தேடுதலின் பின்னர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் முன்னாள் போராளிகள் என்று முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு முதன்மைச்சாலையில் பொலிஸார் வழமையான சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். பேராற்றுக்கு அண்மித்த பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்று சந்தேகத்துக்கு இடமான வகையில் சென்றதை அவதானித்த பொலிஸார் அதனை மறித்துள்ளனர். முச்சக்கரவண்டியில் பயணித்த மூவரில், இருவர் அங்கிருந்து தப்பி ஓடினர் என்று பொலிஸாரால் கூறப்படுகின்றது. பொலிஸார் முச்சக்கரவண்டியைச் சோதனை செய்தனர். முச்சக்கர வண்டியிலிருந்து இருபது கிலோ கிளைமோர் குண்டு, கிரனேட், 4 ரிமோட் கொன்ரோல், ரி56 துப்பாக் கி தோட்டாக்கள் 98, விடுதலைப்புலிகளின் சீருடை 2, சுமார் 45 வரையான விடுதலைப்புலிகளின் புலிக்கொடி என்பவை மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சி திருவையாற்றைச் சேர்ந்தவர்.

**தேடுதல் மக்கள் பதற்றம்**

தப்பியோடிய இருவரையும் தேடும் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டது. ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் களத்தில் இறக்கப்பட்டனர். பொலிஸாருடன் இணைந்து அவர்களும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்தத் திடீர் நடவடிக்கையால் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது. தப்பியோடினர் என்று கூறப்படும் இருவரில் ஒருவர் கிளிநொச்சி சாந்தபுரத்தை சேர்ந்தவர். அவர் நேற்று மதியம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மூன்றாவது நபர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர். அவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டார். மூவரிடம் தீவிரமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ற-5,26,105,214,ரி3)

## கோத்தா...

அதற்கான நடைமுறைகள் உள்ளன. அவர் அதற்காக விண்ணப்பிக்கவேண்டும். ஆனால் கோத்தபாய ராஜபக்ச இன்னமும் அதைச் செய்யவில்லை.

அந்த விண்ணப்பம் அமெரிக்காவை சென்றடைந்த பின்னர் அவர்கள் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து கோத்தபாய ராஜபக்ச அமெரிக்க குடியுரிமையிலிருந்து நீக்கப்படுகின்றார் என்று சான்றிதழ் ஒன்றை வழங்குவார்கள். அந்த ஆவணத்தை பெறாமல் கோத்தபாய ராஜபக்சவால் அரச தலைவர் வேட்பாளர் என தெரிவிக்கவும் முடியாது. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு தலைவிதியுள்ளது. எதிர்காலத்தில் என்ன இடம்பெறப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். கோத்தபாய அரச தலைவரானால் நாட்டைக் கடவுளே காப்பாற்றவேண்டும்.

அரசு சிங்கள மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றது என்ற கருத்துக்களை முன்வைத்து செய்தியாளர்கள் மாநாடுகளை நடத்தும் பௌத்த பிக்குகள் யாரென்று பார்த்தால் அவர்கள் கடும் போக்கு பௌத்த சிங்கள குழுக்களை சேர்ந்தவர்களாக காணப்படுகின்றனர். இந்தக் குழுவே கோத்தபாய ராஜபக்சவின் பின்னால் உள்ளது - என்றார். (ற-5)

## அரசமைப்பு...

ளார்.

இலங்கை வந்துள்ள நோர்வேயின் அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியின் தற்போதைய நிலமை குறித்தே நோர்வேத் தரப்பினர் அதிகம் விசாரித்து அறிந்து கொண்டுள்ளனர். புதிய அரசமைப்பு உருவாக்க விவகாரம் உள்ளிட்ட அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படாமை தொடர்பில் அரசுக்கு அழுத்தம் கொடுப்போம் என்று இந்தச் சந்திப்பில் தெரிவித்துள்ளனர். (ற-5)

## ஞானசார...

தில் அனுபவிக்க உத்தரவிடப்பட்ட பொது பல சேனா அமைப்பின் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர், தண்டனை விதிக்கப்பட்டு ஒரு வாரத்தினுள்ளேயே நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மேன் முறையீட்டு மனு மீது நேற்று இரண்டாம் தடவையாக விசாரணைகள் இடம்பெற்றபோது அவரைப் பிணையில் செல்ல ஹோமாகம நீதிவான் உதேஷ் ரணதுங்க அனுமதி வழங்கினார்.

5 இலட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணைகளில் செல்ல ஞானசார தேரருக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவரது வெளிநாட்டுப் பயணங்களை நீதிமன்றம் தடை செய்து அவரது கடவுச் சீட்டையும் முடக்கியது.

ஞானசார தேரருக்கு கடந்த 14ஆம் திகதி கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. அவரது சட்டத்தரணிகள் அன்றே மேன் முறையீட்டு மனுவை ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்தனர். இந்த மனு தொடர்பில் கடந்த 19ஆம் திகதி விசாரணை இடம்பெற்றபோதும் சட்ட மா அதிபர் சார்பில் எவரும் முன்னிலையாகவில்லை. அந்த மேன் முறையீட்டு மனுவை ஆராய்வது நேற்றுவரை ஒத்தி வைக்கப்பட்டது.

நேற்று வரை ஞானசார தேரர் தொடர்ந்து சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. ஞானசார தேரரின் மேன் முறையீட்டு மனு நேற்று பிர்பகல் 2 மணிக்கு மீள ஆராயப்பட்டது. வழக்கு விசாரணைக்கு வந்ததால் ஹோமாகம நீதிமன்ற வளாகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைக்கு வந்த போது, ஞானசார தேரருக்கு பிணை வழங்க நீதிவான் அனுமதித்தார்.

**வந்தார் ஞானசாரர்**

நீதிவானின் அனுமதி தொலை நகல் ஊடாக வெலிக்கடை சிறைச்சாலைக்கு ஹோமாகம நீதிமன்றின் பதிவாளர் ஊடாக அறிவிக்கப்பட்டது. பிணை நிபந்தனைகளில் கையெழுத்திடுவதற்காக உடனடியாக ஞானசார தேரர் வெலிக்கடை சிறையில் இருந்து ஹோமாகம நீதிமன்றுக்கு சிறைச்சாலை அழைத்து வரப்பட்டார்.

அங்கு பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்த பின்னர், ஒரு வார கால கடூழிய சிறை வாழ்க்கைக்கு விடைகொடுத்துவிட்டு, அங்கிருந்த நூற்றுக்கணக்கான தேரர்களுடன் நீதிமன்றிலிருந்து வெளியேறிச் சென்றார்.

பிணை கிடைத்த பின்னர் உடனடியாக தேரர்களால் ஞானசார தேரர், அருகில் உள்ள விகாரை ஒன்றுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு வழிபாடுகள் இடம்பெற்றன. தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கும் ஞானசார தேரரின் மேன் முறையீடு தொடர்பில் விரைவில் மேல் நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெறவுள்ளன. (ற-5,71)

## வானூர்தித்...

யாழ்ப்பாணம், ஜூன் 23

பலாலி வானூர்தி நிலையத்துக்கு எவ்வளவு நிலம் தேவை என்பதை இந்திய அரசிடம் கேட்டறிந்து, அந்த நிலப் பகுதியை மாத்திரம் அரசிதழில் வெளியிடுவது என்றும், முன்னர் வெளியிடப்பட்ட அனைத்து அரசிதழ்களையும் இல்லாமல் செய்வதற்கு கோருவது என்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் ஏற்பாட்டில், அவரால் அழைக்கப்பட்ட மாகாண சபை அமைச்சர்கள் க.சர்வேஸ்வரன், திருமதி அனந்தி சசிதரன், மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் ஆகியோரின் பங்கேற்புடன் பலாலி வர்னூர்தி நிலையம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

அதில் தெல்லிப்பழை பிரதேச செயலர், வடக்கு மாகாண காணி ஆணையாளர், யாழ்ப்பாண மாவட்டச் செயலக மேலதிக மாவட்டச் செயலர் சு.முரளிதரன், நில அளவைத் திணைக்களத்தினர், விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்களுடன் வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன், பிரதேச சபையின் செயலர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடந்த மாதம் 28ஆம் திகதி நடத்திய கூட்டத்தின் அடிப்படையில் நேற்றைய கூட்டம் நடைபெற்றுள்ளது. 'உங்கள் பிரச்சினைகளை நீங்கள் பேசித் தீர்த்த பின்னர் எங்களுடன் பேசுங்கள்' என்று தலைமை அமைச்சர் அந்தக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். அதற்கு அமைவாக நேற்றுக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி வானூர்தி நிலையத்துக்காக 1950ஆம் ஆண்டு 349 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டது. 1986ஆம் ஆண்டு 656 ஏக்கர் காணி சுவீகரிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. ஆனால் போர்ச் சூழ்நிலையினால் அது முடிவுறுத்தப்படவில்லை.

இதேவேளை, 2013ஆம் ஆண்டு அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவால், வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் முழுவதையும் சுவீகரிக்கும் அரசிதழ் வெளியிடப்பட்டது. ஏற்கனவே சுவீகரிப்பு அறிவித்தல் வெளியிடப்பட்ட பிரதேசம் மீளவும் சுவீகரிக்கப்படும் நிலை ஏற்பட்டிருந்தது.

இதனால், ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசிதழ்கள் அனைத்தையும் இல்லாமல் செய்து, புதிய அரசிதழ் வெளியிடக் கோருவது என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்திய அரசின் பங்களிப்பிலேயே பலாலி வானூர்தி நிலையம் மறுசீரமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்திய அதிகாரிகள் பலாலி வானூர்தி நிலையத்தை வந்து பார்வையிட்டிருந்தனர். பாலாலி வானூர்தி நிலையத்தை பிராந்திய வானூர்தி நிலையமாகச் செயற்படுத்த எவ்வளவு ஏக்கர் தேவை என்பதைக் கேட்டறிவது என்றும் நேற்று முடிவெடுக்கப்பட்டது.

பலாலி வானூர்தி நிலையத்துக்கு தேவையான காணியை மாத்திரம் புதிய அரசிதழில் வெளியிடுவதுடன், அதனை சிவில் வானூர்திப் போக்குவரத்து திணைக்களத்துக்கான சுவீகரிப்பாக வெளியிடவேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ற-5)

## தபால்...

துள்ளது.

ஊழியர்களுக்கு உரிய தீர்வை வழங்கியபோதும், பணிப்புறக்கணிப்புத் தொடர்கின்றமை நியாயமற்றது என்று அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்தார். (ற-5)

## யாழ்...

பினர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் பெண்கள் தொடர்பான நிலையியல் குழுவின் தேவைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. அதன்போதே அவர்கள் இவ்வாறு சுட்டிக்காட்டினர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் உட்பட நகர்ப்புறங்களில் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டனர். யாழ்ப்பாணம் ஜே/109 கிராம அலுவலர் பிரிவில் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் 15 பேர் உள்ளனர் என்று கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. படிப்பை நிறுத்திய பெண்கள் எத்தனையோ பேர் வீட்டில் உள்ளனர். அவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்க எமது சபையின் சிறப்புக் குழுக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதிகளில் இரவு நேரத்தில் 8 மணி தொடக்கம் சுமார் 10 பெண்கள் ஒரு வாகனத்தில் அழைத்துச் செல்லப்படுகின்றனர். அதைப் பொலிஸார் கண்டும் காணாமல் இருக்கின்றனர். அவர்களும் இதற்கு உடந்தையா என்று சந்தேகம் தோன்றுகின்றது என்றனர். (ற-21,7)

# மகிந்த அணியிடம் எதிர்க்கட்சி தலைவர்பதவியைக் கொடுங்கள்

## அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ளுங்கள்; சம்பந்தனை அழைக்கிறார் மனோகணேசன்



கொழும்பு, ஜூன் 23

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மகிந்த அணியினருக்கு வழங்கிவிட்டு, அமைச்சர் பதவியை இரா.சம்பந்தன் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதை நல்லெண்ண நோக்கில் நான் சொல்கின்றேன். இவ்வாறு அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கோட்டைமிலோதா மண்டபத்தில் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க, அரசகரும மொழிகள் அமைச்சின் தேசிய மொழி கல்வி பயிலக நிறுவனத்தின் பயிற்சி பெற்ற மொழியாசிரியர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் சிறப்புரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் அரசில் இணைந்து அரசியல் தீர்வையும், அபிவிருத்தியையும் ஒருசேர முன்னெடுக்க எனது தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க அமைச்சுத்தான் தேவை என்றால் அதையும் கொடுத்து விட நான் தயாராக இருக்கிறேன். அவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருப்பதை விட, அமைச்சுப் பதவியில் இருந்து அதிகம் பணி செய்யலாம். என எண்ணுகிறேன்.

வட - கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களைப்பிரதிநிதித்துவம் செய்யும், இதோ இங்கே என்னுடன் நிற்கும் பிரதியமைச்சர் ஹலி சாகிர் மௌலானா உட்பட அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசில் இணைந்து தம் மக்களுக்குஅபிவிருத்திப்பணிகளை ஆற்றுகிறார்கள். இது மிகவும் பாராட்டுக்குரிய பணியாகும். வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்களின் இன்றைய தேவைகளை நிறைவேற்ற இதை நீங்களும் செய்யுங்கள் என நல்லெண்ண நோக்கில் அழைக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி உண்மையில் நாடாளுமன்ற விதிமுறைகளின் கீழேயே உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் சபையில் எதிர்க்கட்சி வரிசையில் அதிக எண்ணிக்கை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த அணியில்தான் உள்ளார்கள். நீங்கள் ஏதோ அவர்களுக்கு உரிய ஒரு பதவியைப் பிடித்து வைத்துக் கொண்டது போல் அவர்கள் பேசுகிறார்கள்.

உண்மையில் இந்தப் பதவியை ஏற்றதன் மூலம் நீங்கள் தமிழ் அரசியல் பரப்பில் பல்வேறு விமர்சனங்களுக்கு முகம்கொடுத்துள்ளீர்கள்என்று நான் நினைக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் பதவியைச் சபையில் அதிக எண்ணிக்கை கொண்ட குழுவுக்கு வழங்கிவிட்டு,தமிழ்மக்களுக்குஇன்று தேவையான அபிவிருத்தியைப்பெற்றுத்தர அமைச்சுப் பதவிகளை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்-என்றார். (5)

# அரசமைப்பு பேரவைக்கு உறுப்பினர்கள் நியமனம்



கொழும்பு, ஜூன் 23

சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் ஏழு உறுப்பினர்கள் அரசமைப்பு பேரவைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

"நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் 123ஆவது பிரிவுக்கமையவே இந்தச் சபை அமைக்கப்பட்டுள்ளது" என்று சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல, எதிர்க்கட்சித் த்லைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் பதவி நிலை அடிப்படையில் அந்தக் குழுவில் இடம்பெறுவர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ச, விஜித ஹேரத் ஆகியோரின் பெயர்கள் சபாநாயகரால் முன்மொழியப்பட்டுள்ளன. (5)

# ராஜபக்ச குடும்ப வழக்குகள் விசாரித்த மூவர் நீக்கப்பட்டனர்

கொழும்பு, ஜூன் 23

ராஜபக்ச குடும்பத்தினர் தொடர்புபட்டதாகக் கூறப்படும் ஊழல் மோசடி சம்பவங்கள் தொடர்பில் முக்கிய விசாரணைகளை முன்னெடுத்த நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய விசாரணை அதிகாரிகள் மூன்று பேர் அந்தப் பிரிவிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

கறுப்புப் பண சுத்திகரிப்புச் சட்டம், நம்பிக்கை மோசடி, ஆயச் சட்டத்தை மீறியமை, போலி ஆவணங்களைத் தயாரித்தமை உள்ளிட்ட விடயங்கள் சி.எஸ்.என். நிறுவனம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த முக்கிய அதிகாரியும், நெடுஞ்சாலைகள் அமைச்சில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் அதிகாரியும், அம்பாந்தோட்டைத் துறைமுக விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் அதிகாரியுமே நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவிலிருந்து மாற்றப்பட்டுள்ளனர். (5,71)

# சிறப்பு மேல் நீதிமன்றுக்கு 3 நீதிபதிகள் நியமனம்

கொழும்பு, ஜூன் 23

நிதி மோசடிகள் மற்றும் இலஞ்ச ஊழல்கள் பற்றி விசாரணை நடத்துவதற்கான நிரந்தர நீதாய மேல் நீதிமன்றின் (ட்ரயல் அட் பார்) நீதிபதிகளை தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் நேற்று நியமித்தார்.

நிதி மோசடிகள் மற்றும் இலஞ்ச ஊழல்கள் பற்றி விசாரணை நடத்துவதற்காக நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் அமைப்பதற்கான சட்டம் கடந்த மாதம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய பெரும் ஊழல் மோசடிகள் மற்றும் திருட்டுச்சம்பவங்கள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு மூன்று நீதிபதிகள் அடங்கிய நிரந்தர நீதாய மேல் நீதிமன்றின் மூன்று நீதிபதிகளை நியமிக்கத் தலைமை நீதியரசரிடம் நீதி அமைச்சுக் கோரியிருந்தது.

இந்த நிலையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் சம்பத் அபயகோன், சம்பத் விஜரட்ண, சம்பா ஜனாகி ராஜரட்ண ஆகியோரைச் சிறப்பு நீதாயத்துக்கான நீதிபதிகளாக நேற்று நியமிக்கப்பட்டனர்.

நிதி மோசடிகள் மற்றும் இலஞ்ச ஊழல்கள் பற்றி விசாரணை நடத்துவதற்காக நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் வரும் ஜூலை 15ஆம் திகதி வழக்கு விசாரணை களை ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

# அமெரிக்க வெளியேற்றத்தால் துள்ளிக் குதிக்க வேண்டாம்

## வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் திஸ்ஸவிதாரண



கொழும்பு, ஜூன் 23

இலங்கை அரசு அசமந்தப் போக்குடன் செயற்படாது மனித உரிமைகள் சபைக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலிருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளமையானது இலங்கைக்கு சாதகத் தன்மையை ஏற்படுத்தியுள்ளதாக அமைச்சர்ராஜிதசேனாரத்ன கூறியுள்ளமையானது அரசின் பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது.

அமெரிக்கா மனித உரிமைகள் சபையிலிருந்து விலகியிருந்தாலும் இலங்கைக்கு எதிராக முன்வைத்துள்ள பரிந்துரைகள் நீக்கப்பட மாட்டாது. ஐ.நா. மனித உரிமைகள் சபை அது தொடர்பில் தொடர்ந்தும் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும்.

இலங்கை அரசு அசமந்தப் போக்குடன் செயற்படாது மனித உரிமைகள் சபைக்கு அளித்த வாக்குறுதிகளை விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (5)

# காதலியின் கதறலால் கண்கலங்கிய மக்கள்

கொழும்பு, ஜூன் 23

அண்மையில் கோர விபத்தில் உயிரிழந்த இளைஞனைத் திருமணம் செய்யப் போவதாகக் காயப்பட்டுள்ள காதலி கதறும் காட்சி அங்கு நின்ற மக்களின் இதயங்களைக் கனக்கச் செய்துள்ளது.

கடந்த வாரம் கடவத்தை அதிவேக நெடுஞ்சாலைக்குப் பிரவேசிக்கும் சந்தியில் இடம்பெற்ற கோர விபத்தில் காதலன் உயிரிழந்த நிலையில், காதலி படுகாயம் அடைந்தார். உயிரிழந்த காதலனின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

உயிரிழந்த காதலனின் சடலத்தைப் பார்வையிட்ட காதலி கதறி கண்ணீர் விடும்போது கூறிய வார்த்தைகள் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

காதலனின் சடலத்தை இறுதியாக காண்பிப்பதற்காக, வைத்தியசாலையிலிருந்து காதலி அழைத்து செல்லப்பட்டிருந்தார்.

"என்னை இவரோடு செல்ல விடுங்கள். அல்லது இப்பொழுதே திருமணம் செய்து வையுங்கள். விவாகப் பதிவாளரை உடனடியாக அழைத்து வாருங்கள். நான் எனது காதலனைத் திருமணம் செய்ய வேண்டும்" என்று அனைவரிடமும் கேட்டு கண்ணீர் விட்டார்.

இதேவேளை, அவரது காதலன் இறப்பதற்கு முன்னர் காதலி எழுதிய கடிதமும் இணையத்தில் வெளியாகியுள்ளது. அதில், ''உங்களைப் பார்த்து மூன்று தினங்கள் கடந்து விட்டது. எனது அம்மா உள்ளிட்ட அனைவரும் உங்களைக் காண விரும்புகின்றனர்'' என்று குறிப்பிட்டுள்ளார். (5)

# வடக்குக்கே சென்று நிதியும் சேகரித்துவிட்டு வெளியேறிய பின்னரே 14 பேருக்கும் தடை

## அரசிதழ் அறிவித்தல் காலம் கடந்த செயற்பாடு என்று மகிந்த விமர்சனம்

கொழும்பு, ஜூன் 23

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய 14 பேருக்கு நாட்டுக்குள் நுழைவதற்குத் தடைவிதிக்கும் வகையில் அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசிதழ் அறிவித்தலானது காலம்கடந்த செயற்பாடு என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச விமர்சித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மேற்படி 14 உறுப்பினர்கள் இலங்கைக்கு வந்து. கிளிநொச்சிக்கும் சென்று நிதி சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வெளிநாடு சென்ற பிறகே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் மகிந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் அப்துல் காதருக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். (5)

# நாடு கடத்தலை நிறுத்தக் கோரிய மனு ஆஸி. நீதிமன்றால் நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 23

ஆஸ்திரேலியாவில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படும் ஆபத்தை எதிர்நோக்கியிருந்த நடேசலிங்கம், பிரியா தம்பதிகள் தாக்கல் செய்திருந்த மனுவை ஆஸ்திரேலிய கூட்டாட்சி நீதிமன்றம் நிராகரித்துள்ளது.



நடேசலிங்கம், பிரியா தம்பதிகளும் அவர்களது இரண்டு பெண் குழந்தைகளும் இலங்கைக்கு நாடு கடத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள சிறிய நகரமாக பிலோய்லாவில் வசித்து வந்த ஈழத் தமிழ்த் தம்பதிகளான நடேசலிங்கம் மற்றும் அவரது மனைவி பிரியா ஆகிய இருவரும் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து 2012ஆம் ஆண்டு மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் தனித்தனியாக ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்திருந்தனர்.

தற்காலிக நுழைவிசைவில் தங்கியிருந்த இருவரும் பிலோய்லா நகரில் வேலைசெய்துகொண்டு தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளாக அங்கு வாழ்ந்து வந்தனர்.

அவர்களது நுழைவிசைவு முடிவுற்ற நிலையில் அவர்களுடன் இரண்டு பெண் குழந்தைகளையும் நாடு கடத்துவதற்காக ஆஸ்திரேலியக்குடிவரவுத் திணைக்களத்தின் எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் பிலோய்லா நகரிலிருந்து பலவந்தமாக அகற்றி மெல்பேர்ன் நகரிலுள்ள ஏதிலிகள் தடுப்பு முகாமில் தடுத்துவைத்துள்ளனர்.

கடந்த 100 நாள்களுக்கு மேலாக தமது இரு பெண் குழந்தைகளுடன் மெல்பேர்ன் ஏதிலிகள் தடுப்பு முகாமிலுள்ள நடேசலிங்கம், பிரியா ஆகியோரினது வழக்கு ஆஸ்திரேலியக் கூட்டாட்சி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கின் விசாரணை கடந்தமே மாதம் நடைபெற்றிருந்த நிலையில் தீர்ப்பை ஆஸ்திரேலியக் கூட்டாட்சி நீதிமன்றம் அறிவித்துள்ளது. நடேசலிங்கம் - பிரியா குடும்பத்தின் நாடு கடத்தலைத் தடைசெய்யுமாறு கோரியிருந்த மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (5)

# செயற்கைத் தீவு சீனாவுக்கு ஒருபோதும் வழங்கப்படாது

## மகிந்த சமரசிங்க தெரிவிப்பு



அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பாதுகாப்பைக் கடற்படையே உறுதிப்படுத்தும். அதற்காக, துறைமுகப் பகுதியில் புதிதாக அலைதாங்கி தடுப்புகள் அமைக்கப்படும். இவ்வாறு துறைமுகங்கள் கப்பற்றுறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டையை ஒட்டியுள்ள செயற்கைத் தீவு, சீனாவிடம் கையளிக்கப்படமாட்டாது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம், கைத்தொழில் வலயம் மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தித்திட்டத்தின்கீழ்வரும் பிரதேசத்தின் பாதுகாப்பு முழுமையாகக் கடற்படையால் கையாளப்படும்.

கடற்படையால் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக, அம்பாந்தோட்டைத்துறைமுகத்தில் புதிதாக அலை தாங்கி தடுப்பு அமைக்கப்படும்.


கடந்த ஆண்டு சீன நிறுவனத்துடன் செய்துகொண்ட உடன்பாட்டில், செயற்கைத் தீவைச் சீன நிறுவனத்திடம் கையளிக்க வேண்டும் என்ற எந்தக் குறிப்பும் இடம்பெற்றிருக்கவில்லை.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கான கடைசிக் கட்டக் கொடுப்பனவு, 12 நாள்கள் தாமதமாகவே, வைப்பிலிடப்பட்டது.

துறைமுகத்துக்கு அருகில் உள்ள தீவு விவகாரத்தால் இந்தத் தாமதம் ஏற்படவில்லை.

அம்பாந்தோட்டைத் துறைமுகஅபிவிருத்தித்திட்டத்தின் கீழ் வரும் நிலப்பரப்புத் தொடர்பான சிறு சிறு பிரச்சினைகளை இரண்டு நிறுவனங்களும் தீர்த்துக் கொள்ளவேண்டியிருந்தது.

செயற்கைத் தீவு தொடர்ந்தும், துறைமுக அதிகார சபையிடமே இருக்கும் - என்றார். (5)



நன்றி: டெய்லிமிரர்

# காணிகள் படிப்படியாக மக்களிடம் ஒப்படைப்போம்

## நிதி இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, ஜூன் 23

போரின்போது நாட்டின் தேசியப் பாதுகாப்புக் கருதிக் கைப்பற்றிய பொது மக்களின் காணிகளைப் படிப்படியாக உரிய மக்களுக்குப் பெற்றுத் தருவோம் என்று நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் வடக்கு - தெற்கு என்ற பேதம் இல்லாது அனைவருக்குமான சேவைகள் முழுமையாகக் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தே வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

நாட்டில் இடம்பெற்ற போரின்போதுதேசியபாதுகாப்புகருதிக் காணிகளைக் கைப்பற்ற வேண்டிய தேவை இருந்தது. பொது மக்களின் காணிகளைப் படிப்படியாக உரிய மக்களுக்குப் பெற்றுத் தருவோம். காணி விடுவிப்பது குறித்து இந்த வாரமும் நிதி அமைச்சர் மற்றும் பாதுகாப்புப் பிரதானிகள் மத்தியில் பேச்சு இடம் பெற்றது - என்றார். (5)

பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீடு:

# விமல் சொல்வது பச்சைப் பொய்

## சாடுகிறார் முஜிபுர் ரஹ்மான் எம்.பி.



கொழும்பு, ஜூன் 23

வடக்குத் தமிழ் மக்கள் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்தவர்கள் அல்ல. போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் இழப்பீடு வழங்கத் திட்டமிடப்படவில்லை. நாட்டில் பாதிப்புக்குள்ளாகியுள்ள அனைவருக்குமே இழப்பீடு வழங்க அமைச்சர் சுவாமிநாதன் அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இது தொடர்பில் பொய்யான பரப்புரையை முன்னெடுத்துச் செல்கின்றார். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் பணத்தை விடுதலைப் புலிகளின் குடும்பத்தினருக்கு வழங்குவதாக விமல் வீரவன்ச போலியான பரப்புரைகளை முன்னெடுக்கின்றார்.

விடுதலைப் புலிகளின் குடும்பங்களுக்கு அரசு இழப்பீடு வழங்குவதாக நாடாளுமன்றத்தில் விமல் வீரவன்ச குறிப்பிட்டிருந்தார். இது நாட்டு மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தி மீண்டும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் செயற்பாடாகும்.

30 ஆண்டுகாலப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் முன்னாள் அரச தலைவர் மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு நிறுவப்பட்டது.

ஆணைக்குழு சில பரிந்துரைகளை முன்வைத்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கும் போது சகல மக்களுக்கும் சமமான முறையில் இழப்பீடுகள் வழங்கப்படவேண்டும் என்று பரிந்துரையில் குறிப்பிடப்பட்டது.

இந்த நல்லிணக்கக் கொள்கையை நாட்டில் ஏற்படுத்தவே சுவாமிநாதன் சட்டவரைவைக் கொண்டுவந்திருந்தார். இதில் ஒரு குற்றமும் இல்லை என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச புரிந்து செயற்பட வேண்டும்.

வடக்கு மக்கள் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்தவர்கள் அல்ல. நாட்டுக்கு எதிராகச் செயற்படுபவர்களும் அல்ல. இலங்கையில் பாரம்பரியமாகச் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்பவர்கள். அவர்கள் மீண்டும் போர்ச் சூழலை விரும்பவில்லை. நல்லிணக்கத்துடன் அனைவருடனும் ஒன்றிணைந்து வாழ்வதே அவர்களின் எதிர்பார்ப்புக்களாகக் காணப்படுகின்றது. அவர்களின் எதிர்பார்ப்புக்களைநிறைவேற்றிக் கொடுக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.

விமல் வீரவன்ச தனது தனிப்பட்ட சில கொள்கைகளை நாட்டில் நிலைநாட்டிக்கொள்ள அரசின் ஒவ்வொரு அசைவுகளையும் குற்றஞ்சுமத்திக் கொண்டே வருகின்றார்.

நாட்டில் மீண்டும் பயங்கரவாதத்தை ஏற்படுத்தி அதனூடாக நாட்டைஇரண்டாகப்பிளவுபடுத்தி வடக்கு மக்களை மீண்டும் கொன்றுகுவித்துச்சிங்களவர்கள் தனியாகவும் தமிழர்களைத் தனியாகப் பிரித்துத் தனது ஆட்சியை நிலைநாட்டிக் கொள்வதே அவரின் எண்ணப்பாடாககாணப்படுகின்றது - என்றார். (5)

# 33 பற்றாலியன்களை கலைக்கிறது ராணுவம்?

## மகிந்த அணி குற்றச்சாட்டு



கொழும்பு, ஜீன் 23
இரண்டு இலட்சம் பேரைக் கொண்ட இராணுவத்தில் 25 வீதத்தால் படைக்குறைப்புச் செய்யப்படவுள்ளது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த சமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத் தளபதியின் பணியகத்தில் இருந்து 2018ஆம் ஆண்டு ஜீன் 14ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்திலேயே இந்தப் படைக் குறைப்புக்கான முக்கியமான வழிகாட்டுதல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் வழிகாட்டுதலுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.


இதற்கமைய, 14 நிரந்தர பற்றாலியன்களும், 19 தொண்டர் படை பற்றாலியன்களுமாக, மொத்தம் 33 பற்றாலியன்கள் கலைக்கப்படவுள்ளன.

100இற்கு மேற்பட்ட இராணுவ முகாம்களும் தளங்களும் கைவிடப்படவுள்ளன. இவற்றில் சில கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் உள்ளன. சுமார் 25 ஆயிரம்வரையிலான, இராணுவ அதிகாரிகளும் படையினரும், படைக் குறைப்பு செய்யப்படவுள்ளனர் அல்லது ஓய்வு அளிக்கப்படவுள்ளனர்.

இந்தப் படைக்குறைப்பால், போருக்குப் பிந்திய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு டிசெம்பரில் அரச தலைவர் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர், இராணுவத்தின் அளவு குறைக்கப்படவுள்ளது – என்றார். (5)

# இந்தியாவைப் பகைத்ததால் நாம் விளைவுகளை அனுபவிக்கின்றோம்

## கவலைப்படுகிறார் மகிந்த



கொழும்பு, ஜீன் 23
முன்னைய அரசு இந்தியாவுடன் மோதற் போக்கைக் கடைப்பிடித்ததால், தற்போதைய அரசு பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், மனித உரிமை மீறல்கள் விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஆரம்பத்தில் இந்தியா எம்மை ஆதரித்தது. பின்னர், எதிராகச் செயற்பட்டது. அப்போதைய அரசின் அணுகுமுறையே அதற்குக் காரணம்.

நாங்கள் இந்தியாவை எதிரியாக்கியிருக்கிறோம்.

இது முன்னைய அரசின் மிகப் பெரிய தவறு. இந்தியா போரின் போதும், ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் எமக்கு உதவியது.

ஆனால், பின்னர் எமக்கு எதிராகச் செயற்பட்டது. ஏனென்றால், அதற்குக் காரணம் எமது கொள்கைகள் தான்.

அதன் விளைவாக நாம் மீன் ஏற்றுமதித் தடை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது - என்றார். (5)

# படைக்குறைப்பை மறுக்கிறது ராணுவம்



கொழும்பு, ஜீன் 23
இராணுவம் படைக்குறைப்புச் செய்யவுள்ளதாகத் தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த சமரவீர சுமத்திய குற்றச்சாட்டை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து நிராகரித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் அடிப்படையற்றது. சில படைப்பிரிவுகள் வலிமை குறைவாக இருந்ததால், இராணுவம் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

ஆனால் இராணுவத்தின் ஆளணியைக் குறைக்கவோ, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் தளங்களைக்கைவிடவோ எந்த நகர்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதுபோன்ற நடவடிக்கை முன்னரும் எடுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய முயற்சிகளின் நோக்கம், படைப்பிரிவுகளைச் சரியாகப் பேணுவதே - என்றார். (5)

# ‘1990’ சேவை அடுத்த மாதம் முதல் வடக்கிலும்

## ஹர்ச டிசில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஜீன் 23
வடக்கில் அடுத்த மாதத்துக்குள் ‘1990 சுவசெரிய நோயாளர்காவு வண்டிச் சேவை’ ஆரம்பிக்கப்படுவதுடன் கிழக்கில் இந்த ஆண்டிறுதிக்குள் சேவையை ஆரம்பிக்கவும் முடியும் என்று கொள்கைத் திட்டமிடல் மற்றும்பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் ஹர்ச டிசில்வா சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 1990 சுவசெரிய மன்றம் சட்டவரைவின் இரண்டாம் மதிப்பீட்டின் மீதான விவாதத்தில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் அடுத்த மாதத்துக்குள் 1990 சுவசெரிய நோயாளர்காவு வண்டிச்சேவை ஆரம்பிக்கப்படும். கிழக்கு மாகாணத்தில் இந்த ஆண்டுக்குள் குறித்த சேவையை ஆரம்பிக்க முடியும். இந்தச் சேவைக்கு அந்தந்தப் பகுதிகளில் இருந்தே சேவைக்கு ஆள்களை இணைத்துக்கொள்கின்றோம்.

வடக்கில் சுவசெரிய சேவைக்கு 60 சாரதி களும் மருத்துவ ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு 62 பேருமாக மொத்தம் 122 பேரைச் சேவைக்கு இணைத்துப் பயிற்சி வழங்கி வருகின்றோம். பெரும்பாலும் அடுத்த மாதத்துக்குள் இந்தச் சேவை வடக்கில் ஆரம்பிக்கப்படும் - என்றார். (5)

# மாடுகள் கொல்லத் தடை

# தீர்மானம் இயற்றிய மத்துகம சபைக்குச் சிவசேனை பாராட்டு

கொழும்பு, ஜீன் 23
களுத்துறை மாவட்டத்தின் மத்துகமப் பிரதேச சபைக்கு உட்பட்ட எல்லையில் மாடுகள் கொல்லப்படுவதற்குத் தடை விதித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை, சிவசேனை அமைப்புப் பாராட்டியுள்ளது. பிரதேச சபையின் தவிசாளர், செயலரை நேரடியாகச்சென்றுசிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் சந்தித்துப் பொன்னாடை போர்த்தி மதிப்பளித்துள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி, மத்துகமப் பிரதேச சபை எல்லைக்குள் எவரும் எக்காரணம் கொண்டும் மாடுகளைக் கொல்லக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியிருந்தார்கள். 34 உறுப்பினர்களைக் கொண்ட சபை. ஒருவர் முஸ்லிம். மற்ற அனைவரும் பௌத்தர்கள். தீர்மானத்துக்கு 27 உறுப்பினர்கள் ஆதரவு. 3 உறுப்பினர்கள் எதிர்ப்பு, 3 உறுப்பினர்கள் சார்பின்மை, ஒருவர் வரவில்லை.

தீர்மானத்தை முன்மொழிந்தவர் நாறவில சமதவன்ச தேரர். இவரை, சிவசேனை அமைப்பின் தலைவர் பாராட்டியபோது, பல்லாண்டுகளாக முயன்றேன்.

இப்பொழுதுதான் முடிந்தது. மனத்துக்கு மிக்க ஆறுதல் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதேச சபைத் தலைவர் மெரில் முனசிங்கரைப், பிரதேச சபைச் செயலர், முன்னாள் அமைச்சர் குமார வெல்கம ஆகியோரைச் சிவசேனை அமைப்பின் தலைவர் பாராட்டியுள்ளார்.

அனைவரையும் வடக்குக்கு வருமாறும் மாட்டுக் கொலைத் தடையை ஊக்குவிக்குமாறும் அழைப்பு விடுத்ததாகச் சிவசேனை அமைப்பின் தலைவர் தெரிவித்தார். (5)



# ஹிட்லர் போன்று ராஜபக்ச கண்டிக்கிறது மகிந்த அணி

இராணுவ ஆட்சி சம்பந்தமான கருத்தையும், ஹிட்லர் போன்று கோத்தபாய ராஜபக்ச செயற்பட வேண்டும் என்ற கருத்தையும் முழுமையாக கண்டிப்பதாக மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

நாட்டில் அப்படியான நிலமை ஏற்பட்டால், உயிரைப் பணயம் வைத்துப் போராடவும் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் 69 ஆவது பிறந்த தின நிகழ்வில் கருத்து வெளியிட்ட அஸ்கிரிய பௌத்த பீடத்தின் அனுநாயக்கர் வெடருவே உபாலி தேரர், நாட்டை அபிவிருத்தி செய்ய இராணுவ ஆட்சியாளராவது பதவிக்கு வர வேண்டும் எனவும் அப்படியான ஆட்சியை ஏற்படுத்த கோத்தபாய ராஜபக்ச முன்வர வேண்டும் எனவும் கூறியிருந்தார். (5)

# அழைப்பு



**மீள்குடியேற்ற, புனர்வாழ்வு, வடக்கின் அபிவிருத்தி**
**பிரதி அமைச்சர், வன்னியின் மைந்தன்**
**கௌரவ கே.கே.மஸ்தான் அவர்களை**

## கௌரவிக்கும் விழா

இடம் : கலைமகள் சனசமூக நிலைய மைதானம்,
மன்னார் வீதி, வவுனியா.

காலம் : 23.06.2018 (சனிக்கிழமை)

நேரம் : மாலை 3.00 மணி

**இன, மத, மொழி, பேதம் கடந்து சேவையாற்றும்**
**மக்கள் நாயகனை கௌரவிக்க அனைவரும் அணி திரள்வோம்.**

*வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களும், ஏற்பாட்டுக்குழுவும்*

## மரண அறிவித்தல்



பிறப்பு 14 . 08 . 1938

இறப்பு 20 . 06 . 2018

### சிதம்பரப்பிள்ளை வேலாயுதம்

காந்தியூர் புலோலியைப் பிறப்பிடமாகவும் இல.50/16, கோயில் வீதி, குருமன் காடு, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை வேலாயுதம் 20.06.2018 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு - பரிபூரணம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் சிவாஜினி(சுவிஸ்), சிவரூபினி (சுவிஸ்), காலஞ்சென்ற முருகமூர்த்தி (கொழும்பு) மற்றும் கிருபாஜினி (கனடா), கணேஷமூர்த்தி (நியூ ஹார்ணி சில்க்ஸ் வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகராஜா(சுவிஸ்), சக்திநாதன்(சுவிஸ்), கௌஷலா(கொழும்பு), முரளிதரன்(கனடா), வசந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிருதிவி, சுஜீவன், தப்னா, நிதுஸ், ஷர்மி, பிரதீஸ், டிப்த்தி, சானுஷன், ஹார்ணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.06.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.50/16, கோயில்வீதி,**
**குருமன்காடு, வவுனியா.** (00367) (14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**
**நியூ ஹார்ணி சில்க்ஸ் வவுனியா.**

**077 605 2628/ 077 515 7216**

## மரண அறிவித்தல்

### கயிலைநாதன் சுபாஸ்கரன்

**(அப்பன்)**



விண்ணில் 19.06.2018 மண்ணில் 29.06.1978

கிளிநொச்சி குஞ்சுப்பரந்தனைப் பிறப்பிடமாகவும், யாழ். சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியை வசிப்பிடமாகவும், கனடா Torontoவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கயிலைநாதன் சுபாஸ்கரன் 19.06.2018 செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சதாசிவம் - வள்ளிப்பிள்ளை (கனடா) தம்பதிகளின் மூத்த பேரனும், கயிலைநாதன் (கனடா) - மகேஸ்வரி (கனடா) தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற சரவணபவானந்தன் மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் அன்புமருமகனும், பவித்திராவின் (சரிதா - கனடா) அன்புக்கணவரும், சஜந் (கனடா), சச்சின் (கனடா), அஸ்வினி (கனடா) ஆகியோரின் பாசமிகுதந்தையும், உஷாநந்தினி (நந்தா- கனடா), கருணாகரன் (குஞ்சா - கனடா), பிரபாகரன் (பிரபா- கனடா), மிதூரன் (விஜய் - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசசேகர் (சேகர் - கனடா), கல்யாணி (கனடா), ராம்பியர் (கனடா), அஜிஸ்குமார் (கனடா) சர்வானந்தன் (லண்டன்), சத்தியரூபன் (லண்டன்), தர்சனன் (லண்டன்), சர்மிளா (கனடா), சஞ்சீவன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிநயா, அஞ்சனா, இனியா ஆகியோரின் பாசமிகு மாமாவும், ஆரியன், அரிஷா, மாயா, அபிமன், அதிரன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், மேகநாதன் (சிவா-கனடா) றஞ்சினி (ரஞ்சி- கனடா), மங்யற்கரசி காலஞ்சென்ற தில்லையம்பலம், பரமேஸ்வரி- விநாயகமூர்த்தி, புவனேஸ்வரி - இராஜரட்ணம் ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், லோகேஸ்வரி (சாந்தம் - இந்தியா) - கயிலைநாதன் (குஞ்சு மணி - இந்தியா), காலஞ்சென்ற பாலசுந்தரம் - இராசேஸ்வரி, காலஞ்சென்றவர்களான நாகராசா - கமலேஸ்வரி, வேலுப்பிள்ளை - காலஞ்சென்ற புவனேஸ்வரி, காலஞ்சென்ற தங்கராசா - அன்னலட்சுமி, கந்தசாமி - புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.06.2018 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்: சரவணபவானந்தன் (அப்பர்)**
**குடும்பத்தினர்.**

பிரபா (+16476436050 - கனடா), சேகர் (+14167217446 - கனடா),
கருணா (+16472037744 - கனடா),
சிவா (+447939645921 - பிரித்தானியா),
அஜிஸ்குமார்/சர்மிளா - (+16478604390- கனடா)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு 021 493 1111
advt@uthayan.com

## மருத்துவமனைப் பணிப்பாளர் வரையறை மீறிய செயற்பாடா?

*அவர் மீதான விசாரணை நிறைவு*

யாழ்ப்பாணம், ஜீன் 23
அனுமதிபெறாதுவெளிநாடு சென்றமை உட்படச் சில குற்றச்சாட்டுகளுக்காகவவுனியா மருத்துவமனைப் பணிப்பாளர் மீது ஒழுக்காற்று விசாரணை நடத்தி இறுதி அறிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது பற்றிய விசார ணைக்காக மூவர் அடங்கிய குழு அமைக்கப்பட்டு ஆரம்ப விசாரணைகள் முழுமை செய்யப்பட்டு அறிக்கை அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. வடக்குமாகாண சுகாதார அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர் பிரணவநாதன், யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள்பணிப்பாளர்மருத்துவர் க.நந்தகுமாரன் உள்ளிட்ட மூவர்விசாரணைக்குழுவே விசாரணை நடத்தியது.

குறித்த விசாரணையில் வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் திணைக்களத்தின் எந்தவிதமான முன் அனுமதியோ குறைந்த பட்சம் விடுமுறையோ பெற்றுக்கொள்ளாது வெளிநாடு சென்று திரும்பியுள்ளார். அவ்வாறு வெளிநாடு சென்று திரும்பிய காலத்துக்கும் கடமை புரிந்ததாகவேபதிவுகள்மேற்கொண்டுள்ளதோடுஅந்தக் காலப்பகுதியில்கூட்டங்கள் இடம்பெற்றமைபோன்றும் போலியான அறிக்கைகள் தயாரித்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவைஅனைத்துக்கும்அப்பால் வெளிநாடு சென்று திரும்பிய2018.04.19முதல் 2018.04.26 வரையான காலப்பகுதிக்குரியதிகதிகளிலும்மேலதிகநேரக்கொடுப்பனவும் பதிவு செய்யப்பட்டு அதற்கான கொடுப்பனவுகளும் பெறப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டி ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதுதொடர்பிலேயே ஆரம்ப விசாரணைகள் இடம்பெற்றன.

விசாரணை நிறைவில் பணிப்பாளர் மீது சுமத் தப்பட்ட குற்றச் சாட்டுக்களும் உண்மை எனக் கண்டறியப்பட்டுள்ளது. அவர்இலங்கையை விட்டு வெளியேறியமை குடிவரவு குடிய கல்வுத் திணைக்களம் மூலமும்உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் நோக்கில்தற்போதுகொழும்புசுகாதார அமைச்சுக்கும்வடக்கு மாகாண ஆளுநருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-4,105)

---

வடக்கு மாகாணத்திலுள்ள

# பனைமரங்களின் பரம்பல் செய்மதியில் கணக்கெடுப்பு

பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 23

**வடக்கு மாகாணத்தில் உள்ள பனைகளின் எண்ணிக்கை செய்மதி மூலமாகக் கணக்கெடுக்கப்படவுள்ளது. சபையின் உறுப்பினர்களுக்கு இது தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பனை அபிவிருத்திச்சபை இதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளதுஎன்றுசபையின்விரிவாக்க முகாமையாளர் கே.கோபாலகிருஷ்ணன் தெரிவித்தார்.**

கணக்கெடுக்கப்படவுள்ள விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

செய்மதி ஊடாகப் பனைகளின் பரம்பலைக் கணக்கெடுப்பது தொடர்பான பயிற்சிகள்சபையில்பதினைந்துபணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடத்தின்உதவியுடன்பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

போர்ச் சூழலுக்கு முன்னர் குறிப்பாக 1983ஆம்ஆண்டுக்குமுன்னர்பனைகளின் பரம்பலின் மொத்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அந்தக் கணக்கெடுப்பின் பிரகாரம் வடக்கில் சுமார் 35 இலட்சம் பனைமரங்கள் உள்ளன என்று மதிப்பிடப்பட்டன. போர் காலத்துக்குப் பின்னர் இதுவரைக்கும் பனைகள் பற்றிய மொத்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை.

போர்க்கால நிலையில் பல ஆயிரக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. செய்மதி ஊடான கணக்கெடுப்பின் முழுமையான தகவல்கள் இந்த வருட நிறைவுக்குள் தெரியவரும். சபைத் தலைவர் மருத்துவர் இ.சிவசங்கரின் முயற்சியுடன் வடக்கில்உள்ளபனைகளின்பரம்பல்களின் மொத்த எண்ணிக்கை கணக்கிடப்படவுள்ளன.

பல வருடங்களாக பனைகளின் பரம்பல் பற்றிய மொத்தக் கணக்கெடுப்பு எதுவும் மேற்கொள்ளப்படாதநிலையில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் மேலும்தெரிவித்தார். (எ-4,17)

---

விவசாய நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தில்

## மாம்பழச் செய்கையை மேற்கொள்ள விருப்பமுள்ளோர் பதிவு செய்யவும்

*விவசாயநவீனமயமாக்கல்செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்.ஜீன்.23
உலகவங்கியின்நிதியுதவியுடன்வடக்குமாகாணத்தில்முன்னெடுக்கப்படும்விவசாயநவீனமயமாக்கல்செயற்றிட்டத்தில் மாம்பழச்செய்கையைமேற்கொள்ளவிரும்பும்பயனாளிகள் எதிர்வரும்30ஆம்திகதிக்குமுன்னர்பதிவுகளைமேற்கொள்ளுமாறுவடமாகாணவிவசாயநவீனமயமாக்கல்செயற்றிட்டப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில்விவசாயநவீனமயமாக்கல்செயற்றிட்டம்நடைமுறைப் படுத்தப்பட்டுவருகின்றது.

அதனுடைய ஆரம்பகட்ட செயற்பாடாக யாழ்ப்பாண மாவட்டத்தில்சாவகச்சேரிவிவசாயபோதனாசிரியர்பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில்புதிய இனவகையான'ரொம்ஈ.ஜே.சி'மாம்பழச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அதனுடன் ஊடுபயிராக நிலக்கடலை செய்கையும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாம்பழ செய்கை செயற்பாட்டில் தெரிவு செய்யப்படுகின்ற பயனாளிகள் உடனடியாக ஆரம்பகாலத்தில் மாம்பழச் செய்கையுடன் ஊடுபயிராகநிலக்கடலைசெய்கையிலும்ஈடுபடுத்தப்படுவர்.

தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு நன்கொடையாக நீர் இறைக்கும்இயந்திரம், தூவல்முறைநீர்ப்பாசனஉபகரணங்கள் வழங்கப்படும்.

மாந்தோட்டம் அமைக்கப்படக்கூடிய 1 ஏக்கர் பல்லாண்டுப் பயிர்கள் அல்லாத பாதுகாப்பான காணி மற்றும் நீர்ப்பாசன வசதிபோன்றவற்றைவைத்திருப்போர்இதற்குதகுதியுடையவர்களாக கணிக்கப்படுவர்.

செயற்றிட்டத்தில் இணைய விரும்பும் கமநல கேந்திர நிலையத்தின் கீழ் உள்ள பயனாளிகள் தமது பதிவுகளை யாழ்ப்பாணம், சாவகச்சேரி கமநல கேந்திர நிலையத்தில் உள்ள விவசாயப் போதனாசிரியர் பிரிவிலோ அல்லது இல.127 கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள விசாய நவீன மயமாக்கல் வடமாகாணச்செயற்றிட்டகாரியாலயத்தில்பதிவுகளைமேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-113)

---

## கூட்டமைப்பு உறுப்பினர்கள் கொலை அச்சுறுத்தலாம்

ஐ.தே.க வின் சபை உறுப்பினர் பொலிஸில் நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம் ஜுன் 23
நானாட்டான் பிரதேச சபையின் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர், தனக்கு தமிழ் தேசியக் 'கூட்டமைப்புஉறுப்பினர்கள்சபைஅமர்வின்போது கொலைஅச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்றுகூறி மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

உறுப்பினர் ஞானபிரகாசம் மரியசீலன் என்பவரே முறைப்பாடு செய்துள்ளார்.

நானாட்டான்பிரதேசசபையின்4 ஆவதுஅமர்வுகடந்தபுதன்கிழமை இடம்பெற்றது. சபையின் தலைவர் மற்றும் உபதலைவர் ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்கிறனர்.

அபிவிருத்தித்திட்டங்கள்அனைத்தும் தான்தோன்றித்தனமாக உறுப்பினர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளிக்காது எடுக்கப்படுகின்றன என்று மரியசீலன் சபையில் குற்றஞ்சாட்டியதையடுத்து அமர்வில் அமைதியின்மை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்தும் பேச முற்பட்டபோது கூட்டமைப்பின் உறுப்பினர்களால் இடையூறு வழங்கப்பட்டது என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. அமைதியின்மை கைகலப்பாகும் நிலை ஏற்பட்டது. ஏனைய உறுப்பினர்களால் அமைதி ஏற்படுத்தப்பட்டது.

எனினும்தொடர்ச்சியாகஅமர்வை நடத்த முடியாததால் முடிவு ஏதும் இன்றி கூட்டம் நிறைவு செய்யப்பட்டது. இந்தநிலையில் நேற்று பொலிஸில் முறை யிட்டுள்ளார்.

"கடந்த சபை அமர்வில் அமைதியின்மை ஏற்பட்டது உண்மை தான். அதற்காகக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்பது முற்றிலும் பொய்யான தகவல். குறித்த உறுப்பினர் தனது வட்டாரத்தை விடுத்து வேறு ஒரு வட்டாரம் சார்பான விடயத்தைப் பற்றிப் பேசியதாலேயே முறுகல் நிலை தோன்றியது.

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடும்போது தேவையற்றவிடயங்கள்பேசப்பட்டன. எனவேதான் முறுகல் நிலை வலுப்பெற்றது. வாய்த்தர்க்கத்தில் ஆரம்பித்த பிரச்சினை கைலப்பு நிலைக்குச்சென்றது. ஆனால்அது மற்றைய உறுப்பினர்களால் சுமுக நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. சபையில் கொலை அச்சுறுத்தல் விடுக்கப் பட்டது என்பது முற்றிலும் பொய்யான தகவல்" என்று சபையின் தவிசாளர் தெரிவித்தார். (எ-4,56,114)

---

## கடற்கரையில் வலைகள் திருடியவர் ஒரு வருடத்தின்பின் பிடிக்கப்பட்டார்

கிளிநொச்சி, ஜீன் 23
மீன்பிடி வலைகளை களவாக ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் பொதுமக்களால் துரத்தப்பட்டபோது தப்பித்துச் சென்ற நபர் ஒரு வருடத்தின் பின்னர் பளை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பகுதியில் உள்ள கடற்கரையில் காணப்பட்ட மீன்பிடி வலைகளை இரவு நேரத்தில் வாகனத்தில் களவாக ஏற்றி செல்ல முற்பட்டபோது அங்குள்ள பொதுமக்களால் வாகனம் துரத்தி மறிக்கப்பட்டது. இதன்போது வாகனத்தில் இருந்த ஒருவரை பொதுமக்கள் கைது செய்ததுடன் மற்றைய நபர் தப்பி சென்றிருந்த நிலையில் பளை பொலிசாருக்க கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் வைத்தியசாலையில் இருந்து சிகிச்சை முடித்து வெளியேறுகின்றார் எனவும் பொலிசாருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து, சிகிச்சை முடித்து வெளியேறிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை நீதி மன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பளை பொலிசார் தெரிவித்தனர். (எ-6)

# அறநெறிப் பாடசாலை பாடத்திட்டத்தில் யோகா

## இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம் ஜுன் 23**

**இலங்கையில் உள்ள அனைத்து இந்துசமய அறநெறிப் பாடசாலைகளின் பாடத்திட்டத்தில் மாணவர்களுக்கான யோகா (சூரிய நமஸ்காரம்) பயிற்சியை செயற்படுத்தும் திட்டம் பன்னாட்டு யோகா தினத்தை முன்னிட்டு ஆரம்பிக்கப்படவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் திணைக்களம் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இளம் சிறார்களுக்கு அவர்கள் மனம் ஏற்றுக் கொள்கின்ற வளரும் சிறு பருவத்திலேயே வாழ்வின் மதிப்பீடுகளை நன்கு கிரகித்துக் கொள்ளவும் ஒழுக்கந்தரும் பழக்கங்களை வளர்த்துக் கொள்ளவும் மனதிலும் உணர்ச்சிகளிலும் அறிவிலும் நீதிநெறி வழியிலும் ஆன்மீகத்திலும் மலர்ந்து விரிந்து முழுமையான ஆளுமைத்தன்மையை வளர்க்கவும் அவர்களது இதயங்களில் உள்ள தெய்வீகத்தாமரையை மலரச் செய்வதற்கும் பயிற்சியளித்து வழிகாட்டி ஒழுக்க நெறிமுறைசார்ந்த சமூகத்தை உருவாக்கும் இலட்சிய நோக்குடன் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்க ளத்தால் முன்னெ டுக்கப்பட்டுவரும் இந்துசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்தின் ஓரங்கமாக யோகாப் (சூரிய நமஸ்காரம்) பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்துசமய கலாசார கற்கைகள் நிறுவனமூடாக யோகாசன வளவாளர்களாக இணைக்கப்பட்டுள்ள போதனாசிரியர்கள் மூலமாக முதலில் இந்துசமய அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு யோகாசனப் பயிற்சி வழங்கப்படும்.

அவர்கள் மூலமாக முதற்கட்டமாக அனைத்து இந்துசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும் சூரியநமஸ்காரம் பயிற்சி மற்றும் யோகாசனச் சான்றிதழ் பயிற்சி வழங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்தத்திட்டத்தை ஆரம்பித்துவைக்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணிக்கு காரைதீவு கனகரெட்ணம் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சிவயோகச் செல்வர் சிவஸ்ரீ சாம்ப சிவசிவாச்சாரியார் முன்னிலையில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக மீள்குடியமர்வு மறுவாழ்வளிப்பு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சு செயலாளர் எந்திரி பொ. சுரேஷ் கலந்துகொள்ளவுள்ளார்.

மதிப்புறு விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலர் கே.விமலநாதன் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தத்திட்டத்தை ஆரம்பித்துவைக்கும் வைபவங்கள் ஏனைய சில மாவட்டங்களிலும் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன-என்றுள்ளது. (எ)



# பாரம்பரியங்களைப் பாதிக்காதவாறு சுற்றுலாமையங்களை அமைக்கலாம்

## நோர்வே அமைச்சரிடம் முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜீன் 23

தமிழ் மக்களின் பாரம்பரியங்கள் பாதிக்காதவாறு சுற்றுலா மையங்கள் அமைக்கப்பட வேண்டும். சுற்றுலா மையங்களால் பெறப்படும் வருமானங்கள் ஊடாக வடபகுதி அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டுமே தவிர அந்த வருமானங்களை அரசு எடுக்க அனுமதிக்க முடியாது.

இவ்வாறு வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நோர்வே வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஜென் ப்ரோலிச் ஹொல்றேவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு 3 நாள் பயணம் மேற்கொண்ட நோர்வே வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஜென் ப்ரோலிச் ஹொர்றே மற்றும் அவரது குழுவினர் நேற்று முன்தினம் வடக்கு மாகாண முதலமைச்சரை முதலமைச்சர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சுமார் 30 நிமிடங்கள் இந்த சந்திப்பு இடம்பெற்றது. அந்தசந்திப்பின் நிறைவில், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்க ஆர்வம் காட்டுகின்றனர். புலம்பெயர் மக்களின் விரும்பம் தொடர்பாக என்னுடைய கருத்தை அறிந்துகொண்டார். அவர்களை வித்தியாசமாக நினைப்பதில்லை. அவர்கள் இங்குவேலைத்திட்டங்களைச் செய்வதில் எந்தவித ஆட்சேபனைகளும் இல்லை. அவர்களின் ஆதரவு அவசியம்.

வடக்கில் தொழில்நுட்ப நிலையம் ஒன்றை உருவாக்க திட்டமிட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண முதலமைச்சரின் நிதி நியதிச் சட்டத்தையும் ஏற்றுக் கொண்டால், புலம்பெயர் மக்களின் நிதிகளைப் பெற்று வடக்கில் பல வேலைத்திட்டங்களைச் செய்யமுடியும். ஆனால், இன்னும் வடக்கு மாகாண முதலமைச்சர் நிதிநியதிச்சட்டம் ஏற்றுக்கொள்ளப்படாமல் உள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கரையோரப் பகுதிகள் மிக அழகாக உள்ளன.

அவற்றை வலுவுள்ள சுற்றுலா மையங்களாக மாற்ற முடியுமென்றும் கூறினார். அதை நான் ஏற்றுக்கொண்டேன்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கரையோரப்பகுதிகளில் உள்ள மாசுகளை அகற்ற வேண்டுமென்று கூறினேன். அதனை அவரும் வரவேற்றார்.

உலகளாவிய ரீதியில் கடல்வளத்தைப் பாதுகாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவதால், முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் ஆராய்ந்து அவற்றை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளதாகவும், அதன்பொருட்டு கடற்கரையைச்சென்று பார்வையிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்தவகையில், தமிழ் மக்களின் பாரம்பரியங்கள் பாதிக்கப்படாமல், சுற்றுலா மையங்கள் அமைக்க வேண்டுமென்பதில் கரிசனையுடன் இருக்கிறோம். வருமானத்தைப் பார்க்காமல் சுற்றுலா மையங்கள் அமைக்கவில்லை என்றும், அரசு அவ்வாறான நிலைப்பாட்டில்தான், இருப்பதாகவும் அவருக்கு எடுத்துக் கூறினேன்.

அரசுக்கு இந்த இடத்தில் இருந்து எவ்வளவு வருமானம் வரும் என்பதே அவர்களின் கரிசனை என்றும் எங்களைப் பொறுத்தவரையில், வாழ்க்கை நிலைகள் மாற்றப்படாத நிலையில் இவைகள் நடைபெற வேண்டுமென்றும் கூறியுள்ளேன்-என்றார். (4,106)



# மீனவர் வலையில் பிள்ளையார் சிலை

மன்னார், ஜீன் 23

மன்னார் முதன்மைப்பாலத்தடி கடற்பகுதியில் மீனவர் ஒருவரின் வலையுடன் பிள்ளையார் சிலை ஒன்று நேற்று முன்தினம் ஒதுங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பலரும் அதனைச் சென்று பார்த்துள்ளனர்.

அந்தச் சிலை பழமை வாய்ந்ததா? அல்லது அண்மைக்காலங்களாக மன்னாரில் இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்ட சிலைகளில் ஒன்றாக இருக்கலாமா என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. (எ-4,56)

# உதவி ஆணையாளர்கள் 3 பேருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜீன் 23

யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளராக, முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய இலங்கை நிர்வாக சேவை அலுவலரான முருகநேசன் சுலோசனா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய உதவி ஆணையாளராக செல்வி ஜெகநாதசர்மா இராஜமல்லிகை நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஒன்றரை வருடங்களாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலராகப் பணியாற்றிவந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த ந.திருலிங்கநாதன் வடக்கு மாகாண கூட்டுறவுத் துறை அமைச்சுக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 20ஆம் திகதி தொடக்கம் அவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-4,50,102)

# வடமராட்சி கிழக்குக்கு ஆசிரியர் பற்றாக்குறை

## பலரும் பின்னடிக்கின்றனர் என்கிறார் வலயப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜுன் 22

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்துக்குச் சங்கீதம் மற்றும் சித்திரப் பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லை என்று பெற்றோர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். சில வருடங்களாகத் தமது பாடசாலையில் குறித்த பாடங்களுக்கான ஆசிரியர்களை நியமனம் செய்து தருமாறு வலயக்கல்வி பணிப்பாளரிடமும் கல்வி அமைச்சிடமும் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று பெற்றோர்கள் மற்றும் பாடசாலைசமூகத்தினர் கவலை தெரிவித்துள்ளனர். எனவே உரிய ஆசிரியர்களை விரைவில் நியமிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"குறித்த பாடசாலைக்குச் சித்திரபாட ஆசிரியர் தற்காலிகமாகபகுதிநேர ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். சங்கீத பாட ஆசிரியர் நியமனத்தில் எமது வலயத்துக்குத் தொடர்ந்தும் பற்றாக்குறையே ஏற்பட்டுள்து. எமது வலயத்துக்கு உட்பட்ட நாகர்கோவில் மகாவித்தியாலயம், செம்பியன் பற்று அ.த.க பாடசாலை , ஆளியவளை சி.சி.த.க பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், உடுத்துறை மகாவித்தியாலயம், கட்டைக்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை போன்ற பாடசாலைகளிலும் சங்கீத ஆசிரியர்கள் மற்றும் நடன ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றது.

எமது பிரதேசத்துக்கு வருவதற்கு ஆசிரியர்கள் விரும்புகிறார்களில்லை. புதிதாக நியமனம் வழங்கப்படுவோரையும் கல்வியியற்கல்லூரிகளில் இருந்து வெளியேறுபவர்களையுமே நியமிக்க வேண்டிய தேவை உள்ளது. விரைவில் அவை நடைமுறைப்படுத்தபடும்"-என்று வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (எ-4,114,160)

# போதையில் ஓடியவரின் சாரதிப் பத்திரம் பறிப்பு

## தண்டம் அறவிட்டு அனுப்பப்பட்டார்

மதுபோதையில் வாகனம் செலுத்தியவரின் சாரதி அனுமதிப் பத்திரத்தை தண்டத்துடன் 3 மாதங்களுக்குத் தடுத்து வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

கொடிகாமம் பொலிஸார் மதுபோதையில் வாகனம் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டுடன் வாகனச் சாரதிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். அது நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கு பதில் நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது சாரதி குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதன்போதே சாரதிப் பத்திரத்தைத்தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டதோடு, 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது. (எ-4,9)

## கண்டி வன்முறை; நால்வருக்கு பிணை

கண்டி, ஜூன் 23

கண்டிப் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்தவன்முறைச்சம்பவத்தில்கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நான்கு பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தெல்தெனிய நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபர்கள் நேற்று முற்படுத்தப்பட்ட போது பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டது.

ரொக்கப் பிணை மற்றும் 5 இலட்சம் ரூபா இரண்டு சீரப்பிணையில்சந்தேகநபர்கள்விடுவிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்களுக்கு வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை எதிர்வரும் ஜூலை மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ந-ரி5)

## முச்சக்கர வண்டி விபத்து: ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 23

கொழும்பு-கண்டிபிரதானவீதியின்கரபனப்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்று அதிகாலை நடந்தது.

கண்டியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டி இயந்திரக் கோளாறால் பாதை ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் படுகாயமடைந்தவர்கேகாலைமருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்தார்.

கேகாலை, கடானவீதியைச்சேர்ந்த38வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். விபத்து ஏற்பட்ட பின்னர் முச்சக்கர வண்டிச் சாரதி தப்பிச் சென்றுள்ளதுடன் கேகாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர். (ந-ரி5)

## கசிப்பு உற்பத்தி செய்த மூவர் கைது

சிலாபம், ஜூன்23

சிலாபம்மெரவிலப்பிரதேசத்தில்கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டபெண்ணொருவரும்இரண்டுஆண்களும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். பொலிஸாருக்குக் கிடைத்தஇரகசியத்தகவலுக்கமையமேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்எனத்தெரிவிக்கப்பட்டது. இதன்போதுகசிப்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)




# வடக்கு பட்டதாரிகள் நேற்று கவனவீர்ப்பு

### தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 23

**வடமாகாண வேலை தேடும் பட்டதாரிகள் சமூகம் ஏற்பாடு செய்திருந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் முன்பாக இடம்பெற்றது.**

“எமது பட்டதாரிகளுக்கு இடம்பெற்ற நேர்முகத் தேர்வானது முறையற்ற விதத்தில் இடம்பெற்றுள்ளது. ஒவ்வொரு பட்டியலுக்கும் ஒவ்வொரு விதமான புள்ளித்திட்டம் வழங்கப்பட்டு அதனடிப்படையிலே பட்டதாரிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இது ஒரு தவறான முறையாகும். உரியமுறையில் எந்தப் பட்டதாரிகளும் பாதிக்காதவண்ணம் இந்த நியமனங்களை அரசும் ஆண்டு அடிப்படையில் விரைந்து வழங்க வேண்டும். எமக்குஒருசரியானதீர்வுகிடைக்கும் வரை இந்தப்போராட்டமானது தொடர்ந்து நடத்தப்படும்” என்று வடமாகாண வேலை தேடும் பட்டதாரிகள்சங்கத்தின்தலைவர்தெரிவித்தார்.

“எமது இந்தப் போராட்டத்துக்கு அரசே பொறுப்பேற்கவேண்டியநிலைகாணப்படுகிறது. பட்டதாரிகள்பலரும்சான்றிதழ்களைப்போர்காலச்சூழ்நிலையில் தவறவிட்டுள்ளனர். எனவே அவர்களுக்கு அந்தப் புள்ளித்திட்டம் வழங்கும் நிலை பெரும்தாக்கத்தை ஏற்படுத்தும்நிலையுள்ளது. எனவேஅரசானதுபுள்ளித்திட்டத்தைத்தவிர்த்து பட்டச்சான்றிதழ் திகதி அடிப்படையில் முறையானசரியானவகையில்நியமனங்களைவழங்க வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் எமது பட்டதாரிசமூகமானதுதொடர்ந்துபோராட்டத்தை முன்னெடுக்கும். அண்மையில் 20ஆயிரம் பேரை உள்ளெடுக்கும் வகையில் நடைபெற்ற நேர்முகத்தேர்வில்வழங்கப்பட்டபுள்ளித்திட்டங்கள்பெரும்குறைபாடுகள்மற்றும்அரசியல்தலையீடுகள் உள்வாங்கியதாகக் காணப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் 3ஆயிரத்து500 பட்டதாரிகள் உள்ளனர் அதில் வெளிவர இருக்கின்ற பெயர்ப்பட்டியலில்350பேரின்பெயர்கள்தான் இருப்பதாக குறிப்பிடப்படுகிறது. இது இந்தப் பட்டதாரிகளுக்கு வழங்கப்படுகின்ற மிகப்பெரிய அநீதியாகும்.அரசு பொருத்தமான பொறிமுறையைப்பயன்படுத்திப்பட்டதாரிகளை உள்ளீர்க்க வேண்டும்” என்று போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் தெரிவித்தனர். மன்னாரிலும் வேலை தேடும் பட்டதாரிகள் நேற்று இரண்டாவது நாளாகவும்மன்னார்மாவட்டச்செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். (ந,ரி5,114,56)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன்23

வீரகெட்டிய முல்கிரிகல பிரதேசத்தில் வெளிநாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட துப்பாக்கி மற்றும் மூன்று ரவைகளுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக்கிடைத்த தகவலொன்றுக்கு அமையவே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர், முல்கிரிகல பிரதேசத்தைச்சேர்ந்த 25 வயதானவர்எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்நேற்றுவலஸ்முல்ல நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந-ரி5)

## துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன்23

ஹிக்கடுவையில் நேற்றுக்காலைஇடம்பெற்றதுப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். ஹிக்கடுவை நாரிகம விடுதி ஒன்றின் அருகே இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது. இதில் 31 வயதான சமிந்த குமார என்பவரே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த நபர் இராணுவத்தில்சிப்பாயாகப் பணியாற்றியிருப்பதுடன், 2008ஆம் ஆண்டு தொடக்கம் இராணுவத்திலிருந்து தப்பிதலைமறைவாக வாழ்ந்து வந்தமையும் தெரிய வந்துள்ளது.

சூட்டுக்கு இலக்கானவர்இரண்டுதுப்பாக்கிகள் வைத்திருந்தமை பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற 3 படுகொலைசம்பவங்கள் தொடர்பில் உயிரிழந்தவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-ரி5)

## வெளிநாட்டுநாணயங்களுடன் இந்திய நாட்டவர் கைது

கொழும்பு, ஜூன்23

சுமார் ஒரு கோடிபெறுமதியான அமெரிக்கடொலர்களைச் சட்டவிரோதமாகசீனாவுக்குக்கொண்டுசெல்லமுற்பட்ட இந்தியரொருவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தின் சுங்கப் பிரிவால் நேற்று இவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

54 வயதான இந்தியர் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் ஓமானில் இருந்து இலங்கை வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவரின் பயணப்பையில் இருந்து 60 ஆயிரம் அமெரிக்கடொலர்கள்மறைத்து வைக்கப்பட்டிருந்தநிலையில்கைப்பற்றப்பட்டன.

இந்தச்சம்பவம்தொடர்பில்மேலதிகவிசாரணைகளைப்பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (ந-ரி5)



## கட்டுப்பாட்டை இழந்த கார் விபத்து

### காரில் பயணித்தவர்கள் காயம்

வெள்ளவத்தை பம்பலப்பிட்டிப்பகுதியில்வேகக்கட்டுப்பாட்டைஇழந்த கார் ஒன்று கால்வாய்க்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்று நடந்தது. பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரிக்கு அருகிலுள்ள பாலத்துடன் மோதிய கார் கடுமையாகச் சேதமடைந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. காரில் பயணித்தவர்கள் ஆபத்தான நிலையில் களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)

## வாகன விபத்தில் இருவர் காயம்

நுவரெலியா அம்பேவெல பிரதான வீதியில், நிறுவனத்துக்கு முன்னால் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்று மதியம் நடந்தது. நுவரெலியாவிலிருந்து அம்பேவெலப் பகுதியை நோக்கிச் சென்ற லொறியுடன், அம்பேவெலப்பகுதியிலிருந்துநுவரெலியாப்பகுதியைநோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி மோதியே விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது. முச்சக்கரவண்டியில் பயணித்த இருவரே விபத்தில் படுகாயங்களுக்கு உள்ளாகிநுவரெலியாமாவட்டமருத்துமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தவிபத்துத்தொடர்பானமேலதிகவிசாரணகளை பட்டிப்பொலப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ந-ரி5)

## புழுதிப் புயலின் தாக்கத்தை படம்பிடித்தது கியூரியா சிட்டி


வொஷிங்டன், ஜூன் 23
செவ்வாய் கிரகத்தில் அண்மையில் வீசிய புழுதிப் புயலின் தாக்கங்களை கியூரியா சிட்டி விண்கலம் படம்பிடித்துப் பூமிக்கு அனுப்பியுள்ளது. செவ்வாயில் கடந்த ஒரு வாரகாலமாக புழுதிப் புயல் வீசிவருகிறது.
செவ்வாயில் அமெரிக்க விண்வெளி நிலையமான நாசா அனுப்பிய கியூரியா சிட்டி விண்கலம் முகாமிட்டு ஆய்வு நடத்தி வருகிறது. இந்த விண்கலம் புழுதிப் புயலால் செவ்வாயில் ஏற்பட்டுள்ள தாக்கங்களை ஒளிப்படம் எடுத்து பூமிக்கு அனுப்பியுள்ளது. (ம)



## ஜோர்டானில் மெர்க்கல்

ஜேர்மனியின் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல் ஜோர்டானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.
மெர்கலுக்கும் ஜோர்டான் மன்னருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கச்சாய் எண்ணெய், பாதுகாப்பு, தொழில்நுட்பம், இராணுவத் தளபாடம், பால் பொருள்கள், உணவுப் பொருள்கள் உள்ளிட்ட துறைகளில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.
மெர்க்கலுக்கு மன்னர் மாளிகையில் சிறப்பான வரவேற்பு வழாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





பன்னாட்டு யே
உலகெங்கும்
னம் கொண்ட
இந்தியாவின் உ
நடைபெற்ற யே
யொன்றில் இந்
மையமைச்சர்
கலந்து கொண்ட

அமெரிக்காவுக்குள் சென்ற

# அகதிக் குழந்தைகளுக்
# மனித உரிமை மீறல்கள

அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக வரும் அகதிகளுக்கும், அவர்களின் குழந்தைகளுக்கும் பல்வேறு விதமான கொடுமைகள் இளைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அந்தக் குழந்தைகளை நிர்வாணமாக்கியும், கைகளைக் கட்டியும், இருட்டு அறைகளில் அடைத்தும் பல்வேறு உரிமை மீறல்கள் நடந்துள்ளன.
வெர்ஜினியா மாநிலத்தில் ஸ்டான்டன் நகர் அருகே செனாடோ சிறுவர்கள் காப்பகத்தில் குழந்தைகளின் உரிமை மீறல்கள் நடந்துள்ளமை தெரியவந்துள்ளது. மெக்சிக்கோ, மத்திய அமெரிக்கநாடுகளில் இருந்து வரும் அகதிகள் சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறும் பொருட்டு எல்லைகளைக் கடக்கும் போது பொலிஸாரிடம் சிக்குகின்றனர். இவர்களைக் கைது செய்த பொலிஸார் வயதுவந்த அகதிகளைக் குடியேற்றச் சிறைகளிலும், அகதிகள் முகாம்களிலும், சிறுவர்களை காப்பகங்களிலும் அடைத்து வைத்தனர்.
இந்தக் காப்பகத்துக்குள் சென்றவிட்டு திரும்பிய குழந்தைகள் மேம்பாட்டுச் சிறப்பு அதிகாரி, அங்கு அகதிச் சிறுவர்களுக்கு பல்வேறு வகையான உரிமைமீறல்கள் நடப்பதை கண்டுபிடித்துள்ளார். சிறுவர்களை நிர்வாணமாக்குவதும், அவர்களை இருட்டறையில் அடைத்தல், மிகப்பெரிய சுமையை தலையில் வைத்துப் பல மணிநேரம் இருத்துதல் போன்ற கொடுமைகள் நடந்துள்ளன. இது குறித்து அந்த அதிகாரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். ஆனால், அரசு சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் "காப்பகங்களில் எந்தவகையான விதிமுறை மீறல்களும் நடக்கவில்லை, அகதிச் சிறுவர்கள் மனிதநேயத்துடன் நடத்தப்படுகிறார்கள்" என்று தெரிவித்துள்ளனர்.
இது குறித்து செனாடோ சிறுவர்கள் காப்பகத்தின் வசதிகளை ஆய்வு செய்யும் அதிகாரி கெல்சே வாங் தெரிவிக்கையில், "இந்தக் காப்பகத்தில் இருக்கும் சிறுவர்களில் பெரும்பாலானோர் எல்லை வழியாகச் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள்
போது கைது செய்யப்பட்டவர்கள். அவ
ளாக வந்தவர்களிடம் இருந்து பிரிக்கப்
கள் அல்ல. இங்குள்ள சிறுவர்களின்
மீறப்படும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது"
வித்துள்ளார்.



## அணுவாயுதங்களுக்குத் தீர்வு என கிம்–ஜின் பிங் அறிவிப்பு

பீஜிங், ஜூன் 23
அணுவாயுதப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், சீன அதிபர் ஜி ஜின்பிங் இருவரும் கூட்டாக அறிவித்தனர்.
கிம் ஜோங் உன் சீனாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். நேற்றுமுன்தினம் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்திக்கையிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.
கிம் ஜோங் உன், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இடையிலான சந்திப்பும் அண்மையில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பை அடுத்து அணுவாயுதங்களைக் கைவிட வேண்டும் என்று கிம் ஜோங் உன்னைக் கேட்டிருந்தார் ட்ரம்ப். அவ்வாறு அணுவாயுதங்களைக் கைவிட்டால் வடகொரியா மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.
இதையடுத்தே ஜின் பிங் கிம் ஜோங் உன் இடையிலான சந்திப்பு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



## மனிதர்களின்
## அவர்கள் என

வொஷிங்டன், ஜூன் 23
வீடுகளில் செல்லப்பிராணிகளாக வளர்க்கப்படு
மனிதர்களின் முகபாவங்களைக் கொண்டு அவர்க
களை அறிந்து கொள்ளும் திறன் கொண்டவை எ
கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
ஸ்பிரிஞ்சர் என்ற தனியார் நிறுவனம் இந்த ஆய்வை
ளது. "நாய்கள் தங்கள் எஜமான்களின் முகபாவத்திற்கு
யைத் திருப்புகின்றன. கோபம், பயம் மற்றும் சந்தோ
கும் போது தலையை இடது பக்கமாக திருப்புகின்றன.
முகத்தை வைத்திருக்கும் போது வலது பக்கமாக தலை
புகின்றன. ஒருவேளை அவர்கள் சோகமாக இருந்தால்
இதயத்துடிப்பு மிகவும் அதிகரிக்கிறது. இந்த ஆய்வு ம
கும், நாய்களுக்கும் இடையே உள்ள பாசத்தை எடுத்து
என்று அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ாட்டு யோகா தினம்
ங்கும் நேற்றுமுன்தி
கொண்டாடப்பட்டது.
வின் உத்தகாண்டில்
பெற்ற யோகா நிகழ்சி
றில் இந்தியத் தலை
மைச்சர் மோடியும்
கொண்டார். (ம)

## க்கு
## ள்!



ாவுக்குள் நுழையும்
ள். அவர்கள் அகதிக
ரிக்கப்பட்ட குழந்தை
ர்களின் உரிமைகள்
மற்றது" எனத் தெரி
(ம)

# ஈராக் நாடாளுமன்றத் தேர்தலில் மோசடி

## வாக்குகளைக் கைகளால் எண்ணுவதற்கு உத்தரவு



பக்தாத், ஜூன் 23

ஈராக் நாடாளுமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகளை கைகளால் எண்ண அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

ஈராக் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த மே மாதம் 12ஆம் திகதி நடைபெற்றது. இதில் முதல் முறையாக மின்னணு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. புதிய நடைமுறையின்படி வாக்காளர்கள் தங்களது அடையாள அட்டையை மின்னணு இயந்திரத்தில் செருகி, விரல் ரேகையைப் பதிவு செய்ய வேண்டும். வாக்காளரின் அடையாளம் உறுதி செய்யப்பட்ட பிறகு அவருக்கு பிரத்தியேக வாக்குச்சீட்டு வழங்கப்படும். அதில் வாக்கை பதிவு செய்த பிறகு, அங்குள்ள ஸ்கேனரில் வாக்குச் சீட்டை செலுத்த வேண்டும். அந்த ஸ்கேனர் இயந்திரம், யாருக்கு வாக்குச் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பதிவு செய்து கொள்ளும்.

பழைய வாக்குச்சீட்டு முறைக்கு மாற்றாக புதிய நடைமுறையின் மூலம் நடத்தப்பட்ட தேர்தலுக்கு பல்வேறு கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. கடந்த மே 14ஆம் திகதி முடிவுகள் வெளியிடப்பட்டன. மொத்தமுள்ள 329 தொகுதிகளில் சியா மதகுரு முக்ததா அல் சதர் தலைமையிலான கூட்டணி 54 இடங்களைக் கைப்பற்றியது. ஈரானின் ஆதரவு பெற்ற ஹைதி அல்ஆமிரி தலைமையிலான கூட்டணி 47 இடங்களையும் தற்போதைய தலைமை அமைச்சர் ஹைதர் அல்அபாதி நாசர் தலைமையிலான கூட்டணி 42 இடங்களையும் பெற்றது. ஆட்சியமைக்க 165 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இந்த பின்னணியில், தேர்தலின்போது ஏராளமான மோசடிகள் நடைபெற்றதாக முறைப்பாடுகள் எழுந்தன.

குறிப்பாக ஸ்கேனர் இயந்திரத்தில் மோசடி நடைபெற்றுள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டது. இதுகுறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அனைத்து வாக்குச்சீட்டுகளையும் மீண்டும் கைகளால் எண்ண வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதே விவகாரம் தொடர்பாக அந்த நாட்டு உச்ச நீதிமன்றத்திலும் வழக்குத் தொடரப்பட்டது. இதையடுத்தே வாக்குகள் அனைத்தையும் கைகளால் எண்ணுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)



# சீனாவில் நாய்க்கறி விழா!

பீஜிங், ஜூன் 23

சீனாவின் யூலின் நகரில் நாய்க்கறி விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சீனாவில் வெயில் காலத்தின்போது நாய்க் கறி சாப்பிட்டால் உடலுக்கு நல்லது என்று கருதப்படுகிறது. இதனால் சீனாவின் யூலின் நகரில் ஆண்டுதோறும் ஏராளமான நாய்கள் பலியிடப்பட்டு இறைச்சியாக்கப்படுகின்றன. இந்த ஆண்டுக்கான விழா கடந்த 20ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. சுமார் 10ஆயிரம் நாய்கள் இறைச்சிக்காகக் கொல்லப்படவுள்ளன. (ம)

# இறைச்சிக்காக நாய்களை கொல்லத் தடை

## தென்கொரியாவில் சட்டம்



சியோல், ஜூன் 23

தென்கொரியாவில் இறைச்சிக்காக நாய்களைக் கொல்வது சட்டவிரோதம் என்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

தென்கொரியாவில் நாய்களின் இறைச்சியை மக்கள் விரும்பிச் சாப்பிடுகின்றனர். இதனால் ஆண்டுதோறும் சுமார் 10 லட்சம் நாய்கள் இறைச்சிகாகக் கொல்லப்படுகின்றன. இதை எதிர்த்து 'கேர்' என்ற அமைப்பு போர்க்கொடி தூக்கியுள்ளது.

நாய்களைக் கொல்வதைத் தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி நீதிமன்றில் அந்த அமைப்பு வழங்குத் தொடர்ந்தது. இதன்படி இறைச்சிக்காக நாய்களைக் கொல்வது சட்டவிரோதம் என்று தீர்ப்பு வந்துள்ளது. (ம)

# ன் முகபாவங்களைக் கொண்டு
# ண்ணத்தை நாய்கள் அறியும்

கப்படும் நாய்கள்
வர்கள் எண்ணங்
வை என ஆய்வில்

ஆய்வை நடத்தியுள்
த்திற்கு ஏற்ப தலை
சந்தோசமாக இருக்
றன. ஆச்சரியமாக
ாக தலையை திருப்
ருந்தால் நாய்களின்
ஆய்வு மனிதர்களுக்
எடுத்துக்காட்டுகிறது'
(ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மனிதன் - விலங்கு மோதலுக்கு உரிய தீர்வு அவசியம்

மனிதனுக்கும்விலங்குக்கும்இடையிலானமோதல்வடக்கு கிழக்கு மாகாணங்களில் அண்மைக் காலமாக அதிகரித்திருக்கிறது. காடுகளின்எல்லையையொட்டி உள்ளமக்கள்யானைகளின்தொல்லையால்அவதிப்படுகின்றோம்என்று நாளாந்தம் முறைப்படும் அளவுக்கு நிலமை மோசமாகி இருக்கின்றது. இப்போது அது யானையைத் தாண்டி சிறுத்தையில் வந்து நிற்கின்றது.

கிளிநொச்சி அம்பாள் குளம் கிராமத்திற்குள் புகுந்த சிறுத்தைப் புலியை மக்கள் அடித்தே கொன்றிருக்கிறார்கள். வனஉயிரிகள் திணைக்களத்தைச்சேர்ந்த அலுவலர் உட்பட 11 பேரைஇந்தச் சிறுத்தைப் புலி கடித்துவிட்டது என்பதால் அதனை அடித்தே கொன்றுவிட்டார்கள்.

நிலவும் கடும் வரட்சிச் சூழல் நீர் மற்றும் உணவைத் தேடி சிறுத்தையைகிராமத்திற்குள்இழுத்துவந்திருக்கக்கூடும். இலங்கைக் காடுகளில் உள்ள இயற்கையான பெரும் வேட்டை விலங்கு சிறுத்தைப்புலிகள்தான். வன்னிக்காட்டுக்குள்வங்கப்புலிகள் இருக்கின்றன என்கிற வதந்திகள் இருக்கின்றபோதும் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ தகவல் அல்ல அது. காட்டின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் திடப்படுத்துவதற்கும் சிறுத்தையின் இருப்பு முக்கியமானது. அது பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய விலங்காக இருக்கின்றபோதும் மனிதஉயிர்களுக்குமுன்அதன்உயிர்துச்சமாகமதிக்கப்படுவது வருத்தத்துக்குரியதே.

காடுகளை அழித்து விலங்குகளின் வாழ்விடங்களை மனிதன் ஆக்கிரமித்துக்கொண்ட பின்னர் ஒரு சிறுபரப்புக்குள் தனது நடமாட்டத்தையும் வாழ்க்கையையும் கட்டுப்படுத்திக்கொள்ளுமாறு விலங்குகளை நிர்ப்பந்திக்கிறான். பெரும்பாலான காலங்களில் இந்த நெருக்கடியைத் தாங்கிக்கொள்ளும் விலங்குகள் சிலவேளைகளில், சூழலின் தாக்கம் காரணமாக கிராமங்க ளுக்குள் நுழைந்துவிடுவதால் மனிதனுடனான மோதல் ஆரம்பிக்கிறது. விலங்குகளின் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்ட பின்னர் அவை தமது இடங்களுக்குள் நுழைவதைப் பொறுக்கமுடி யாமல் அவற்றை மனிதர்கள் கொல்வது நியாயமான செயலல்ல.


அதேநேரத்தில் காடுகளின் எல்லையில் மக்களைக் குடியேற அனுமதித்த அரசு அந்த மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைஎடுப்பதற்குத்தவறுவதும்கண்டனத்திற்குரியதே! வன்னியில் பெருமளவு நிலப்பரப்பை வனஉயிரிகள் திணைக்களம் தனக்குரியதாக்குவதில் காட்டும் அக்கறையை அந்த உயிரிகளால் மக்களுக்கு ஏற்படும் தாக்கத்தை முறையானவிதத்தில் கட்டுப்படுத்துவதில் காட்டுவதில்லை. இதனாலேயே சிறுத்தைவிடயத்திலும் வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகளின் கட்டுப்பாட்டை மீறி சிறுத்தை உயிரிழக்கும் நிலமையை ஏற்படுத்தியிருக்கிறது.

காட்டையும்காட்டில்உள்ளஉயிரிகளையும்மக்களின்ஆதரவின்றி அதிகாரிகளால் ஒருபோதும் பாதுகாக்க முடியாது. வன உயிரிகளுடன் இணக்கமாகவிட்டுக்கொடுப்புகளுடன்நெளிவுசுளிவு தெரிந்துவாழ்ந்தவர்கள்தான்இந்தமக்கள். போர்நடந்துகொண்டிருந்தபோது காடுகளுக்குள் அதீத மனித நடமாட்டம் இருந்தபோதும்கூட எல்லைக் கிராமங்களில் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான மோதல் மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால் போர் முடிந்த பின்னர் இந்த மோதல் அதிகமாகியிருப்பதும் இதனால் இரண்டு தரப்புகளுக்கும் சேதங்கள் ஏற்படுவது ஏன்?என்பதும்கூர்ந்து ஆராயப்படவேண்டியவிடயங்கள்.

வேறு மாவட்டங்களில் குறிப்பாகச் சிங்களப் பகுதிகளில் மனிதர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் வன உயிரிகளைப் பிடித்துவந்து வடக்குக்காடுகளில் விட்டுவிடுகிறார்கள் அதிகாரிகள் என்கிற குற்றச்சாட்டு தமிழ் மக்களிடம் இருக்கின்றது. இந்தக் குற்றச்சாட்டுக்கு அடிப்படை ஆதாரங்கள் எவையும் இல்லை என்கிறபோதும் அதிகரித்துவரும் மோதல் இத்தகைய சந்தேகங்களை வலுவடையச் செய்யும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

காட்டின்பல்வகைத்தன்மை மனிதர்களின்வாழ்வுக்கு மிகமுக்கியம் என்பதால் அதனைக் குலைத்து எமது சூழலை நாமே அழித்துப்பாழ்படுத்திவிடாமல், அதேநேரம்வனஉயிரிகளிடம் இருந்துமனிதர்களையும்பாதுகாத்துக்கொள்ளும்வகையிலான சிறந்த பொறிமுறைகள் கண்டறியப்படவேண்டும். அதுவும் போரின்அழிவில்இருந்துஇப்போதுதான்மீண்டுவரும்வடக்கு கிழக்கு மாகாணங்களில் வனஉயிரிகளினால் ஏற்படும் சேதம் மனிதர்களைஇலகுவில்கிலேசமடையவும் கோபமடையவும் செய்துவிடும் என்பதால்கூடுதல் அக்கறையுடன்இந்தவிடயம் அணுகப்பட்டு உரிய தீர்வு காணப்படுவது அவசியம்.

# சுதர்சனின் மறைவானது பொலிஸின் அத்துமீறல்



ஜெ.சுலக்சன்

கடந்த 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தில் திருவிழாத் திருப்பலி வெகு கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், திருவிழாவின் தேர்ப் பவனியின்போது அந்தோனியாரின் சொரூபம் வீழ்ந்து நொறுங்குகிறது. ஏதோ ஓர் அசம்பாவிதம் இடம்பெறப் போகிறது அதற்குரிய அறிகுறிதான் இதுவென்று திருப்பலியில் கலந்து கொண்ட மக்கள் புலம்பி அழுகின்றனர். அன்றைய தினம் மாலையே மல்லாகத்தில் ஓர் பலியெடுப்பு நடந்து முடிந்துவிட்டது.

மல்லாகம் சகாயமாதா ஆலயத்தின் திருவிழா வுக்கான கொடியேற்றம் மாலைப் பொழுதில் மந்த மாருதத் தென்றல் தாலாட்ட ஆரம்பிக்கிறது.

> கடந்த மூன்று வருடங்களில் பொலிஸாரால் கொல்லப்பட்ட ஐந்தாவது நபராக சுதர்சன் உள்ளார். 2016ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ஆம் திகதி கொக்குவில் குளப்பிட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
> பொலிஸாரின் சமிக்ஞையைப் புறக்கணித்தமையால் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டு ஆடி மாதம் 9ஆம் திகதி துன்னாலையைச் சேர்ந்த இளைஞரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். கள்ள மணல் ஏற்றிச் சென்ற வாகனத்தைச் சுட்டபோது அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

மாலை 6.50 மணியிருக்கும் சகாயமாதா ஆலயம் அமைவுபெற்றுள்ள பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்கின்றன. அந்தப் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய பாக்கியராஜா சுதர்சன் என்கிற இளைஞர் குருதி வெள்ளத்தில் துடிதுடித்துச் சாகின்றார். பொலிஸாரின் துப்பாக்கிச் சன்னம் காவு வாங்கிய மற்றொரு தமிழ் இளைஞனாக சுதர்சன் பதிவாகினார்.


### நடந்தது என்ன?

சம்பவம் தொடர்பில் ஆலய வழிபாட்டில் கலந்துகொண்ட ஒருவரைக் கேட்டபொழுது, "ஆலயத்தினுள் திருப்பலி வழிபாடுகள் மும்முரமாக இடம்பெற்றுக் கொண்டிருந்த பொழுது 6.40 மணியளவில் மோட்டார் சைக்கிள்களில் பத்து பேர் கொண்ட கும்பல் கைகோடரி, வாள்களுடன் ஒருவரை துரத்தி வந்தது. அவர் ஆலயத்தின் அருகாமையில் ஓடி ஒழிந்து கொண்டார். ஆலய வாயிலில் சத்தம் கேட்டபொழுது ஆலயத்தினுள் நின்ற பிரதேச வாசியொருவர் வெளியே வந்து பார்த்த பொழுது ஆயுதக் கும்பல் அவரை திடீரெனத் தாக்கத் தொடங்கியது. ஆயுதக் கும்பலுக்கு எதிராக குறித்த இளைஞனும் தற்காப்புக்காகச் சண்டையிட்டார். தலைமை வீதியில் சண்டை நீண்டு சென்றது. தெல்லிப்பழை வீதியை நோக்கி மல்லாகத்தில் இருந்துவந்த முச்சக்கரவண்டி அந்தச் சண்டைக்குள் வழிமறிக்கப்பட்டது. அதிலிருந்த இரண்டு பொலிஸாரில் ஒருவர் இறங்கி அந்தப் பகுதியில் சண்டை பிடிப்பவர்களை நோக்கி சுடத் தயாரானார். இதைப் பார்த்த சுதர்சன் தனது உறவினரை (ஆயுதக் குழுவுக்கு எதிராகச் சண்டையிட்ட பிரதேச வாசி) பாதுகாக்கும் பொருட்டு கட்டிப் பிடித்து இழுக்க முற்பட சுதர்சனை துப்பாக்கி ரவைகள் பதம் பார்க்கின்றன" என்றவாறாகக் கருத்துத் தெரிவித்தார்.

### மக்கள் கொதிப்பு

அதன் பின்னர் சகாயமாதா ஆலய முன்றலில் வீதியை இடைமறித்தும், வீதியின் நடுவே கற்களை வைத்தும், வீதியின் நடுவே படுத்திருந்தவா

றும், அமர்ந்திருந்தவாறும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உடனடியாக 200க்கும் மேற்பட்ட பொலிசார் அந்த இடத்தில் குவிக்கப்பட்டனர். எனினும் பொலிஸார் சம்பவ இடத்துக்குள் நுழைவதற்கு மக்கள் அனுமதிக்கவில்லை. இளைஞர்கள் தேடுதல் நடத்தி மூன்று துப்பாக்கி ரவைகளை எடுத்துப் பத்திரப்படுத்தினர். நிலமையின் தீவிரம் கட்டுக்குள் அடங்காமல் சென்றதை அடுத்து சிறப்பு அதிரடிப் படையின் உதவி கோரப்பட்டு சம்பவ வட்டாரத்தில் அவர்கள் குவிக்கப்படுகின்றனர்.



### நீதவானின் வருகை

இரவு 9.45 மணியளவில் மல்லாகம் நீதவான் ஜீட்சன் பொலிஸ் பாதுகாப்புடன் சம்பவ இடத்துக்கு வருகைதந்து மக்களுடன் பேச்சில் ஈடுபட்டார். நடந்தவற்றைக் கேட்டறிந்தார். அதைத் தொடர்ந்து சடலத்தைப் பார்ப்பதற்காக மருத்துவமனைக்குச் சென்றார். இரவு 11 மணியளவில் மீண்டும் சம்பவ இடத்துக்கு வருகைதந்த நீதவான் தனது விசாரணை உள்ளடக்கத்தை வாய்மொழியாக மக்களிடம் எடுத்துக் கூறினார். ஆலய வளாகத்து இளைஞர்களால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நபர், இறந்தவரை மருத்துவ மனைக்குக் கொண்டுசென்ற நபர், மற்றும் முச்சக்கரவண்டி சாரதி என்போரை தான் விசாரித்தார் என்றும், இரண்டு குழுக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஏழாலைப் பகுதியில் இறந்த ஒருவரின் விசாரணைக்காக நீதவானின் அனுமதிபெற்று தெல்லிப்பழை மருத்துவமனையை நோக்கிச் சென்ற சுன்னாகம் பொலிஸாரின் முச்சக்கர வண்டி மறிக்கப்பட்டு மோதல் இடம் பெற்றதாலேயே சூட்டுச் சம்பவம் இடம் பெற்றது என்றவாறாக அவர் தெரிவித்தார்.

மூன்று பேர் உடனடியாகக் கைது செய்யப்பட்டனர். இறந்த இளைஞனை தூக்கி சென்ற இளைஞனும் கைதுசெய்யப்பட்டார். அவருடைய ஆடை குருதியால் தோய்ந்திருந்தது. அந்த ஆடையுடனேயே மறுநாள் அவர் நீதிமன்றில் முன்னி லைப்படுத்தப்பட்டார். இறந்த நபருடைய குருதிச் சகதியில் தோய்ந்திருந்த அவரை ஓர் இரவு முழுவதுமாக அதே ஆடையுடன் வைத்திருந்து மறுநாள் நீதி மன்றுக்கு அழைத்துச் சென்றமையானது அபத்தம். அடிப்படை மனிதாபிமானம் அற்ற செயலும்கூட




### கைதுகள்

பொலிஸாரின் கைது நடவடிக்கை இடம்பெற்றது. மூன்று பேர் உடனடியாகக் கைது செய்யப்பட்டனர். இறந்த இளைஞனை தூக்கி சென்ற இளைஞனும் கைதுசெய்யப்பட்டார். அவருடைய ஆடை குருதியால் தோய்ந்திருந்தது. அந்த ஆடையுடனேயே மறுநாள் அவர் நீதிமன்றில் முன்னி லைப்படுத்தப்பட்டார். இறந்த நபருடைய குருதிச் சகதியில் தோய்ந்திருந்த அவரை ஓர் இரவு முழுவதுமாக அதே ஆடையுடன் வைத்திருந்து மறுநாள் நீதி மன்றுக்கு அழைத்துச் சென்றமையானது அபத்தம். அடிப்படை மனிதாபிமானம் அற்ற செயலும்கூட.

### சுடவேண்டிய தேவை இல்லை

துப்பாக்கிச் சூட்டை நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர். சம்பவம் இடம்பெற்ற இடம் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்டது. எனின் ஏன் அவர் தனது பணிக்கு அப்பாற்பட்ட இடத்தில் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டார். சூட்டுச் சம்பவ இடத்துக்கு சுமார் 100 மீற்றர் தூரத்தில் அதாவது கூப்பிடு தூரத்திலேயே காங்கேசன்துறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், காங்கேசன்துறை சிறப்பு குற்றப்பிரிவு வடமாகாண சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் காரியாலயம் என்பன அமைந்துள்ளன. இதனைவிட 2 கிலோமீற்றர் தூரத்திலேயே தெல்லிப்பழை பொலிஸ் நிலையம் அமைவு பெற்றுள்ளது. எனின், ஏன் இவர்களுக்கு அறிவிக்காமல் அந்த அதிகாரி தன்னிச்சையாகச் செயற்பட்டார். வாள்வெட்டுச் சம்பவம் என்று சோடிக்கும் பொலிஸார் ஏன் அந்தவேளையில் வாளுடன் நின்ற ஒருவரையேனும் சுடவில்லை என்ற கேள்வியும் எழுகின்றது. மட்டுமல்லாமல் சுடுவதானால் காலிற்குக் கீழ்தானே சுட்டிருக்க வேண்டும். உயிர் போகும் படியான சூட்டை ஏன் அந்த அதிகாரி மேற்கொண்டார்.

### இறந்தவரின் குடும்பநிலை

சம்பவத்தில் உயிரிழந்த பாக்கியராஜா சுதர்சன் சொந்த வீடு இல்லாது மேசன் வேலை செய்தே தனது இரு சகோதரிகளையும், வயோதிபத்தின் பிடியில் சிக்கி இயலாது தவித்துக் கொண்டுள்ள தந்தையையும் பராமரித்து வந்தார். இனி இவர்களின் குடும்பநிலை என்ன? அவர்கள் தமது உணவுக்கும் பொருளாதாரத்துக்கும் என்ற செய்யப் போகிறார்கள். தனது குடும்பத்துக்கு சொந்த வீடொன்றைக் கட்டிவிடுவது என்பதில் கருத்தாக இருந்த சுதர்சன் நிரந்தரமாக கல்லறை எனும் வீட்டில் உறங்கிவிட்டான்.

### ஐந்தாவது நபர்

கடந்த மூன்று வருடங்களில் பொலிஸாரால் கொல்லப்பட்ட ஐந்தாவது நபராக சுதர்சன் உள்ளார். 2016ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ஆம் திகதி கொக்குவில் குளப்பிட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பொலிஸாரின் சமிக்ஞையைப் புறக்கணித்தமையால் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டு ஆடி மாதம் 9ஆம் திகதி துன்னாலையைச் சேர்ந்த இளைஞரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். கள்ள மணல் ஏற்றிச் சென்ற வாகனத்தைச் சுட்டபோது அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 22ஆம் திகதி கொழும்புத்துறை மணியந்தோட்டப் பகுதியில் இளைஞரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த வரிசையில் ஐந்தாவது நபரானார் சுதர்சன். ஆனால் இவ்வாறு அவலச் சாவடைந்தவர்களில் எவருக்கேனும் நீதி கிடைத்ததா என்றால் இல்லை என்பதுதான் ஒற்றை வரிப் பதிலாக அமையும்.

### பலஸ்தீனர்கள் ஆகிறோமா

மத்திய கிழக்கில் உள்ள இரண்டு நாடுகள் இஸ்ரேல்-பலஸ்தீனம். இவை ஒன்றுக்கொண்டு பகமை நாடுகளும்கூட. இஸ்ரேலில் வாழ்பவர்கள் யூதர்கள் எனப்படுகின்றனர். பலஸ்தீனத்தில் வாழ்பவர்கள் பலஸ்தீனர்கள். பலஸ்தீனத்தின் பல பகுதிகளை இஸ்ரேல் படிப்படியாக ஆக்கிரமித்து வருகிறது. பலஸ்தீனத்தின் எல்லைக்குள் யூத வழிபாட்டுத் தலங்களையும் அது அமைத்து வருகிறது. இவற்றுக்கு எதிராக காசா, மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட இடங்களில் பலஸ்தீனர்கள் போராடி வருகிறார்கள். அவ்வாறு போராடும் பலஸ்தீனர்கள் யூதப் படைகளால் கொல்லப்படுவது வழமை. பின்னர் ஏன் கொன்றோம் என்கிற காரணத்தை ஐ.நா. சபைக்கு இஸ்ரேல் வழங்கும். "ஹமாஸ் தீவிரவாத ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர். அதனால்தான் கொன்றோம்" என்றவாறாக அமைந்திருக்கும் அந்த விளக்கம். அவ்வாறானதொரு பாணியைத்தான் இலங்கை பொலிஸ் திணைக்களமும் தற்போது இறுகப் பற்றிப் பிடித்துள்ளதோ என்று எண்ணத் தோன்றுகிறது. பொலிஸார், இராணுவத்தினர் ஏதேனும் தாக்குதல்களை நடத்தினால் இரண்டு சாயங்கள் முதலில் பூசப்படு கின்றன. ஒன்று புலிச் சாயம். இரண்டாவது வாழ்வெட்டுக் குழு.

இதில், இரண்டாவது ரகத்தில் சுதர்சன் இடம்பிடித்துள்ளார். இறந்தவர்கள் நிரந்தரமாக உறங்கிவிடலாம் ஆனால் உண்மைகள் அவ்வாறானவையல்ல. அவை நிச்சயம் வெளிப்பட்டடே தீரும். எதுவும் இதற்கு விதிவிலக்கில்லை எனும்போது சுதர்சனின் விவகாரம் மட்டும் விலக்கா என்ன?

## ஆசிரியருக்கான கடிதம்

# நாவற்குழியில் ஓர் தேன்பொந்து

நாவினிக்க நாமினிக்க நாவற்குழியில் தேனினிக்கத் திருவாசகத் தென்றல் இனித்தது.

அவசிய அவசரமாய்ச் சாவகச்சேரிக்கு 18.06.2018 திங்கள்கிழமை பிற்பகல் 4மணிக்குப் பேருந்தில் பயணித்தேன். வேகம் ஒருபுறம். நெரிசல் ஒருபுறம். தாகம் ஒருபுறம். இறங்க வேண்டிய இடத்தைக் கண்டுபிடிக்க மனதில் ஒரு அவசரம். கல்லடி மூட்டு வீதியடியில் இறங்கவேண்டும். அது புதிய இடம். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.பி.நவரத்தினம் வீட்டுக்குப் போகின்றவழி. பேரூ(ர்)ந்தின் வேகம் காரணமாக இறங்க வேண்டிய இடத்துக்கு முன்னதாகவே இறங்கிவிட்டேன். செய்வதறியாது முச்சக்கரவண்டியின் உதவியோடு உரிய இடத்திற்குச் சென்று திரும்பினேன். இந்தப்பயணத்தில் போகும்போதும் திரும்பும்போதும் குறிப்பாக ஓரிடத்தில் பயணிக்கும் போது உடம்பு புல்லரித்தது. நா இனித்தது. வாக்கு இனித்தது. காற்றும் இனித்தது. களைப்பும் இனித்தது. ஏன்தான் அந்த இடத்தில் மட்டும் இனிக்கிறது என்று அங்கும் இங்கும் பார்த்தேன். காரணத்தைப் புரிந்து கொண்டேன். வேறொன்றுமல்ல! திருவாசகம் முழுவதையும் கருங்கல்லிலே பொழிந்துகொண்டிருக்க, காற்றானது திருவாசகத்தில் பட்டு, தோய்ந்து நாவற்குழி பெருவீதியில் வருவோரையும், போவோரையும் திருவாசகத்தேனினால் நனைத்து எடுப்பதே தென்றலின் இனிப்புக்குக் காரணமாகும். சிவாத்துமாக்களுக்கே திருவாசக இனிப்புத் தெரியும் என்பது எவ்வளவு தூரம் சரியானதென்பதை அப்போது உணர்ந்தேன். மன்னாரிலும் ஒன்று, நாவற்குழியிலும் ஒன்று. இவ்வளவு திருவாசகத்தையும் பக்தியினாலோ அல்லது மோகன இராகத்திலோ அல்லது வாசிப்பதனாலோ முகூர்த்தநாள் அன்று பாராயணம் செய்வோமாக இருந்தால் வடமாகாணமும், இலங்கையும் நீடு வாழ்வு பெறும். சிவபுராணம் தொடக்கம் அச்சோப்பதிகம் வரை ஐம்பத்தொரு பதிகங்களையும் ஐம்பத்தொரு பக்திமான்களைக் கொண்டு சமநேரத்தில் பாடுவித்தால், உலகம் பேறடையும். செய்வார்களா? ராஜ ராஜ சோழ மன்னனுக்குப் பின்பு, சிவபூமி அறக்கட்டளையினரும், சிட்னி ஆன்மிக வள்ளல் மனமோகன் தம்பதிகளும் கருங்கல்லிலே திருவாசகத்தைப் பொழிந்திருப்பது, சிவபூமிக்கு வாய்த்த பெரும் பேறாகும். எல்லாப்புகழும் இறைவனுக்கேயாம். பொழிந்த ஒவ்வொரு விரலுக்கும் மோதிரம் அணிவிக்கலாம்.

கே.எஸ்.சிவஞானராஜா



# இன்றைய நாள்

**மேடம்:** பேச்சால் குளறுபடி உருவாகலாம். செயல்களில் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் குறைகளை உடனடியாக சரிசெய்வது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** புதிய விஷயங்களில் ஆர்வம் அதிகரிக்கும். நண்பரின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் வியாபாரம் செழிக்க தேவையான நவீன மாற்றம் செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** பேச்சில் வசீகரம் உருவாகும். சமூகத்தில் நல்ல அந்தஸ்து பெறுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். ஆதாயம் அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். குடும்பத்தில் யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேற்றுவது நல்லது. பணவரவை விட செலவு அதிகரிக்கலாம்.

**சிங்கம்:** குடும்ப விஷயங்களை பிறரிடம் பேச வேண்டாம். கூடுதல் முயற்சியினால் தொழில், வியாபார நடைமுறை சீராகும். செலவில் சிக்கனத்தை பின்பற்றவும்.

**கன்னி:** நேர்த்தியுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். இலாபம் அதிகரிக்கும். நீண்ட கால பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

**துலாம்:** கடந்த கால தவறுகளை சரி செய்வீர்கள். குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற போட்டியை சரி செய்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**விருச்சிகம்:** எதிலும் பொறுமை காப்பது நல்லது. தொழில், வியாபார நடைமுறை ஓரளவு சீராகும். முக்கியச் செலவுக்கு சேமிப்பு பணம் பயன்படும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**தனுசு:** கூடுதல் பணி உருவாகி தொந்தரவு தரலாம். பிறருக்கு உதவுவதில் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் சராசரி பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** சவால்களை ஏற்று முன்னேறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை உண்டாகும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**கும்பம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். நம்பிக்கையுடன் செயல்படுவதால் தொழிலில் வளர்ச்சி காணலாம். இலாபம் சீராக இருக்கும்.

**மீனம்:** புத்திசாதுர்யத்துடன் செயல்பட்டு வருவீர்கள். தடைபட்ட பணிகள் கூட எளிதாக நிறைவேறும். நிலுவைப் பணம் வசூலாகும்.




## ஜீன் 29இல் 'இட்லி'

இயக்குநர் வித்யாதரனின் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'இட்லி'. இந்தப் படம் எதிர்வரும் ஜீன் 29ஆம் திகதி வெளியாகவுள்ளது. இந்தப் படத்தில் சரண்யா பொன்வண்ணன், கோவை சரளா, மறைந்த நடிகை கல்பனா மற்றும் மனோபாலா, லொள்ளு சபா ஸ்வாமிநாதன் மற்றும் இமான் அண்ணாச்சி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இந்தப்படம் வங்கியைக் கொள்ளையடிக்கும் மூன்று வயதான பெண்களை பற்றிய கதையைக் கொண்டதாகும். நகைச்சுவை கலந்த படமாக உருவாகியுள்ள இந்தப் படத்தில், இந்த சமூகத்துக்குத் தேவையான கருத்துகள் படத்தின் இறுதியில் வருவது போல் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 'இட்லி' குடும்பப் படங்களின் ரசிகர்களுக்கு விருந்தாக அமை

சின்ன வயசில
பலூன்காரரிடமும்,
கொஞ்ச வளர்ந்த
பிறகு
சலூன்காரரிடமும்
ஈர்ப்பு வருவதே
இயற்கை



ஒருவன் மழையில் நனைந்து சென்று தனியார் மருத்துவமனைக்குள் நுழைந்து டாக்டரிடம் கேட்டான்..
"டாக்டர் வீட்டுக்கு வந்து பார்க்க நீங்க எவ்வளவு பணம் வாங்குவீங்க..?
என்று அதற்கு டாக்டர் "300 ரூபா வாங்குவேன்" என்றார்.
அதற்கு அவன் "அப்படியா ஓகே சீக்கிரம் கிளம்புங்க எங்க வீட்டுக்குப் போகணும் சொன்னான் என்று டாக்டரும் அவனை தன்னுடைய காரில் ஏற்றி அவன் வீட்டுக்குச் சென்றார்.
வீட்டுக்குள் நுழைந்ததும் டாக்டர் கேட்டார்..
எங்க நோயாளி என்று...?
அதற்கு அவன் சொன்ன பதிலில் டாக்டர் மயக்கம் போட்டு விழுந்தாராம்...
அப்படி என்ன தான் சொல்லியிருப்பான்...
"எங்க வீட்டில நோயாளி யாரும் இல்ல சார்... இங்க வர ஆட்டோக்காரன் 500 ரூபா கேக்கிறான். நீங்க வெறும் 300 தான் கேட்டீங்க அதான். எனக்கு வேற வழி தெரியல்ல" என்றானாம்

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 2 | | 5 | 8 | 6 | 9 |
| | | | | 9 | | 4 | | |
| | | 5 | | 7 | 8 | | | |
| 7 | 1 | | 9 | 8 | 2 | | | 4 |
| 8 | 6 | | | | 4 | 7 | | |
| | 5 | | | 6 | | | | 8 |
| 1 | | | | 2 | | | 8 | |
| | | 7 | | | | | | |
| | | 8 | 3 | | 6 | | 2 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 1 | 3 | 8 | 5 | 7 | 9 | 4 |
| 5 | 8 | 9 | 7 | 1 | 4 | 2 | 6 | 3 |
| 7 | 3 | 4 | 9 | 6 | 2 | 8 | 5 | 1 |
| 1 | 7 | 8 | 5 | 9 | 3 | 4 | 2 | 6 |
| 6 | 9 | 5 | 2 | 4 | 1 | 3 | 8 | 7 |
| 4 | 2 | 3 | 6 | 7 | 8 | 9 | 1. | 5 |
| 9 | 5 | 2 | 1 | 3 | 7 | 6 | 4 | 8 |
| 8 | 1 | 7 | 4 | 2 | 6 | 5 | 3 | 9 |
| 3 | 4 | 6 | 8 | 5 | 9 | 1 | 7 | 2 |

நேற்றைய விடை



நாட்டு மக்கள் பலரும் கெட்டுப்போகக் காரணம், நாலே நாலு திரைகள்தான்...

**வெள்ளித்திரை**
**சின்னத்திரை,**
**கணினித்திரை** மற்றும்
**கைப்பேசித் திரை.**

இவற்றையெல்லாம் எவ்வளவு நேரம் பார்க்கிறோமோ அந்தளவு ஒருவர் கெட்டுப்போகலாம்.
ஆனால் நல்ல புத்தகங்களை ஒருவர் எவ்வளவு நேரம் பார்க்கிறாரோ, அந்த அளவுக்கு கெட்ட எண்ணங்களை விட்டுப் போகிறார்.




உன் நண்பனை
அளவோடு நேசி ஒரு
நாள் அவன் உன்
**பகைவன்** ஆகலாம்...

உன் எதிரியை
அளவோடு வெறு
ஒருநாள் அவன் உன்
**நண்பன்** ஆகலாம்...



ஒரு பறவை
தன் சிறகுகளையே
நம்புகிறது
அமர்ந்திருக்கும்
கிளையை அல்ல....

என்னடா குடையில
ஓட்டை இருக்கு....




மழை நின்னு போச்சா
இல்லையான்னு தெரிஞ்சிக்க
வேணாமா அதான்...

வாழ்க்கையில பெருமைக்குரிய தருணம்

**நான் ஒன்னுமே தெரியாம
எக்ஸாம் எழுதும் போது**




டீச்சர் சொல்லுவாங்க உன் பேப்பர
மறைச்சு எழுது பின்னால் இருக்கிறவன்
உன் பேப்பர பாக்கிறான்

## மரணஅறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி மார்க்கண்டு



காரைநகர் பெரியமணலைப் பிறப்பிடமாகவும் பழைய கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி மார்க்கண்டு 18.06.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (புடவைகாரராசா) - முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மார்க்கண்டின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவகாமி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சீதாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம், கணவதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவபாலசுந்தரம்(ஐயனார் மர ஆலை), சிவகணேச சுந்தரம்(ஜேர்மன்), சிவனேஸ்வரி(ஜேர்மன்), சிவறஞ்சினி, சிவஅம்பிகை, சிவறோகினிச்செல்வம், சிவசந்திரா, சிவசதயம்(ஜேர்மன்), சிவபவளம், சிவஞானம்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரி, ஞானேஸ்வரி,தம்பிராசா, நவரத்தினராசா, ஜெகநாதன், மகேஸ்வரன், மால்மருகன், நாகரத்தினம் காலஞ்சென்ற நடனராசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அன்னாருக்கு 24 பேரப்பிள்ளைகளும் 14 பீட்டப்பிள்ளைகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.06.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பழையகண்டி,**
**காரைநகர்.**
**077 8117949**

(CS 17674) (14,17)

**தகவல்:**
**சிவபாலசுந்தரம்.**

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம் ஆதன இல.21, சின்னமணியகாரர் வீதி வட்டாரம் - 08

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் - 08 சின்னமணியகாரன் வீதியிலுள்ள இல.21 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சிதம்பரப்பிள்ளை பொன்னம்மாவும் மறுபேரும் என்னும் பெயரில் காணப்படுகின்றது.

பெயர் மாற்றத்துக்குட்படும் ஆதனமானது வைத்திலிங்கம் சர்வேஸ்வரன் என்பவரால் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1280 / 23.12.2017 ஆம் இலக்க பிரகடன உறுதியில் குறித்த ஆதனம் தனது பேர்த்தியாரான குறித்த சிதம்பரப்பிள்ளை பொன்னம்மாவுக்கு ஆரம்பத்தில் சொந்தமாகவிருந்ததென்றும், அவர் இறந்த பின்னர் அவரின் பின்னுரித்தாளர் தானே என்றும் குறித்த ஆதனத்தில் 1976ஆம் ஆண்டிலிருந்து எதுவித தங்கு தடையற்ற ஆட்சியிலிருந்து வருவதனாலும் குறித்த ஆதனம் தனக்கே சொந்தமும் உரித்துமானது என வெளிப்படுத்தியுள்ளார்.

வைத்திலிங்கம் சர்வேஸ்வரன் ஆகியவர் ஆதனப் பெயர்மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ்வாதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வைத்திலிங்கம் சர்வேஸ்வரன் ஆகியவருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எ ன்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**
**சுழிபுரம்**

(CS/17688) (11,17)

**Win Repair**

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், A/C களும் உங்கள் வீட்டிற்கு வந்து சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும்.

தொடர்பு - 077 9648 942

**ES Printers**




# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472
கிளை அலுவலகம்:-
New Market, 1st Floor, Chavakachcheri
021 492 7432
esprintersjaffna@gmail.com

## பெறுகை அறிவித்தல்
## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்
## சபைநிதி -2018

### வீதி விளக்குகள் பொருத்துதல்

1. சபைநிதி வேலைத்திட்டத்தின் அடிப்படையில் கீழ் காட்டப்பட்ட அட்டவணையின் அடிப்படையில் தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரிபிரதேசசபை, கொடிகாமம் அவர்களினால் தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்காட்டப்பட்ட பெறுகைகளுக்காக கோரப்படுகின்றது
2. தேசிய போட்டி கேள்வி கோரலுக்கமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது
3. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்
4. தேவையான பொருள்கள் தொடர்பான விவரங்கள் கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள வழங்குநர்கள் A9 வீதி, கொடிகாமத்தில் அமைந்துள்ள சாவகச்சேரி பிரதேசசபை தொலைபேசி இல - 0212050356 அல்லது Chavaka chcherips1 @yahoo.com மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்லலாம்
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணம் ஒன்றை சாவகச்சேரி பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 26.06.2018 தொடக்கம் 09.07.2018. வரையான காலப் பகுதியில் அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணிதொடக்கம் பி.ப3.00 மணிவரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா 1000/= மற்றும் பொருத்தமான வரிகளுடன் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாக செலுத்தப்பட வேண்டும்
6. கேள்விகள் 10.07.2018 திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்தியகேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்குப் பெறுகைக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.
7. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு) நாள்கள் வரையும் (24.09.2018) செல்லுபடியாகும்
8. கேள்வி பிணைவைப்பு தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகை பணமாக செலுத்தப்படவேண்டும்

வீதிவிளக்குகள் பொருத்துதல்

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூபா) | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்புத் தொகை | வைப்பு செல்லுபடியாகும் காலம் |
| 1 | வீதிவிளக்குகள் கொள்வனவு | 2.3 | அங்கீகரிக்கப்பட்ட தரம் | 23,000.00 | 22.10.2018 |
| 2 | 150Watts LED Light கொள்வனவு | 0.8 | அங்கீகரிக்கப்பட்ட தரம் | 8,000.00 | 22.10.2018 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்**

(CS/17165)(11,17)

**23.06.2018**

## மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு
## கேள்வி அறிவித்தல்

### மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு
### 2018 / 1 9 ஆம் ஆண்டிற்கு
### தேவையான வழங்கல்கள் / சேவைகள்

1. முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசால்லக்கு 2018/19ம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

அ. உலர் உணவு

ஆ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்

இ. வாகன சுத்திகரிப்பு செய்தல்.

2018 முதல் 2019 வரையான ஒரு வருட காலப்பகுதிக்கு வழங்கல்கள், சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 23.06.2018 தொடக்கம் 08.07.2018 ஆம் திகதி வரை காலை 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணிவரையும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்கு கிளையில் வழங்கப்படும்.

2. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

3. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள் சேவைகள் என்பவற்றுக்கான பெறுமதி ஆவணத்தையும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்கு கிளையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 09.07.2018 திகதி மு.ப. 10.00 மணிக்குமுன் கிடைக்கூடியவாறு தலைவர், கேள்விச்சபை மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்வி பெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 09.07.2018மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும்.

4. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

| | விபரம் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|
| 01 | உலர் உணவு வழங்கல் | - 1000.00 | 50,000.00 |
| 02 | அழுக்குத் துணி சலவை செய்தல் | 500.00 | 5,000.00 |
| 03 | வாகன சுத்திகரிப்பு | 1,500.00 | 50,000.00 |

5. ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.

6. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.

7. கேள்வி தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

8. மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

தொ.இல. 021 206 1423

**வைத்திய கலாநிதி திரு.செ.கஜன்**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு.**

## இப்போது விற்பனையில்.....

# புதுவிதி

PUTHU VITHI






இத்தாலியில் பொட்டு அம்மான்?



சாவு ருசி கண்ட பொலிஸார்



இதயங்களை வெல்லும் இராணுவத்தினர்



உளக்காயங்கள் தொடர்கின்றன



வண்ணார்பண்ணை




அன்னை சிவத்தமிழ்ச் செல்வி. துர்க்கா துரந்தரி. பண்டிதை.

## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் (முன்னாள் பெருந்தலைவர். ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

# பத்தாவது ஆண்டு குருபூசை வைபவம்

காலம் : 24.06.2018 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 9.00 மணி

இடம்: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

தலைவர்: செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
(தலைவர். ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம். தெல்லிப்பழை)

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| காலை 9.00 மணி | : ஆலயத்தில் விஷேட பூஜை. அன்னையின் நினைவாலயத்தில் வழிபாடு |
| காலை 9.20 மணி | : அன்னையின் உருவச்சிலை வழிபாடு |
| காலை 9.30 மணி | : திருமுறை மடத்தில் விஷேட பூசை, வழிபாடு. திருமுறை பாராயணம் (துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள்) |
| காலை 9.40 மணி | : அன்னபூரணி மண்டபத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆரம்பம் |
| காலை 9.45 | : வரவேற்புரை<br>சு.ஏழூர்நாயகம் அவர்கள்<br>(உப - தனாதிகாரி.ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்) |
| பண்ணிசை அரங்கம் | : திருமதி ஜீவந்தினி லம்போதரன் அவர்கள்<br>இசையாசிரியர். வேலணை மத்திய கல்லூரி. |
| பிரார்த்தனையுரை | : சிவஸ்ரீ சு. செந்தில்ராஜக் குருக்கள்<br>(பிரதமகுரு. ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)<br>சிவஸ்ரீ இ. சுந்தரரேஸ்வரக் குருக்கள்<br>(ஆதீனகர்த்தா. சுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தானம்)<br>சிவஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்<br>(முதல்வர். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்) |
| வாழ்த்துரை | : வைத்தியநிபுணர் வை.மனோமோகன் அவர்கள்<br>(ஆஸ்திரேலியா)<br>ச.சிவஸ்ரீ அவர்கள் (பிரதேச செயலர். வலி வடக்கு) |
| 10.30மணி தலைமையுரை | : கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்<br>(தலைவர். ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்) |
| மூத்த சிவாச்சாரியார்களை கௌரவித்தல் | |
| | : விருதுபெறும் மூத்தசிவாச்சாரியார்கள்<br>சிவஸ்ரீ பஞ்சாட்சரக்குருக்கள்<br>சச்சிதானந்தக் குருக்கள் (ஆதினகர்த்தா. குமாரபுரம் ஸ்ரீ சித்ரவேலாயுத சுவாமி கோயில. தண்ணீரூற்று) |
| | : சிவஸ்ரீ செல்வந்திநாத ஐயா பரமானந்த குருக்கள் (சாவகச்சேரி) |
| மு.ப.11.00 மணி | : திருமுறை வெளியீடு - பன்னிரண்டாம் திருமுறை திருத்தொண்டர் புராணம் (நான்காம் பாகம்) |
| வெளியீட்டுரை | : பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் (ஆய்வுப் பேராசிரியர். கச்சுயின் பல்கலைக்கழகம். யப்பான்) |
| முதற்பிரதி பெறுபவர் | : தேசகீர்த்தி ச.ஆறுமுகநாதன் அவர்கள்<br>(உப தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்) |
| மு.பகல் 11.55 மணி நன்றியுரை | : சி.அருளானந்தசிவம் அவர்கள்<br>(உபதலைவர். ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்) |
| மதியம் 12.00 மணி | : அன்னதானம் |

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை. நிர்வாக சபை

## மணமகள் தேவை

இந்து கௌரவகுடும்பம். 1990. அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 233 6267**

(CS 17677) (04.17)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981, கார்த்திகை நட்சத்திரம், இடபராசி, பாவக்கிரகம் 1 1/2 உள்ள சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**தொடர்பு - 077 2718734, 077 003 4842**

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு திறமையும் அனுபவமும் உள்ள வேலைத்தள முகாமைத்துவம் உடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O. - Civil) தேவை.

**தொடர்பு - 076 316 5734, 077 592 5371**
**E - mail : Careers@decon.lk**

## வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு முன்பாக சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. வாகனத் தரிப்பிடம் உண்டு.

**தொடர்பு - 077 449 3222.**
**நிறுவனத்துக்கு கொடுக்கப்படும்.**

## மணமகள் தேவை

1985 ஆம் ஆண்டு. பரணி நட்சத்திரம் அரச சேவையில் உள்ள மணமகனுக்கு சைவ போசனம் உள்ள பட்டதாரி அல்லது அரச சேவையிலுள்ள மணமகள் தேவை.

குறிப்பு:
1. 3ஆம் இடத்தில் சூரியன் செவ்வாய் உள்ளது.
2. சைவ போசனமாக மாறவிரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும். 077 045 8886

## விற்பனைக்கு



ஒரு சோடி வூபர் பொக்ஸ் விற்பனைக்கு உண்டு.

**T.P. - 077 466 9597**

(CS 17687) (15.17)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

* மேசன் 1400/= - 1500/=
* பெயின்ரர் 1300/=

(CS 17686)(04.17)

**தொடர்புகளுக்கு: 075 918 3940**

## மணமகன் தேவை

1986 ஆம் ஆண்டு மூல நட்சத்திரத்தில் பிறந்த ஆசிரியையாகக் கடமையாற்றும் 5'4" உயரமுடைய மணமகளுக்கு நற்குணமுடைய மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

**076 656 8103**

(ANE/00504) (11.17)

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



நிகழும் விளம்பி வருஷம் வைகாசித் திங்கள் 29 ஆம் நாள் (12.06.2018) செவ்வாய்க்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் ஸ்ரீமதி இராஜலட்சுமி சிற்சபேச சர்மா

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு 24.06.2018 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் மண்டபத்தில் இடம்பெறவிருப்பதால் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இளந்தாரி கோயில்,
இணுவில் கிழக்கு.


**குடும்பத்தினர்.**

**077 634 1676, 021 224 3784, 077 605 5539**

(CS/10100)(11.17)

# நல்லதோர் வாழ்வுக்கான வழிகாட்டி புத்தகங்களே!

உடுவிலூர்கலா



**புத்தகங்கள் மேல் காதல் கொள்**
**புதுமையோ புண்ணியமும் தேடிவரும்**
**வாசிப்பு ஒன்றே மூச்சாய்க் கொள்**
**வாழ்வியல் நெறிகள் சீர்பெறும்**
**ருசித்து நீயும் படித்திட்டால்**
**ருசித்திடுமே உன்வாழ்வு**
**இறவாவரம் பெற்ற புத்தகங்களாய்**
**இறப்பினும் நீவாழ்வாய்**

புத்தகங்கள் தாயாய், குருவாய், நண்பனாய் தன்னைத் தாங்கும் மனிதக் கரங்களோடு உறவாடுகின்றன. "உலகில் சாகாவரம் பெற்ற விலைமதிப்பில்லாத பொருள்கள் என்றால் புத்தகங்கள் மட்டுமே" என்றும், "சிறந்த புத்தகங்களைப் படிப்பது கடந்த நூற்றாண்டுகளில் வாழ்ந்த மிகச்சிறந்த மனிதர்களுடன் பேசுவதற்குச் சமமானது" என்றும் பெரியோர்கள் கூறியுள்ளனர். வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்துகிறது. மனிதன் பூரணத்துவம் பெற்று ஆளுமை விருத்தி அடைந்தால் மட்டுமே நல்ல மனிதனாக சமூகத்தில் வாழமுடியும். மனிதன் மனிதனாக வாழ, புத்தகங்களே உதவியிருக்கின்றன.

### புத்தகங்களைத் தவற விடுகிறோம்

பல்வேறுபட்ட நாகரிகங்களின் நுகர்வில் மகிழ்ந்திருக்கும் மனிதனின் இன்றைய தேவையாக ஆடம்பரமே உள்ளது. ஆடம்பரத் தேவையினை நிறைவு செய்வதற்காக, அறிவியல் சாதனங்களையும், பொன் பொருள்களையும் கொள்வனவு செய்வோர் புத்தகங்களை மறந்து விடுகின்றனர். இதனால் எம் சந்ததி வாசிக்கும் பழக்கத்தை குறைத்து விட்டது. புத்தகங்களால் கிடைக்கும் அரிய பயன்களை அனுபவிக்கும் நிலையும் அருகிவிட்டது. புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கும் நாம் செலவிடும் பணமானது, எமக்கும் பிள்ளைக ளுக்கும் மட்டுமல்லாது, எமது சந்ததிக்கே பெரும் மூலதனமாகவும் அதற்கான அத்திபாரமாகவும் உள்ளது என்பதை மறந்தே விடுகின்றனர்.

பெற்றோர் முதலில் புத்தகங்களை வாங்கவும் வாசிக்கவும் விருப்புடன் பழக வேண்டும். குழந்தை கருவறையில் இருக்கும் போதே தாய் அறிவு சார்ந்த, ஆன்மிகம் சார்ந்த புத்தகங்களைப் படிக்கவேண்டும். வீடுகள் பெரிதோ சிறிதோ நூலகம் ஒன்று கட்டாயமாக உருவாக்க வேண்டியது பெற்றோரது கட்டாய கடமையாகும். விசேசித்த நாள்களில் வேறு கடமைகளை விடுத்து நல்ல புத்தகங்களை கொள்வனவு செய்து வீட்டு நூலகத்தை அழகுறச் செய்ய வேண்டும். ஒரு நாட்டுக்கு நூலகங்கள் முதுகெலும்பாக உறுதி பெறுவது போல, ஒவ்வொரு வீட்டுக்கும் நூலகங்கள் உறுதி பெறவேண்டும்.

### வாசிப்பை நேசிப்போம்

ஆளுமை மிக்க மனிதர்கள் உருவாக புத்த கங்களை விருப்புடன் வாசிக்கும் பழக்கத்தை மாற்றமாகக் கொள்ளவேண்டும். வாசிப்புத் திறனை வளர்ப்பதில் அனைவரும் அதீத அக்கறை கொள்ள வேண்டும். அத்துடன் புத்தகங்ளை வாசிப்பதால் சிறுபிள்ளைகளின் மொழித்திறன் கேட்டல், திறன் என்பன அதிகரிப்பதோடு, பொது அறிவு வளர்ச்சியும், பல்வேறுபட்ட கலாசாரங்களையும், பாரம்பரியங்களையும் அறியவும் முடிகின்றது. அத்தோடு தன்னம்பிக்கை, ஆளுமை விருத்தி, ஞாபகசக்தி அதிகரிப்பு கிரகித்தல், கற்பனைத்திறன் என்பனவும் அதிகரிக்கப்பட்டு அறிவு வளம்பெறுகின்றது.

ஆபிரகாம் லிங்கன் வறுமைகாரணமாக புத்தகம் இரவல் வாங்கிப்படித்தவர் கென்னடி நெப்போலியன், அப்துல்கலாம் ரைட் சகோதரர்கள் போன்றோர் வாசிப்பதையே நோக்கமாகக் கொண்டு புத்தகங்களோடு உறவாடியவர்கள் அப்துல் கலாம் விட்டுச் சென்ற சொத்தாக பெறுமதி கூடயதும், எண்ணிக்கையில் அதிகமாயும் 2 ஆயிரத்து 500 புத்தகங்களே உள்ளன. தனது தாயை தினமும் சத்தமாக நூல்களை வாசிக்கும்படி கூறி அறிவினைப் பெற்றுக் கொண்ட லூயிஸ் மினரால் பின்னாளில் விழிப்புற்றோர்க்கான தொடுகை மூலமான எழுத்து முறையை அறிமுகப்படுத்தினார். கல்வியறிவில்லாத பாமர மக்களும் படித்தவர்கள் மூலம் நூல்களை வாசித்து தமது அறிவினை வளர்த்து கொண்டுள்ளனர். இன்று வரலாறுகளில் பதிவாகியுள்ள சாதனையாளர்கள் புத்தகங்களையே நண்பர்களாகக் கொண்டிருந்தனர்.

காலத்துக்கு காலம் பாடப்புத்தகங்கள் மாற்றம் பெறுகின்றன. திருக்குறள், பைபிள், குர் ஆன், பகவத்கீதை சத்திய சோதனை போன்ற நூல்களில் மாற்றம் ஏற்படுவதில்லை. மனிதன் எப்படியும் வாழலாம் எனக் கூறாது, இப்படித்தான் வாழவேண்டும் என்கிற முறையை இந்த நூல்கள் வகுத்துள்ளன. ரஷ்யப் புரட்சியாளரின் விடுதலைக்கான பயணத்தின் பாதையில் துப்பாக்கிகளை விடவும், தாக்கக்கூடிய கூரிய ஆயுதமாக நூல்கள்.



ஔவையார் 'நூல்பல கல்" என ஆத்திசூடியிலும், 'நுன்முறை தெரிந்து சீலித்து ஒழுகு" என கொன்றை வேந்தனும் கூறியுள்ளார். வாழ்நாள் முழுதும் சிதையிலிருக்கிறேன். எனக்குப்பிடித்த புத்தகங்களை என்னிடம் கொடுங்கள் என்கிறார் ஒரு பெரியார். அந்தளவுக்கு மனித வாழ்வுக்கு உறுதுணையாக புத்தகங்கள் உள்ளன. அவற்றைநாம் ருசித்துப்பார்க்கத் தவறிவிடக்கூடாது.

### யாழ். நூலகத்தை பயன்படுத்துவோம்

சிலகாலங்களின் முன் தீக்கிரையான யாழ்ப்பாண பொது நூலகம், மீளவும் புனருத்தாரணம் செய்யப்பட்டு அழகுடன் மிளிர்கிறது. ஏறக்குறைய 98 ஆயிரம் புத்தகங்கள் இங்கு உள்ளன என்று சொல்லப்படுகின்றது. இவை எமக்குக் கிடைத்த பொக்கிசமாகும். அறிவு கொண்ட சமூகத்தை உருவாக்க வாழ்வியலை சீர் செய்யும் நூல்களை தேடிப்பிடித்து படிக்கவேண்டும். முதலில் சிறுவர்களை நூல்களை விரும்பிவாசிக்கப் பழக்கவேண்டும். எழுத்தாளர்கள் சிறுவர்களின் அறிவுக்கு விருந்தான சிறுவர் இலக்கியங்களைப் படைக்க வேண்டும். சிறுவர்களுக்கு பரிசில்கள் கொடுக்கும்போது புத்தகங்களை கொடுப்பதே நன்று. சிறுவர்களோ, பெரியவர்களோ எவராயினும் பயணங்களின் போது பயன்தரக்கூடிய அறிவுப் புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்துக்கு உட்பட வேண்டும். அலைபேசிப் பயன்பாடு சிறுவர்களின் புத்தகங்கள் மீதான ஈர்ப்பை தம்வசம் திருப்பியுள்ளன. இந்த நிலை மாறி புத்தகங்களை வழிகாட்டியாக, துணையாக, நட்பாக, அறிவுப் பொக்கிசமாக ஒவ்வொருவரும் கொள்ளவேண்டும்.

> ஆபிரகாம் லிங்கன் வறுமைகாரணமாக புத்தகம் இரவல் வாங்கிப்படித்தவர் கென்னடி நெப்போலியன், அப்துல்கலாம் ரைட் சகோதரர்கள் போன்றோர் வாசிப்பதையே நோக்கமாகக் கொண்டு புத்தகங்களோடு உறவாடியவர்கள் அப்துல் கலாம் விட்டுச் சென்ற சொத்தாக பெறுமதி கூடயதும், எண்ணிக்கையில் அதிகமாயும் 2 ஆயிரத்து 500 புத்தகங்களே உள்ளன. தனது தாயை தினமும் சத்தமாக நூல்களை வாசிக்கும்படி கூறி அறிவினைப் பெற்றுக் கொண்ட லூயிஸ் மினரால் பின்னாளில் விழிப்புற்றோர்க்கான தொடுகை மூலமான எழுத்து முறையை அறிமுகப்படுத்தினார்.

**நாளை**
**24.06.2018**
ஞாயிற்றுக்கிழமை
**ஆனி 10**

திதி: ஏகாதசி மு.ப. 06.51 வரை
நட்சத்திரம்: சுவாதி காலை 06.27 வரை
சுபநேரம்: 08.55 – 10.25 வரை
ராகுகாலம்: 04.25 – 05.55 வரை


கடைத் தொகுதி வாடகைக்குண்டு
(4 கடைகள்)



சுழிபுரம் மத்தி சுழிபுரம் பொன்னாலை வீதியில் விக்டோரியா கல்லூரிக்கு அருகில் கடைத் தொகுதி வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 3530203

# உண்மை அன்பு



நெடுங்கோமான் என்ற மன்னன் நோய்வாய்ப்பட்டான். பலநாள்கள் படுக்கையானான். அவனை நலம் விசாரிக்க தினமும் பல பிரமுகர்கள் வந்து போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் அரசனைப் பார்க்க வெறும் கையோடு வருவது கிடையாது. சத்துள்ள பழங்கள் உட்பட உணவுப் பண்டங்களைத் தட்டுக்களில் வைத்து எடுத்துக் கொண்டும் வந்தார்கள். இப்படியே சில பெரிய மனிதர்கள் பலவித பழங்களையும் பண்டங்களையும் கொடுத்து அரசனிடம் நலம் விசாரித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு விவசாயி மன்னனைக் காண அரண்மனை வாயிலுக்கு வந்தார். அவரது எளிமைத் தோற்றத்தைப் பார்த்த காவலாளிகள் அவரை உள்ளே செல்லவிடாது தடுத்தனர். இருந்தும் அவர் காவலாளியைப் பொருட்படுத்தாது எப்படியோ அரண்மனைக்குள் புகுந்து மன்னன் படுக்கையருகே சென்று விட்டார். அவரது கலைந்த தலைமுடியும் ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன் கிராமத்திலிருந்து வெகுதூரம் நடந்து வந்திருக்கிறார் என்பதை வெளிப்படுத்தின. அரசனைச் சூழ இருந்த பிரமுகர்கள் அவரது கோலத்தைக் கண்டு முகம் சுழித்தனர். அவர் சத்தமில்லாமல் வந்துள்ளான் அவனது அழுக்குகள் அரசனின் உடலில் பட்டால் மன்னனுக்கு மேலும் தொற்று ஏற்பட்டு விடுமென்றும் கூறி அவரை வெளியேற்றும்படி அரசனைக் கேட்டுக்கொண்டனர். ஆனால் அரசனோ விவசாயியை விரட்டாமல் அவர் வந்த காரியம் என்னவென அமைதியாக விசாரித்தார். விவசாயியோ "மன்னா! உங்கள் உடம்புக்கு முடியாமற் போயிற்று என்று கேள்விப்பட்டேன். உடனேயே உங்கள் உடல் தேறவேண்டும் என்று எங்கள் ஊர் மாரியம்மனுக்கு பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தை தங்களுக்குக் கொண்டு வந்திருக்கின்றேன். ஏற்றுக்கொள்ளுங்கள். அம்மன் பிரசாதம் சாப்பிட்டால் எந்த நோயும் ஓடிவிடும்" என்றார்.

மன்னன் பிரசாதத்தை வாங்க கையை நீட்ட விவசாயி பிரசாதத்தை தனது பைக்குள் இருந்து வெளியே எடுத்தார். அது வெளியே வந்தபோது கெட்டுப்போன நாற்றம் அடித்தது. அங்கிருந்து பிரமுகர்கள் மூக்குகளைப் பொத்தி முகங்களைச் சுழித்துக் கொண்டார்கள். ஆனால் அரசரோ மிகவும் மகிழ்வுடன் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு தன் கழுத்தில் இருந்த முத்து மாலையைக் கழற்றி விவசாயிக்குப் பரிசாக அளித்து நன்றிகூறி அனுப்பிவைத்தார். அங்கிருந்த பிரமுகர்களில் ஒருவர் அரசே! கெட்டுப்போன பொங்கலுக்கா முத்துமாலை பரிசளிக்கிறீர்கள்? என்று கேட்டார். அரசரோ அமைதியாக "அது கெட்டிருந்தாலும் அந்தப் பிரசாதத்தை நான் சாப்பிட்டு குணமடைய வேண்டும் என்ற அவனது கள்ளம் கபடமற்ற அன்பு உண்மையானது. உண்மையான அன்புக்கு மதிப்பு மிகவுமதிகம். நான் அளித்த இந்த முத்துமாலைகூட உண்மை அன்புக்கு முன்னால் எம்மாத்திரம்? என்றார் அரசர்.



வர்ணம் தீட்டுவோம்

# மருத்துவமனை தோன்றிய விதம்



'ஹொஸ்பெஸ்' என்ற இலத்தின் வார்த்தையில் இருந்து "ஹொஸ்பிடல்" என்ற வார்த்தை பிறந்தது. 'ஹொஸ்பெஸ்' என்ற இலத்தீன் மொழியின் தமிழாக்கம் 'விருந்தினர்' என்பதாகும்..

பண்டைக்காலத்தில் பாபியோனியா, எகிப்து, இந்தியா, கிரேக்கம் முதலிய நாடுகளில் கோவில்களில் மருத்துவ வசதியும் மருத்துவக் கூடங்களும் இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன. உரோமானியர்கள் சில பொது மருத்துவமனைகளையும் நான்காம் நூற்றாண்டில் சில சில கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மருத்துவமனைகளையும் நடத்தியதாகத் தெரிய வருகிறது.

ஏழைகளுக்கும் வயதான நோயாளிகளுக்கும் மதத்தை வளர்ப்பதற்குப் பல மதத்தினர் ஆங்காங்கே மருத்துவமனைகளை 11ஆம் 12ஆம் நூற்றாண்டுகளில் தொடங்கினார்கள். இப்படித் தொடங்கப்பட்ட உலகின் முதல் மருத்துவமனை கி.பி 1123ஆம் ஆண்டு லண்டனில் அமைக்கப்பட்டது.

1536ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் மருத்துவமனைகளை விரிவுபடுத்த அரசு ஏற்பாடு செய்தது. அதன் விளைவாக ஆலயங்கள் வசதியுடன் பொதுமக்களுக்கான மருத்துவமனைகள் 18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து முழுவதும் பரவின. அதற்குப் பின்னரே பொதுமக்களுக்கான மருத்துவமனைகள் அமைக்கும் முறையை பிறநாடுகள் பின்பற்றின.

ஆரம்ப காலத்தில் மருத்துவமனை என்பது பயணம் செய்வோருக்கும், வியாபாரிகள் போன்றோர் தங்குவதற்கும் ஏற்ற சிறிய கூடாரம் போல அமைக்கப்பட்டிருந்தது. அங்கே தங்கியவர்களுக்கு உடல் நலம் குன்றியபோது சில மருந்துக்களைக் கொடுத்து அவர்களை மேலும் சில நாள்கள் தங்க வைப்பார்கள். போகப் போக இத்தகைய விடுதிகளிலும் இடம் கிடைக்கவில்லை. நோயாளிகளுடன் பயணிகளாக வந்தவர்களும் தங்குவதற்கு இடமில்லாது போனநிலையில் அவர்கள் தங்க மேலும் ஒரு தகரக் கொட்டகை அமைக்க வேண்டியதாயிற்று. நோயில்லாத கூட வந்தவர்கள் தங்குவதற்கு அமைக்கப்பட்ட கொட்டகைகள் "ஹோட்டல்" என்று அழைக்கப்பட்டன. இப்படித்தான் மருத்துவமனைகளும், ஹோட்டல்களும் ஒரே நேரத்தில் தோன்ற ஆரம்பித்தன.

உலகின் முதல் மனநல மருத்துவமனை வெர்ஜீனியாவில் உள்ள வில்லியம்ஸ் பாக்கில் 1773ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. இன்றைய மருத்துவமனை அமைப்பு நிர்வாகமுறைக்குப் ப்னாரன்ஸ் றைட்டிங்கேல் அம்மையார் ஒரு மூலகாரணம் என்று சொல்லலாம். தாதியர்களை அறிமுகப்படுத்தி அவர்களுக்கான பயிற்சிப்பள்ளிகளையும் இவரே அறிமுகம் செய்து வைத்தார்.


முதல் உலகப் போரின்போதுதான் மருத்துவமனைகளுக்கு பிரபல்யம் ஏற்பட்டது. மருத்துவமனைகள் பெருமளவில் அமைக்கும் பணி தொடர்ந்தது. அறுவைச் சிகிச்சைமுறை 1946க்குப் பின்தான் பெரிதும் பின்பற்றப்பட்டது. இன்று காணும் இடங்களில் எல்லாம் மருத்துவமனைகள் அமைந்துள்ளன. ஆனால் இவற்றுள் பல மருத்துவமனைகள் சேவையை மறந்துவிட்டு "தேவை"யில் கவனம் செலுத்துவதுதான் மிகுந்த வருத்தத்தைத் தருகின்றது.

# செயற்கை மழை

இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தி பெய்விக்கப்படும் மழை செயற்கை மழையாகும். வானில் மேகங்கள் இருந்தால் மட்டுமே இந்த செயற்கை மழையைப் பெய்விக்கலாம். இரசாயனப் பொருளான அயடீன், கரியமிலவாயு, இதில் ஒன்று இருந்தால் அவற்றை வானில் எடுத்துச் சென்று மேகங்களுக்கிடையே தூவ வேண்டும்.

அதன்பின் மேகங்களில் உள்ள நீர்த்திவலைகள் இந்த இரசாயனப் பொருள்களின் ஒவ்வொரு துகள்களைச் சுற்றிலும் பனிக்கட்டிப் படலமாகப் ப்டியும். இந்த உப்புக்கு தண்ணீர் உறைய வைக்கும் தன்மை இருப்பதால் நீாத்துளிகள் பனிக்கட்டியாக படிந்து விடுகின்றன. வெள்ளை அயடீன் துகளைச் சுற்றி நீர்த்துளிகள் தொடர்ந்து பனிக்கட்டிப் படலமாக படியும் போது அது உருவத்தில் பெரிதாக கனமும் அதிகரிக்க அவை கீழே விழத் தொடங்கும். அப்போது கீழ் மட்டத்தில் உள்ள வெப்பக் காற்று இந்தப் பனிக்கட்டிப் படலங்கள்மீது படியும்போது பனிக்கட்டிகள் உருகி பூமியில் மழையாகப் பெய்யும் இதுவே செயற்கை மழையாகும்.

பல மைல்கள் விரிந்திருக்கும் மேகத்தில் மிக மிகக் குறைந்த இரசாயனப் பொருள்



களைத் தூவி விட்டால் போதுமானது. அமெரிக்கா தான் 40 ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் செயற்கை மழையைக் கண்டுபிடித்தது. ஆனால் செயற்கை மழை பெய்விப்பதில் இஸ்ரேல்தான் முன்னணியில் நிற்கிறது. இஸ்ரேலில் 'ரேடர்' மூலம் மழை மேகங்களைக் கண் காணித்து மேகங்கள் திரண்டுவரும் சமயத்தில் அயோடீனைத் தூவி செயற்கை மழையைப் பெய்விக்கிறார்கள்.

காட்டுத்தீயை அணைப்பதற்கும் செயற்கை மழை இன்றைய காலத்தில் பயன்படுகிறது. வியட்நாமில், அமெரிக்க எதிரிகளின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு செயற்கை மழையைப் பயன்படுத்தினார்கள். பின் ஐக்கிய நாடுகள் சபை போர் நடக்கும் நேரங்களில் செயற்கை மழையைப் பெய்விப்பதைத் தடை செய்துள்ளது.

## கொழும்பைச்...

லும், எமது பிரதேச அபிவிருத்தி தொடர்பில் எம்மை அழைக்காமலும் கலந்துரையாடல் நடத்துவது சரியா?.

இவ்வாறு வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

பலாலி வானூர்தி நிலைய அபிவிருத்தி தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலுக்கு வடக்கு மாகாண சபை அமைச்சர்களான திருமதி அனந்தி சசிதரன், க.சர்வேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், க.விந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் ஆகியோரை மாத்திரம் அழையுங்கள் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மாவட்டச் செயலருக்கு அறிவுறுத்தியுள்ளார். அதற்கு அமைவாக சம்பந்தப்பட்டோருக்கு மாத்திரம் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது.

வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தனுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதையடுத்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு, வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் கடிதம் அனுப்பியுள்ளார்.

கொழும்பு அரசு அபிவிருத்திச் செயற்பாடுகளில் மாகாண அரசை புறக்கணித்துச் செயற்படுகின்றது என்று நீங்கள் குற்றம் சுமத்தி வருகின்றீர்கள். எங்கள் பிரதேச அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பில் எங்களை புறக்கணிக்கும் வகையில் நீங்கள் செயற்படுகின்றீர்கள். 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம், உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மாகாண சபை பறிக்க முடியாது என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதையடுத்து வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு நேற்றுக் காலை அவசர அவசரமாக கூட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற-5)

## வீட்டுக்குள்...

யாழ்ப்பாணம், ஜீன் 23

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டில் உள்ள வீடொன்றினுள் புகுந்த கும்பல் வீட்டின் யன்னல் கண்ணாடிகள் மற்றும் கதவுகளை உடைத்துச் சேதமாக்கி வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்திச் சென்றது என்று யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாயன்மார்கட்டில் வசிக்கும் சண்முகராஜா என்பவரின் வீட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைகழகதத்தின் முன்பாக எமது மகன் கடையொன்றை நடத்தி வந்தார். அந்தக் கடை இனம் தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. அதையடுத்து மகன் வெளிநாடு சென்றுவிட்டார். ஓரிரு தினங்களுக்கு முன்பாக எமது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத இரு நபர்கள் மகன் லோஜன் வெளிநாட்டால் வந்துவிட்டாரா?. எப்ப வருவார்? என்று மிரட்டுவதுபோன்று விசாரித்துச்சென்றனர். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு எமது வீட்டுக்குள் புகுந்த கும்பல் எமது வீட்டு யன்னல் கண்ணாடிகள் மற்றும் கதவுகளை அடித்து உடைத்து எம்மை அச்சுறுத்திச் சென்றனர்.

அது தொடர்பில் நாம் பொலிஸ் அவரச சேவைப் பிரிவுக்கு தொலைபேசி ஊடாக அறிவித்திருந்தோம். நேற்று வெள்ளிக்கிழமை காலை எமது வீட்டுக்கு வந்த யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு எமது வாக்கு மூலங்களைப் பதிவு செய்து சென்றனர் என்று வீட்டு உரிமையாளர் தெரிவித்தார். (ற-21,37)

## அனுமதியின்றி...

னத்தை யாரோ பெற்றுக்கொள்கின்றார்கள். சபையின் அனுமதி இன்றி சபை எல்லைக்குள் அமைக்கப்படும் கட்டடங்களை அகற்றுவதற்கு அனைத்துச் சட்ட உரிமையும் சபைக்கு உண்டு. 14 நாள்கள் அறிவித்தல் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் அவற்றை அகற்றாதவிடத்து நாம் அவற்றை அகற்றுவோம் - என்றார். (ற-21,7)

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 305
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.06.22
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 84,370,938/-
A 21 34 41 46
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 289
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.06.22
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 76,286,360/-
வெற்றி இலக்கங்கள்
23 28 52 60 X
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
0114 824 824, 0112 333 778

### ஆதனப்பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
### வலிகாமம் வடக்கு பிரதேச சபை, உப அலுவலகம், தெல்லிப்பழை, வட்டாரம் - 13, கிட்டங்கி ஒழுங்கை, ஆதன இல : 27/17

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பழை உப அலுவலகத் திற்குட்பட்ட வட்டாரம் 13. ஆதன இல.: 27/17, கிட்டங்கி ஒழுங்கையில் உள்ள ஆதனமானது எமது ஆதனப்பதிவேட்டில் செல்வராசா உ. கோ.சின்னத்தம்பி என்னும் பெயரிலுள்ளது.

இவ் ஆதனம் அம்பலவாணர் இரத்தினசிங்கம் பெண் சறோசினிதேவி என்பவர் உறுதி இல : 11060, 2016.10.19 ஆம் திகதிய உறுதிமூலம் தனக்குச் சொந்தமானது என வெளிப்படுத்தி துரைசிங்கம் கஜன் பெண் கீதா என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். மீண்டும் 11061, 2016.10.19 ஆம் திகதிய உறுதிமூலம் அவரிடமிருந்து நன்கொடையாக பெற்றுள்ளார்.

தற்போது இவ்வாதனத்தினை அம்பலவாணர் இரத்தினசிங்கம் பெண் சறோசினிதேவி என்பவர் ஆதனவரிப்பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யும்பொருட்டுவிண்ணப்பித்துள்ளனர்.

**ஆதன விவரம்**

வடக்கு மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தெல்லிப்பழை பிரதேச செயலகம் J/228 கிராமசேவகர் பிரிவு, தெல்லிப்பழை கோவில்பற்று, தெல்லிப்பழை கிழக்கிறை "மயிலப்பை" இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் A.லோகநாதன் அவர்களால் வரையப்பட்ட வரைபட இலக்கம் J/15197 இல் 14.10.2015 ஆம் திகதி துண்டு 1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 01 குழி 14.18 ஆகும்.

**இதன் எல்லைகள்**

கிழக்கு : தெல்லிப்பழை புகையிரத நிலைய ஆதனம்
வடக்கு : பூபாலசிங்கத்தின் பெண் இரத்தினாவதியின் ஆதனம்
மேற்கு : துரைராசா பெண் சரஸ்வதியின் ஆதனம்.
தெற்கு : சுப்பிரமணியம் பெண் லீலாவதியின் ஆதனம்.

இவ்வாதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்துமூலமாகவோ நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு குறித்த இலக்கமுடைய ஆதனத்தை பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலி.வடக்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**


(CS 17685(15/17))

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு பட்டினசபை உப அலுவலகம் பண்டத்தரிப்பு

#### ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வட்டாரம் | :- 01 |
| உத்தேச ஆதன இல | :- 19 |
| வீதி | :- செட்டியடைப்பு வீதி |
| கிராம சேவையாளர் பிரிவு | :- J/149 |

வட்டாரம் 01. செட்டியடைப்பு வீதி. உத்தேச ஆதன இல.19 இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் மேற்கு (தற்போது வலிகாமம் தென்மேற்கு) பகுதி பண்டத்-தரிப்பு கோயில்பற்று சில்லாலை இறை J/149 கிராம சேவகர் பிரிவில் உள்ள **" காலையடி உறி தூக்கி"** என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 4 குளி 8.56 உம் கொண்ட இவ்வாதனம் சில்லாலை பண்டத்தரிப்பைச் சேர்ந்த கருணகிரிநாதன் செல்வமணி அவர்களால் அவ்வூரைச் சேர்ந்த கார்த்திகேசு சண்முகலிங்கம் மணிமேகலாதேவி அவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் தே.மு.கதிர்காமநாதன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 15503 இலக்க 22.12.2015 ஆம் திகதிய உறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.S.சிவராஜ் அவர்களால் வரையப்பட்ட 323 ஆம் இலக்க 2015.12.21 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனம் ஆனது **" காலையடி உறி தூக்கி"** நிலப்பரப்பு 04 குளி 8.56 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிர-சுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்-தருமாறும். அவ்வாறு உரிமைகோராதவிடத்து குறித்து ஆதனமானது கார்த்திகேசு சண்முகலிங்கம் மணிமேகலாதேவி எனும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.




**திரு.அ.ஜெபநேசன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.** (IN/6094)(11)

### மரணஅறிவித்தல்



## திருமதி மகேஸ்வரி (தஞ்சி) நல்லையா

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி (தஞ்சி) நல்லையா 21.06.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும் தர்மபாலா, குமரேஸ்வரி, இராஜேஸ்வரி(ஆத்தை), விஜயகுமாரன், விஜயராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திராணி, மனோகரன், குலரஞ்சினி, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிசாந்தன், நிரோஜி, நிலோஜி, கஜன், கௌதமன், யதுசன், விதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜெனுஸ்,யனுஸ்கா, திவிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(24.06.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.** (CS 17675) (14,17) **தகவல்: குடும்பத்தினர்.**

### மரண அறிவித்தல்



## பாலசுப்பிரமணியம் மனோகரன்

விளானை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும், 93 / 2 கச்சேரி கிழக்கு வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் மனோகரன் நேற்று (22.06.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் நாகம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சண்முகசுந்தரம் மற்றும் மனோகராதேவி தம்பதியரின் அன்புமருமகனும் சுபாஜினியின் அன்புக்கணவரும் மதுரா, கௌசிகா ஆகியோரின் அன்புத்தந்தையும் சிறீதரனின் அன்புச்சகோதரரும் சிவராஜினி, வசந்தன், சுகந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.06.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் 93 /2 கச்சேரி கிழக்கு வீதி, யாழ்ப்பாணம் எனும் தற்காலிக வசிப்பிட இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் தில்லை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**077 2554 099** **சகோதரர் (பா. சிறிதரன்)**

# மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 3.1 வீதமாக மதிப்பீடு

## தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் சுட்டிக்காட்டு

தேசிய கணக்குகள் மதிப்பீடுகளில் கடந்த 2017 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 3.1 சதவீதமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, நிலையான (2010) விலையில் கடந்த 2016 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் 9,034,290 மில்லியன் ரூபாவாகவும், 2017 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் 9,315,418 மில்லியன் ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

பொருளாதாரத்தின் முதன்மைக் கூறுகளான விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருள்கள் மானியங்கள் கழிக்கப்பட்ட வரி நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குரிய பங்களிப்பை முறையே 7.7 வீதம், 27.2 வீதம், 55.8 வீதம் மற்றும் 9.3 வீதம் என்ற ரீதியில் வழங்கியுள்ளன.

2017 ஆம் ஆண்டின் முழு காலப்பகுதியிலும் கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. அவை முறையே 3.9 வீதம், 3.2 வீதமாகக் காணப்படுகின்றன. மொத்த விவசாய நடவடிக்கைகளை நோக்குமிடத்து, மறை வளர்ச்சி வீதத்தை வெளிப்படுத்தியுள்ளன. அது 0.8 வீதமாக காணப்படுகிறது.

> “கடந்த 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் சீரற்ற காலநிலை நிலவியது. பொருளாதாரத்தில் விவசாயத்துறையின் பங்களிப்பு வீழ்ச்சி கண்டது. இதன் தொடர்ச்சியாக கடந்த ஆண்டும் இதே நிலமைகள் தொடர்ந்தன. கடந்த 2 வருட காலப்பகுதியிலும் நாட்டில் ஏற்பட்ட வறட்சி மற்றும் பெரு மழை காரணமாக விவசாய உற்பத்தித் துறை 0.8 மறை வளர்ச்சி வீதத்தைக் கொண்டுள்ளது.

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சில விவசாய நடவடிக்கைகள் மறை வளர்ச்சி வீதத்தை பதிவுசெய்துள்ளன. அவற்றுள் உபபிரிவான 'எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி (தேங்காய் உள்ளடங்கலாக)', 'காய்கறிகளின் வளர்ச்சி', 'தானியங்களின் வளர்ச்சி', 'நெல் வளர்ச்சி' மற்றும் 'கடல் மீன் பிடி' என்பன முறையே 19.5 வீதம், 16.2 வீதம், 10.3 வீதம், 4.0 வீதம், 2.0 வீதம் ஆக காணப்படுகிறது. எனினும் சில முக்கிய விவசாய நடவடிக்கைகள் நேர் வளர்ச்சியை கொண்டுள்ளன.

அவற்றுள் குறிப்பாக, 'காடாக்கலும் குத்தி களும்', 'நன்னீர் மீன்பிடி', 'பழ வகைகளின் வளர்ச்சி', 'தேயிலை வளர்ச்சி', 'இறப்பர் வளர்ச்சி', 'விலங்கு உற்பத்தி', 'வாசனைத்திரவியங்களின் வளர்ச்சி', என்பன முறையே 22 வீதம், 10.7 வீதம், 7.4 வீதம், 4.9 வீதம், 4.8 வீதம், 3.9 வீதம், 0.5 வீதம் என்கின்ற வளர்ச்சியை பதிவிட்டுள்ளன. (ஓ)


**T.P.ஹன்ற் ஞாபகார்த்த கலைக்கூடம்**
**திறப்புவிழாவும் நூல் வெளியீடும்**

**காலம் : 24.06.2018 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00**
**இடம் : இல.27, தேவாலய வீதி, சாவகச்சேரி.**

கலைக்கூடத்தில் வடமாகாண பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஓவியக் கலைஞர்கள் ஆகியோருக்கு நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் முன்வைக்கப்பட்ட ஓவியங்கள் கலைக்கூடத்தில் காட்சிப்படுத்தப் படவுள்ளன.
அத்துடன் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்கள் மற்றும் கலந்து கொண்ட அனைத்துப் போட்டியாளர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
மாணவர்களின் நலன்கருதி உருவாக்கப்பட்ட "சித்திரக் கலை" என்னும் நூல் வெளியீடும் இடம்பெறும்.

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
**ஏற்பாட்டுக் குழுவினர்.**

(C 7108/15/18)





## பரிசில் வழங்கல் நிகழ்வு

அகில இலங்கை ரீதியில் செலிங்கோ லைஃப் காப்புறுதி நிறுவனம் நடத்திய போட்டி நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் நெல்லியடிக் கிளை வெற்றி பெற்றுள்ளது.

பரிசுத்தொகையாக ரூபா 50 ஆயிரம் வழங்கி வைக்கப்பட்டது. செலிங்கே லைஃப் காப்புறுதி நிறுவனத்தின் வடமாகாண அபிவிருத்தி முகாமையாளர் து.நிறோஜன் பரிசுத் தொகையை கொமர்ஷல் வங்கியின் நெல்லியடிக் கிளை முகாமையாளர் திருமதி.தபோதினி கஜரூபனிடம் கையளித்தார். இந்த நிகழ்வில் செலிங்கோ லைஃப் காப்புறுதி நிறுவனத்தின் நெல்லியடி கிளை 2 இன் முகாமையாளர் பாஸ்கரன் மற்றும் விற்பனை அதிகாரி பிரதாப் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (ஓ-422)


**மரண அறிவித்தல்**

**செல்லத்துரை சோதிப்பெருமாள்**
(இளைப்பாறிய அதிபர், J.P)



இணுவில் மஞ்சத்தடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் இணுவில் கந்தசாமி கோவில் தர்மகர்த்தா சபை தலைவரும், இணுவில் மத்திய கல்லூரியின் முன்னைநாள் அதிபரும், சமாதான நீதவானுமாகிய செல்லத்துரை சோதிப்பெருமாள் நேற்று (22.05.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சின்னத்தம்பி, இராசேஸ்வரி, பூமலர் மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரரும் மீனலோஜனி, ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), சந்திரலோஜனி ஆகியோரின் அன்புத்தந்தையும் சதானந்தன், சுகந்தமலர், (லண்டன்), தபானந்தன் (யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ணா ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனும் யாழினி, ராகுலன், சர்மினி, சரபன், சரசவி, சாரகி, ருசிகா, துளசிகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சரஸ்வதி மகால்"
மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.

தகவல் :
குடும்பத்தினர்.


## ராணுவத்துடன்...

சுட்டிக்காட்டினார். அதையடுத்து சபையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. அதிலேயே வி.மணிவண்ணன் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் நடத்தப்படும் நிகழ்வுகளுக்கு இராணுவத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று மாநகர சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டது. அதை மீறி சபை முதல்வர் உட்படச் சிலர் இராணுவத்தினர் பங்குகொண்ட நிகழ்வில் கலந்துகொண்டனர். இது சபையின் தீர்மானத்தை மீறும் செயல். தீர்மானத்தை மீறுவதாயின் சபையில் தீர்மானம் இயற்றுவது எதற்கு?. அது மட்டுமன்றி அந்தத் தீர்மானம் ஏகமனதாகவே எடுக்கப்பட்டது. சபையின் பெயரிலேயே அழைப்பிதழும் அச்சிடப்பட்டு நிகழ்வும் நடத்தப்பட்டது. நிகழ்வு நடைபெற்ற இடமும் சபையின் ஆளுகைக்குட்பட்ட இடம் என்று அவர் குறிப்பிட்டார்.

அது தொடர்பில் சபை முதல்வர் இ.ஆர்னோல்ட் கருத்துத் தெரிவித்தார்.

அந்தத் தீர்மானத்தை நானும் ஏற்றிருந்தேன். அந்த நிகழ்வை நாம் நடத்தவில்லை. ஆளுநரே ஏற்பாடு செய்திருந்தார். நாம் அழைப்பிதழ் விடுவிக்கவில்லை. அந்த நிகழ்வுக்கு சபையின் நிதி பயன்படுத்தப்படவில்லை. பல திணைக்களங்கள் அன்பளிப்பாக வழங்கிய மரங்களே வழங்கப்பட்டன. அவற்றுக்குக் காலையும், மாலையும் நீர் ஊற்றி 3 மாதங்கள் பராமரிக்கும் பொறுப்பு மாநகர சபைக்குக் கையளிக்கப்பட்டது.

இரு தடவை நீர் ஊற்றுவதற்கு 4 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டது. அந்தப் பகுதி யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரியதெனினும் தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்ட பகுதி என்று அவரால் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் பல கருத்துக்களை முன்வைத்தனர். அதனால் தர்க்கம் ஏற்பட்டது. அவர்களுடன் இணைந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ரெமீடியசும் கருத்துக்களை முன்வைத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் தர்க்கத்தில் ஈடுப்பட்டனர். வாய் சவடாலுக்காக போலித் தேசியம் உரைக்க முடியாது. எந்த நேரம் என்ன செய்ய வேண்டும் என்று எமக்குத் தெரியும். இல்லாவிட்டால் மீண்டும் ஆயுதம் தூக்க எத்தனை பேர் தயாராக இருக்கிறீர்கள் என்று கேட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் பாலச்சந்திரன்.

இராணுவம் வெளியேற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் நாம் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, இராணுவத்தின் நிகழ்வுக்குச் சென்றால் அதை மறைமுக ஆதரவாகவே மக்கள் கருதுவர் என்று உறுப்பினர் பார்த்தீபன் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சர்ச்சை சுமார் 40 நிமிடங்கள் வரை நீடித்தது.

எதிர்காலத்தில் இராணுவத்தின் எந்த நிகழ்வுகளிலும் சபை உறுப்பினர்கள் பங்குகொள்ளக்கூடாது. இராணுவத்தின் எந்த நிகழ்வானாலும், சபையின் ஆளுகைக்குட்பட்ட இடங்களை வழங்கவோ, சபை ரீதியில் எவரும் பங்கு கொள்ளக் கூடாது என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன். அதைச் சபை ஏற்க வேண்டும். அல்லது பகிரங்க வாக்கெடுப்புக்கு விட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் லோகதயாளன் கோரினார்.

அதற்குப் பதிலளித்த சபை முதல்வர் இ.ஆர்னோல்ட், உணர்ச்சிவசப்பட்டு அவசரமாகக் கூறும் விடயத்தை வாக்கெடுப்புக்கு விட இயலாது. உறுப்பினர் விரும்பினால் அடுத்த அமர்வில் முறைப்படி எழுத்தில் சமர்ப்பித்துப் பிரேரணையாக எடுத்துக் கொள்ள முடியும் என்று தெரிவித்தார். (ற-105)

## வனஜீவராசிகள்...

கேள்விக்குறியாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குச் சொந்தமான நிலப் பரப்புக்களை உள்ளடக்கிய அரசிதழ் அறிவித்தல் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. நந்திக் கடல் இயற்கை ஒதுக்கிடம், நாயாறு இயற்கை ஒதுக்கிடம் என்று இரண்டு பிரதேசங்களும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. நந்திக் கடல் இயற்கை ஒதுக்கிடத்துக்காக 10 ஆயிரத்து 234 ஏக்கரும், நாயாறு இயற்கை ஒதுக்கிடத்துக்காக 11 ஆயிரத்து 31 ஏக்கருக்கும் உள்வாங்கப் பட்டுள்ளது.

நந்திக்கடலை நம்பி 5 ஆயிரம் குடும்பங்களும், நாயாற்றை நம்பி 4 ஆயிரம் குடும்பங்களும் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. இரண்டு நீரேரிகளும் நன்னீர் மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்துக்குரிய வையாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நன்னீர் மீன்பிடியில் பிரதான இடம் பிடிப்பது நந்திக் கடல் நீரேரியாகும். இந்த நீரேரியில் சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் வீச்சுத் தொழில் செய்து மீன்பிடியில் ஈடுபடுகின்றன. அத்துடன் இறால் பிடிப்பும் இந்தப் பகுதியிலேயே இடம்பெறுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் பொருளாதாரத்தின் ஆணிவேராக நந்திக்கடல் மீன்பிடியே விளங்குகின்றது.

நாயாற்றுக் கடல் நீரேரியை நம்பி குமுழமுனை, அளம்பில், ஆறுமுகத்தான்குளம், தங்கபுரம், செம்மலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தொழில் செய்து வருகின்றனர். இங்கு தூண்டில் தொழில் பிரதான மாகும். நந்திக் கடல் சிலவேளைகளில் வற்றினாலும் நாயாற்றுக் கடல் ஒருபோதும் வற்றியதில்லை.

நன்னீர் மீன்பிடியின் மூலாதாரமாக விளங்கும் நந்திக்கடல் மற்றும் நாயாறு என்பன வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் செல்வதனால் முல்லைத்தீவு மாவட்டத்தின் பொருளாதாரம் பெரும் பாதிப்புக்குள்ளாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-5)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 22.06.2018 | வெற்றி வாரம் 2317 | வர்ணம் சிவப்பு
மேடம்
வெற்றி இலக்கங்கள் 04 24 38 54
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,253,924/=
2018.06.24ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

நியத ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம் 678 வர்ணம்: நீலம்
திகதி: 2018.06.22
வெற்றி இலக்கங்கள் 06 57 22 12 ஆங்கில எழுத்து U
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 11,353,932/-
தொ.பே: 011 4062002 / 0114062052 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 819
சீட்டிழுப்பு திகதி 2018.06.21 வியாழக்கிழமை
C 08 13 18 38
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 43,047,824/-
தொ.பே: 011 4062002 / 011 4062052 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
நீல நிற டிக்கட்டுகள் 2018.06.23ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

This is with reference to the advertisement appeared on 10.05.2018 calling application for the vacancies for the Academic/Academic Support posts of the Faculty of Medicine at this University. It is hereby notified that the closing date for entertaining applications for the posts in the Faculty of Medicine has been extended upto 06.07.2018.

Applications should reach to the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Thirunelvely Jaffna on or before 06.07.2018. Courier post or scanned email (ujestac@gmail.com) perfected application are entertained.

* Hard copy of the original applications should be sent by post if the documents are emailed.

**Registrar**
**University of Jaffna**
**21.06.2018**

(IN 7102) (14.17)

## உயர்வுடனும் மகிழ்வுடனும் வாழ வாழ்த்துகின்றோம்



### திரு. கார்த்திகேசு திருப்பதி

(S.L.T.S - I) சிரேஷ்ட ஆசிரியர்
(B.A, Dip.in.Edu.M.Phil,)
23.06.2018

இம்மண்ணில் பிறந்து எம்முடன் அன்பாகப் பழகி கல்வி கற்று உயர்பட்டங்கள் பெற்று ஆசிரியப் பணியை மேற்கொண்டு அறுபதாவது அகவை கண்டு ஓய்வுநிலைக்குச் செல்லும் மணிவிழா நாயகன் எதிர்காலத்தில் நோய்நொடியின்றி சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :- மனைவி - சாந்தி, சகோதரர்களின் குடும்பம், கடைாவில் வசிக்கும் மாமா, மாமி, மைத்துனர்மார் குடும்பம், மற்றும் உறவுகள்.

## UNIVERSITY OF JAFFNA SRILANKA

### FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE
### DISTANCE LEARNING UNIT - BBM ONLINE EXTERNAL DEGREE PROGRAMME

University of Jaffna will entertain applications upto 20.07.2018 from suitable qualified persons for the post of Tutor - Mentor (on contract)

**Qualifications:**

(I) A degree from a recognized University in Management Studies or Commerce
(II) Should have good command in English and Tamil
(III) Should have computer application skills in MS Office, Learning Management System, Internet &'e - mail and typing skills in English and Tamil.

Selection : by test & Interview

| Post | Salary |
|---|---|
| Tutor - Mentor (on contract) | Rs. 30,000 /= (fixed) p.m |

Applications should reach to the Deputy Registrar / Academic Establishments, University of Jaffna, Thirunelvely Jaffna on or before 20.07.2018 Courier post or scanned email (ujestac@gmail.com) perfected application are entertained.

* Hard copy of the original applications should be sent by post if the documents are emailed.

Application forms may be obtained from the office of the Deputy Registrar / Academic Establishments, University of Jaffna, either in person or by post, on a payment of Rs. 100/= per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order / Postel order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelope 23x10 c.m.in size.


Application forms will also be available in the University website www. jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the university website should attach a Money Order / Postel Order for Rs 100/= to the application form drawn in favour of the Bursar, University of Jaffna.

Applicants from the University System / Goverment Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected with out intimation. Only short listed applicants will be called for test and Interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA SRILANKA.
22.06.2018

## மரண அறிவித்தல்

தோற்றம்: 15 06 1943



மறைவு: 22 06 2018

## ஆறுமுகம் சச்சிதானந்தபிள்ளை

(முன்னாள் லிகிதர் - பனை அபிவிருத்திச்சபை)

மண்டைதீவில் பிறப்பிடமாகவும் 41, கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கில் வசித்தவரும் தற்போது நியூசிலாந்தில் வசித்து வந்தவருமாகிய ஆறுமுகம் சச்சிதானந்தபிள்ளை நேற்று (22.06.2018) வெள்ளிக்கிழமை நியூசிலாந்தில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வியாளம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான வேலணை வடக்கு, கோபாலபிள்ளை - கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் சாட்சாயினியின் (ஓய்வுநிலை ஆசிரியர்) அன்புக் கணவரும் சாரங்கன் (நியூசிலாந்து), சிந்து (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பைரவி (நியூசிலாந்து), சிவசயந் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சதானந்தசிவம், நித்தியானந்தசிவம் மற்றும் ஏகானந்தசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் முருகதாஸ், பரமானந்தன், குமாரதாஸ் (பிரான்ஸ்), இரத்தினபூபதி, மல்லிகா, மீராதேவி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் சிவகுமார் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகலனும் பத்மா, கேமா, நிர்மலா (பிரான்ஸ்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 222 1458 (இலங்கை)
0064 427 603 8816 (சாரங்கன் - நியூசிலாந்து)
340, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, நல்லூர்.

தகவல்:
ஆ. ஏகானந்தசிவம்
(சகோதரன்)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

**வசந்தசிறி வி.க. தாச்சித் தொடர்**

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சங்கானை இளங்கதிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**துடுப்பாட்டத் தொடர்**

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரின் ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன. இதன்படி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து மூளாய் விக்ரோறிஸ் அணி மோதவுள்ளது. சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்கந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வின்ஸ் அணி மோதவுள்ளது.

**நக்கீரன் ச.ச.நி. கால்பந்தாட்டம்**

நக்கீரன் சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அன்பாலயம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

**வடக்கு – கிழக்கு கால்பந்துத் தொடர்**

வடக்கு கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து வவுனியா வாரியஸ் அணி மோதவுள்ளது. (ம-23)




# நெல்லியடி மத்திய கல்லூரி கிண்ணத்தைத் தனதாக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கபடியில் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து முல்லைத்தீவு பாலிநகர் வித்தியாலய அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 39:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி பெற்றது.

சிறந்த கபடி வீரராக நெல்லியடி மத்திய கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த அன்ரன் ஜெனாட் அஜித் தெரிவு செய்யப்பட்டார். (ம-422)

## சமநிலை!

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வல்வை எவ்.சி. அணியை எதிர்த்து நோதேன் எலைட்ஸ் அணி மோதியது.

ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் வல்வை எவ்.சி. அணியின் கோலைப் பதிவுசெய்தார் துசிகரன். மாற்றங்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 15ஆவது நிமிடத்தில் நொதேண் எலைட்ஸ் அணியின் கோலைப் பதிவு செய்தார் சஞ்சீவன். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்ற தையடுத்து ஆட்டம் சமநிலையானது. (ம-23)

# இளவாலை கன்னியர் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய வடமாகாணப் பாடசாலைக்ளுக்கு இடையிலான 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான கபடியில் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து நெல்லியடி மத்தியகல்லூரி அணி மோதியது. அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி 30:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி பெற்றது.

சிறந்த கபடி வீராங்கனையாக இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த டிலக்சனா தெரிவு செய்யப்பட்டார். (ம-422)




## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்தும் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16, 18, 20 வயதுக்கு உட்பட்டோருக்கான வலைப்பந்தாட்டம் இன்றும், நாளையும், நாளைமறுதினமும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422)

# சித்திவிநாயகர் இந்து வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 23

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் துடுப்பாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தலைமன்னார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி மோதியது.


முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி அணி 126 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. ரிகான் 27 ஓட்டங்களையும், பிரதீஸ் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய தலைமன்னார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 56 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் அருண் 4 இலக்குகளையும், பிரதீஸ், சஞ்சய் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்பிய மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி அணி 7 இலக்குகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக சஞ்சய் 41 ஓட்டங்களையும், ரீகான் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய தலைமன்னார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 2 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நாள் முடிவுக்கு வந்தது. முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமையால் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# அழுகிறது ஆர்ஜென்ரீனா



உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் குரோசியாவிடம் படுதோல்விய டைந்தது ஆர்ஜென்ரீன அணி.

முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிக ளும் கோல் எதுவும் பதிவுசெய்யவில்லை. பலமான அணிகள் என்பதால் சிறந்த போராட் டத்தைவெளிப்படுத்தியிருக்கும். அதனால்தான் கோல் எதுவும் பதிவாகவில்லை என்று எண் ணினால் அது உங்கள் தவறு. ஏட்டிக்குப் போட்டியாக இரண்டு அணிகளும் சொதப்பித் தள்ளின. ஆர்ஜென்ரீனா அணியின் தலை வர் மெஸ்ஸி கூடுதலாக சொதப்பித் தள்ளினார். இரண்டாம்பாதியில் ஆர்ஜென்ரீனா அணியை கதிகலங்க வைத்தது குரோசியா. 53ஆவது நிமிடத்தில் ரெபிக் குரோசியாவின் முதலா வது கோலைப் பதிவுசெய்தார். இந்தக் கோலையடுத்தே ஆர்ஜென்ரீனா ஓரளவு விழித்துக் கொண்டது. அதன் பின்னர் பதிலடி கொடுக்க ஆரஜென்ரீனா அணி பலமுறை முயன்றது. ஆனால் அவற்றில் ஒருமுறையே னும் மெஸ்ஸியால் எதிரிகளின் வியூகங்களை உடைத்து நெருக்கமாக ஊடு ருவ முடியவில்லை. சுருங்கச் சொல்லின் கட்டிப்போட்டதுபோன்று அமைந்திருந்தது மெஸ்ஸியின் ஆட்டம். தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைக் கணிக்கத் திராணி அற்றவர் போன்று மெஸ்ஸி செயற் பட்டார். 80ஆவது நிமிடத்தில் குரோசியாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார் ராகி டிக். ராகிடிக் பதிவுசெய்த கோல் குரோசியா வின் வெற்றியைக் கிட்டத்தட்ட உறுதிப்படுத் தியது.

மனச் சோர்வடைந்த நிலையில் ஆர்ஜென்ரீ னாவின் போராட்டம் தொடர்ந்தது. பல தரு ணங்களில் மெஸ்ஸி இங்கும் அங்குமாக நடந்தே திரிந்தார். எவ்விதமான துடிப்பும் அவரிடத்தில் இருக்கவில்லை. 90ஆவது நிமிடத்தில் நட்சத்திர வீரர் ராகிடிக் மற்று மொரு கோலைப் பதிவுசெய்ய 3:0 என்ற கோல் கணக்கில் வரலாறு படைத்தது குரோ சியா.

கடந்த 44 ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடர்களில் ஆர்ஜென்ரீனா அணி முதல் இரண்டு ஆட்டங்களிலும் தோல் வியடைந்து தொடரை ஆரம்பித்துள்ள மோச மான பதிவு இம்முறை இடம்பெற்றுள்ளது. ஆர்ஜென்ரீனா அணியை வீழ்த்தியதை அடுத்து 16 அணிகள் விளையாடும் சுற்றுக்கு குரோசியா தகுதி பெற்றது. அதேநேரம் தொட ரில் இருந்து வெளியேறக்கூடிய பேராபத் தான நிலையில் ஆர்ஜென்ரீனா உள்ளது. ஆர்ஜென்ரீனாவுக்கு இன்னும் ஓர் ஆட்டம் எஞ்சியுள்ளது. நைஜீரியாவை தனது இறுதி லீக் ஆட்டத்தில் எதிர்க்கிறது ஆர்ஜென்ரீனா. அது அபாயமான அணியாகும். (ம)




## பெண்கள் போன்று அழுத ஆர்ஜென்ரீனாவின் வீரர்கள்

### வர்சாலிகோ கிண்டல்

ஆர்ஜென்ரீன அணியின் வீரர்கள் பெண் கள் போன்று அழுதனர் என்று சீண்டி னார் குரோசியாவின் நட்சத்திர வீரர் வர்சாலிகோ.

குரோசிய ஊடகமொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆர்ஜென்ரீனா ஆதிக்கம் செலுத்தியது என்று அந்த அணியின் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார். அவர் இந்த ஆட்டத் தைத்தான் பார்த்தாரா அல்லது வேறு ஆட்டங்களைப் பார்த்தாரா. ஆர்ஜென்ரீ னாவை விடவும் நாங்கள் வலுவுடனும் உறுதியுடனும் விளையாடினோம். ஆட் டம் முடிந்த பின்னர் ஆர்ஜென்ரீன வீரர் கள் தரையில் விழுந்து பெண்களைப் போன்று அழுதனர். அதை நான் பார்த் தேன். 16 அணிகள் பற்றுபற்றும் சுற்றுக் குள் செல்ல வேண்டுமாயின் ஆர்ஜென் ரீன அணி அடுத்த ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும். நைஜீரியாவை அவர் கள் வீழ்த்த வேண்டும். நடக்குமா?' என்று வர்சாலிகோ மேலும் தெரிவித் தார். (ம)

## வடமாகாண கபடித் தொடர்: சாவகச்சேரி இந்து சம்பியன்

யாழ்ப்பாணம், ஜீன் 23

வடமாகாணக் கல்வி திணைக்களம் நடத்திய 17 வயதுக்குட்பட்ட கபடித் தொடரில் ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி சம்பியனானது.

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி மைதா னத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட் டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி மோதியது. இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 33:28 என்ற புள்ளிக ளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச்சுவீகரித்தது. மூன்றாமிடத்தை கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலய அணி பெற்றது.

(ம-422)












# இறுதி நிமிடங்களில் பதிவான கோல்களால் கொஸ்டாரிக்காவைப் புரட்டியது பிரேசில்

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் இறுதி நிமிடங்களில் பதிவுசெய்த அபாரமான கோல்களின் உதவியுடன் கொஸ்டாரிக்காவைப் புரட்டியது பிரேசில்.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. 19ஆவது நிமிடத்தில் கிடைத்த அருமையான வாய்ப்பைப் பயன்படுத்தத் தவறினார் பிரேசில் அணியின் நட்சத்திர வீரர் மார்செலோ. நெய்மரின் மீதே கொஸ்டாரிக்கா அணியின் முழுக் கவனமும் இருந்தது. சுவிற்சர்லாந்துக்கு எதிராக இறுதியாக நடைபெற்ற ஆட்டத்தின்போது பிரேசில் அணி வெற்றிபெற முடியாமல் ஆட்டத்தைச் சமநிலையில் முடித்தமைக்குக் காரணம் நெய்மார் சுவிற்சர்லாந்து வீரர்கள் மூவரின் தனிக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டமையே. அது போன்றதொரு நிலை நேற்றைய ஆட்டத்திலும் எதிரொலித்தது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின்போது நெய்மர் ஒருசில தடவைகள் எதிரணியினரின் வியூகங்களைக் குழப்பி ஊடுருவினாலும் அவர் பொக்ஸ் பகுதிக்குள் வைத்து கட்டுப்படுத்தப்பட்டார். கொஸ்டாரிக்கா அணியின் வீரர்களும் சில வாய்ப்புக்களைமேற்கொண்டிருந்தனர். கோல்கள் இல்லாமலேயே முதல் 90 நிமிடங்களும் ஓடி மறைந்தன.

91ஆவது நிமிடத்தில் பிரேசிலின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் கவுட்டினோ. கொஸ்டா ரிக்காவுக்குப் பேரிடியாக இந்தக் கோல் அமைந்தது. மேலதிகமாக வழங்கப்பட்ட நிமிடங்களில் அதாவது ஆட்டத்தின் 97ஆவது நிமிடத்தில் பிரேசிலின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார் நெய்மர். இந்தக் கோலே நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் நெய்மரின் முதலாவது கோலாக அமைந்தது. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பிரேசில்.

ஆட்டம் முடிந்த பின்னர் நெய்மர் அதிகம் உணர்ச்சிவசப்பட்டவராக இருந்தார். மைதானத்தில் வீழ்ந்தபடி அவர் விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தார். சக வீரர்களாக மார்செலோ, கவுட்டினோ, காஸ்மிரோ அவரைச் சமாதானம் செய்து அழைத்துச் சென்றனர். (ம)









## வேலையாள்கள் தேவை

செனறு எண்டப்பிறைசஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளுக்கு பணவசூலிப் பாளர்கள் - யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி கிளை (மோட்டார் சைக்கிள் உள்ளவர்கள் மட்டும்)

அலுவலக பணியாளர்கள் (பெண்கள் - யாழ்ப்பாணக் கிளை) திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி |
|---|---|
| 075 344 4111 | 075 366 6111 |
| 011 433 5463 | 075 366 6230 |
| | 077 721 8055 |

(ACH 398)(04.17)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

✆0768226240

V2 TRAVELS

## வருடாந்த பொங்கல் விழா

விடத்தல் விநாயகர் ஆலயம் காவாக்குளம்

வைரவர் ஆலயம் 25.06.2018, 26.06.2018

மேற்படி விடயம் தொடர்பாக

வருடாந்த பொங்கல் விழா

எதிர்வரும் 25.06.2018 திங்கட்கிழமை

26.06.2018 செவ்வாய்க்கிழமை

ஆகிய தினங்களில் நடைபெற உள்ளதால் அனைத்து பக்த அடியார்களும் ஆலயத்திற்கு வருகை தந்து இறை அருளினைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

25.06.2018 - தம்பிராய் பூநகரி - விடத்தல்
26.06.2018 - தம்பிராய் பூநகரி - காவக்குளம்

து.இரத்தினசிங்கம்
தலைவர்,
077 246 3027

சி.கிருபாகரன்
செயலாளர்,
077 465 9877

(AKN.9274)(13.17)

## தேவை

யாழ்நகரில் 542, கே.கே.எஸ். வீதியில்
உள்ள பிரபல Hotel ஒன்றில் பணிபுரியும்
பணியாளர்கள் தங்கி நிற்பதற்கு
சகல வசதிகளுடனான
வீடு ஒன்று தேவை
அத்துடன் இவ்விடத்திலிருந்து 1km தூர எல்லையில்
அமைந்திருப்பது விரும்பத்தக்கது.

021 222 1355/ 021 373 4116

(ea. 145384) (13.17)


# டினேஸ் சந்திமல் மீதான விசாரணை தொடர்கிறது

## நான்கு ஆட்டங்களில் தடைபெற வாய்ப்பு

இலங்கை அணியின் தலைவர் டினேஸ் சந்திமல் மீதான பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் விசாரணைகள் தொடர்ந்து வருகின்றன. இலங்கை அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டத்தின்போது பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்தினார் என்கிற குற்றச்சாட்டு இலங்கை அணியின் தலைவர் சந்திமல் மீது முன்வைக்கப்பட்டது. அவரும் அதை ஏற்றுக்கொண்டார். இதையடுத்து சந்திமலுக்கு ஓர் ஆட்டத்தில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.

எனினும் இந்த விவகாரத்தில் பன்னாட்டுக் கிரிக்கெட் சபை தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகிறது. குறித்த ஆட்டத்தின்போது நடுவர்கள் இலங்கை அணியினர் பந்தை சேதப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தபோது அதை ஏற்றுக்கொள்ள மறுத்த இலங்கை அணியினர் சுமார் இரண்டு மணி நேரம் களமிறங்கவில்லை. இது மிகப்பெரிய குற்றமாகும். இதற்காக சந்திமலுக்கு நான்கு டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்படலாம். அல்லது 8 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்படலாம். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.